# அன்பே அன்பே...





இன்பா அலோசியஸ்


அன்பே
அன்பே...
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# அன்பே அன்பே...

# Anbe Anbe...

Author:

## இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

## பொருளடக்கம்


பகுதி - 1

பகுதி - 2

பகுதி - 3

பகுதி - 4

பகுதி - 5

பகுதி - 6

பகுதி - 7

பகுதி - 8

பகுதி - 9

பகுதி - 10

பகுதி - 11

பகுதி - 12

பகுதி - 13

பகுதி - 14

பகுதி - 15

பகுதி - 16

பகுதி - 17

# பகுதி - 1

தன் தோள் சாய்ந்து அழும் காதலியை தேற்ற வழி தெரியாமல் விழி பிதுங்கிப் போயிருந்தான் செல்வம். எவ்வளவு நேரம்தான் அவளோடு இருக்க முடியும்? மறுநாள் காலையிலேயே விமானத்தை பிடிக்க வேண்டியிருக்க, தன்னை விட்டு விலக மறுக்கும் அவளை உதறிச் செல்லவும் முடியவில்லை.

வீட்டில் இருந்து விடாமல் அழைப்பு வந்தவண்ணம் இருந்தது. அதையும் எடுக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. பல்லவியின் அழுகை வேறு குறையாமல் இருக்க, அவளை தோள் சாய்த்தவாறு அசையாமல் நின்றிருந்தான்.

“பல்லவி, போதும்..., இன்னும் எவ்வளவு நேரம் இப்படியே அழுதுட்டு இருப்ப? நான் என்ன உன்னை விட்டு ஒரேயடியாகவா போகப் போகிறேன்? வேலைக்கு தானே போகிறேன். இரண்டே வருடம், அதன் பிறகு உன்னைத் தேடி ஓடி வந்துவிடுவேன்...” அவன் உரைக்கும் வார்த்தைகள் செவியில் விழுந்தாலும், அவள் மனதைத் தீண்டவில்லை.

அவனுக்கு வெகு சாதாரணமாகத் தெரியும் இரண்டு வருடங்கள், ஒரு பெண்ணான அவளுக்கு நீண்ட நெடிய இருபத்திநாலு மாதங்களாகத் தெரிந்தால் அவளும் என்னதான் செய்வாள்?

அவள் நிலையில் மாற்றம் இல்லாமல் போகவே, “பல்லவி...” அழுத்தி அழைத்தான்.

“உங்களுக்கென்ன., ரெண்டு வருஷம்னு ரொம்ப ஈஸியா சொல்லிடுவீங்க, வீட்டில் சம்மாளிக்க வேண்டியது நான்தானே...” மூக்கை உறிஞ்சினாள்.

“நீயே புரிஞ்சுக்கலன்னா நான் என்ன செய்வேன் பல்லவி? நான் என்ன எனக்காகவா போகிறேன்? நமக்காகத்தானே போகிறேன். கைநிறைய காசு, நமக்குன்னு சொந்தமா ஒரு வீடு..., அவ்வளவுதான்..., அதன் பிறகு எங்கேயும் போகாமல், உன் கூடவே இருப்பேன்” அவளை எப்படியாவது சம்மதிக்க வைத்துவிடும் வேகம் அவனிடம்.

“நீங்க சொல்றது எனக்குப் புரியுது..., ஆனா, நீங்கதான் என் நிலைமையை புரிஞ்சுக்காமல் பேசறீங்க? ஆம்பளை நீங்க, உங்களுக்கு ரெண்டு வருஷம் பெருசா தெரியாது, ஆனா பொண்ணு நான், ரெண்டு வருஷம் எப்படி சம்மாளிப்பேன்?

“இப்போவே எனக்கு மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சுட்டாங்க. அதை தடுக்க வேண்டும் என்றாலே, நம்ம விஷயத்தை வீட்டில் சொல்லியாகணும். நீங்கதான் வேண்டாம்னு சொல்றீங்க. என் வீட்டில் என் விருப்பத்துக்கு மறுப்பே சொல்ல மாட்டாங்க. ஜஸ்ட், நாம விருப்பத்தில் இருக்கிறோம் என்பதை மட்டுமாவது சொல்லி விடுவோமே?” கடந்த இரு மாதங்களாக அவனிடம் பேசி தோற்றுப்போன அதே விஷயம். மீண்டுமாக பேசினாள்.

எப்படியாவது அவனை சம்மதிக்க வைத்துவிட மாட்டோமா? அவள் மனம் ஏங்கியது.

“எப்படி உங்க வீட்டில் பேசச் சொல்ற? உங்க அப்பா பெரிய ஜவுளிக்கடை முதலாளி, நான்..., ஒரு சாதாரண கொத்தனார் மகன். கையில் சொந்தமா ஐந்து ரூபா கிடையாது, ஒரு வீடு கிடையாது..., அப்படி இருக்கும்போது எந்த முகத்தோடு அவங்க முன்னாடி வந்து நின்று உன்னை பெண் கேட்பேன்?” அவனும் இத்தனை நாள் பேசிய அதே பதிலையே இப்பொழுதும் சொல்ல, சோர்ந்து போனாள்.

“என்னைப் பெத்தவங்க அதையெல்லாம் பாக்க மாட்டாங்கன்னு நான்தான் சொல்றேனே...” அவள் கெஞ்ச,

“நீ சொல்லலாம்..., ஆனா எனக்குன்னு ஒரு மதிப்பு வேண்டாமா? என்னால் வெறும் பையனாக வந்து உன்

வீட்டு ஆட்கள் முன்னால் நிற்க முடியாது” குரல் இறுக அவன் உரைக்க, பாறாங்கல்லில் மோதும் உணர்வு.

“அப்போ இதுக்கு என்னதான் முடிவு?” அவள்தான் இறங்கிப் போக வேண்டி இருந்தது.

“இரண்டு வருஷம் எனக்காக பொறுத்துக்கோ..., பெக்ரினில் எனக்கு மாதம் இரண்டு லட்சம் சம்பளம். முடிந்த அளவுக்கு என் செலவுகளைக் குறைத்துக் கொண்டு, அடுத்த மாதமே எங்கள் இடத்தில் வீடு கட்ட ஆரம்பித்து விடுவேன்.

“இரண்டு வருடத்தில் வீட்டு வேலை முழுதாக முடிந்துவிடும். அப்போ, உங்க அப்பா முன்னாடி வந்து நின்னு, தைரியமா உன்னை பெண் கேட்பேன்” ஒரு ஆண்மகனான அவனுக்கு அவனது மதிப்பு, மரியாதை, கௌரவம் பெரிதாகத் தெரிந்ததில் வியப்பேதும் இல்லைதான்.

அவள் முகம் அப்பொழுதும் தெளியாமல் இருப்பதைப் பார்த்தவன், “உனக்குதான் மும்பைல ஜாப் கிடைச்சிருக்கே, பேசாமல் அங்கே போய்டு” அவன் என்னவோ சுலபமாக சொல்லிவிட்டான். ஆனால், பெண்ணான அவளை அவ்வளவு தூரம் தனியாக எப்படி அனுப்புவார்கள் என்பதை அவன் சிந்திக்க மறுத்தான்.

பல்லவியின் வீட்டில் பணத்துக்கு அவசியமோ, தேவையோ இருந்திருந்தால் எப்படியோ, ஆனால், பார்ன் வித் சில்வர் ஸ்பூன் என்பார்களே, அப்படியான வீட்டில் பிறந்தவள் அவள். அப்படியிருக்கையில், வேலைக்கு என்று அவளை எப்படி அனுப்புவார்கள்?

“என்னை அவ்வளவு தூரம் தனியாக எல்லாம் அனுப்ப மாட்டாங்க செல்வம்” என்னைப் புரிந்துகொள்ளேன்..., என்னும் விதத்தில் கெஞ்சினாள்.

“எல்லாத்துக்கும் இப்படியே சொன்னால் நான் என்னதான் செய்யட்டும்? என்னால் ரெண்டு வருஷத்துக்கு

கல்யாணத்தைப் பத்தி யோசிக்கக் கூட முடியாது அவ்வளவுதான்” அவன் குரலில் காரம் ஏற, சட்டென இறங்கிப் போனாள்.

“சரி, நீ கோபப்படாதே..., நான் எப்படியாவது சம்மாளிக்கறேன்” அவள் குரல் நைந்து போனது.

“இதைத்தான் நான் அப்போ இருந்து சொல்லிட்டு இருக்கேன். கேக்காமல் இவ்வளவு நேரம் ஆர்கியூ பண்ணிட்டு, சரி விடு..., நான் வீட்டுக்கு கிளம்பறேன். எங்க அக்கா, தங்கை எல்லாரும் வீட்டுக்கு வந்திருக்காங்க, அவங்களோட கொஞ்ச நேரம் இருக்கணும்” அவளை விலக்கிவிட்டு, தன் வண்டிக்கு அருகில் சென்றான்.

“என்னை வீட்டு கிட்டேயாவது ட்ராப் பண்ணுவியா? இல்ல, ஆட்டோ புடிச்சு போய்க்கவா?” அவனது பதில் என்னவாக இருக்கும் என்பதை தெரிந்தவளாகவே அந்த கேள்வியைக் கேட்டாள்.

“பல்லவி, கிளம்புற நேரத்தில் எந்த சிக்கலிலும் நான் சிக்கிக்க தயாரா இல்லை. சோ..., நீ ஆட்டோ புடிச்சே போ...” வண்டியில் ஏறி அமர்ந்து காலால் உதைத்து அதை கிளப்பினான்.

‘அப்படியென்ன சிக்கல் வரும்? அப்படியே வந்தாலும் அதுவும் நல்லதுக்குத் தானே...’ எண்ணியதை அவளால் வெளியே சொல்ல முடியவில்லை.

வெளிநாடு செல்லும் அவனை கோபப்படுத்தி பார்க்க அவளுக்கு விருப்பம் இருக்கவில்லை, எனவே அமைதியாகவே நின்றாள்.

“அப்போ நான் கிளம்பறேன்...” அவன் ஆக்சிலேட்டரை முறுக்க முயல,

“நாளைக்கு நான் ஏர்போட்டாவது வரலாமா?” அவள் மெதுவாக கேட்க,

“வேண்டாம்...” ஒற்றை வார்த்தையில் முடித்தவன், வண்டியை கிளப்பிக்கொண்டு சென்றே விட்டான். அவன் முதுகையே வெறித்தவளது கண்களில் ஒற்றைத்துளி கண்ணீர் உருண்டு கன்னத்தில் வழிந்தது.

அவனைக் காதலிக்கத் துவங்கிய இந்த நான்கு வருடங்களில், முதல் முறையாக தன் காதல் கை கூடுமா என்ற பயம் அவளுக்கு எழுந்தது. காதலிக்கும் பொழுதே, வீட்டில் காதலைச் சொல்லிவிட தவித்த அவளை தடுத்தவன் அவன்தான்.

அப்பொழுது அவன் சொன்ன காரணம் சரியாக இருந்தது. இப்பொழுதும் அவன் சொல்லும் காரணம் நியாயமாகத்தான் இருந்தது. ஆனாலும், ‘நான் மட்டுமாவது சொல்லிவிடட்டுமா?’ என்ற அவளது கேள்விக்கு, பிடிவாதமான அவனது மறுப்புதான் பெரும் பயத்தை அளித்தது.

எப்பொழுது தன் படிப்பு முடியும்? உடனடியாக மாப்பிள்ளை பார்க்க தயாராக இருக்கும் பெற்றவர்களிடம் என்ன சொல்லி அவள் சம்மாளிப்பாள்? மனதைக் கவ்விய பயத்தோடு வீட்டுக்குச் செல்ல ஆட்டோ பிடித்தாள்.

# பகுதி - 2

காலையில் எழுந்து உடற்பயிற்சியை முடித்த பிரஷாந்த், வியர்வை வழியும் தேகம் சற்று உலர, செய்தித்தாளை படிக்கத் துவங்கினான். பிரஷாந்த், பிஈ, எம்பிஏ பட்டதாரி. ஆறடி உயரம், அலையலையான கேசம், கூர்மையான நாசி, அழுத்தமான இதழ்கள், அடர்த்தியான மீசை.

மாநிறம்..., இருபத்தேழு வயது ஆண்மகன். நுனிநாக்கு ஆங்கிலம், மேல்தட்டு உடல்மொழி, சொந்தமாக பிஸினஸ் செய்கிறான். தந்தையின் காண்ட்ராக்ட் வேலையை அவனாலும் தொடர முடியும் என்றாலும், தன் திறமையால் முன்னேறத் துடிப்பவன்.

அவனது தம்பி ரவி, தந்தைக்குத் துணையாக அவரோடு தொழிலில் ஈடுபடுகிறான். பிரஷாந்தை விட ஒரு வயது இளையவன்.

பிரஷாந்துக்கு டீ எடுத்து வந்த அவனது தாய் பத்மாவதி, அவன் கையில் அதை கொடுக்க முயல, செய்தித்தாளில் கவனமாக இருந்தவன், அவரை கவனிக்கவில்லை. எனவே, அவனுக்கு முன்பு இருந்த டீபாயில் டீயை வைத்தவர், “பிரஷாந்த்..., நான் உனக்கு கல்யாணத்துக்கு பொண்ணு பாக்கட்டுமா?” அவர் கேட்க, அவனோ கண்டுகொள்ளவே இல்லை.

“ப்ரஷாந்த்..., நான் கேக்குறது காதில் விழுதா இல்லையா? உனக்கு வயசு ஏறுதா இல்லை இறங்குதா? உன் தம்பிக்கும் கல்யாண வயசு வந்தாச்சு. நீ இப்படியே இருப்பதால் அவனுக்கும் பாக்க முடியலை...” தாய் பத்மாவதி கேட்டுக் கொண்டே இருக்க, அமைதியையே அவருக்கு பதிலாக்கினான்.

“பதில் சொல்லாமல் அந்த நியூஸ் பேப்பருக்குள்ளே என்ன தேடிட்டு இருக்க?” கேட்டவர், பட்டென பேப்பரை பறித்து கீழே போட்டார்.

“அம்மா…” கண்டனமாக குரல் கொடுத்தவன், சற்று கோபமாகவே அவரை ஏறிட்டான்.

“என்னடா அம்மா, இவ்வளவு நேரமா கரடியா கத்திகிட்டு இருக்கேன், கண்டுக்காமல் இருந்துட்டு, இப்போ அம்மாவா?” அவரும் கோபமாகவே அவனை முறைத்தார்.

“அம்மா, ரவிக்கு பாக்குறதா இருந்தால் தாராளமா பாருங்க. அதுக்கு ஏன் என்னை இழுக்கறீங்க? இருபத்தேழு வயசு ஒரு வயசா? இதில் என்னை விட ஒரு வயசு சின்னவன், அவனுக்கு கல்யாண வயசு வந்துடுச்சாம். காமெடி பண்றதுக்கு ஒரு அளவில்ல…, போங்கம்மா…” அவர் பிடுங்கி கீழே போட்ட செய்தித்தாளை கைகளில் எடுத்துக் கொண்டான்.

“அப்போ உனக்கு பொண்ணு பாக்க வேண்டாம் அதானே…” அவர் கேட்க,

“ஆமா…, ஆமா…” அசால்ட்டாக உரைத்தவன், மீண்டுமாக பார்வையை செய்தித்தாளில் மேய விட்டான்.

“பல்லவிக்கு மாப்பிள்ளை பாக்கணும்னு அண்ணா சொல்லிட்டு இருந்தார். நீயும் கல்யாணம் வேண்டாம்னு சொல்ற…, அப்போ எனக்கென்ன போச்சு. நான் பேசாமல் இருக்கேன்…” முந்தானையை உதறி இடுப்பில் செருகியவர் திரும்பி நடந்தார்.

ஒரு நொடி அவர் சொல்வதை கண்டுகொள்ளாமல் இருந்தவன், அவர் இறுதியாகச் சொன்னது காதில் விழ, செய்தித்தாளை விசிறிவிட்டு, அவர் பின்னால் கிட்டத்தட்ட ஓடினான்.

“அம்மா, என்ன சொன்னீங்க?” அவர் முன்னால் சென்று நின்றான்.

“நான் ஒண்ணுமே சொல்லலையே. நீ போய் நியூஸ் பேப்பர் பார். இல்லன்னா அது கதறி அழப்போகுது…” அவனை ஒரு

கையால் விலக்கியவர் கிச்சனுக்குள் நுழைந்தார்.

“அம்மா, இப்போ சொன்னீங்களே…, பல்லவின்னு…” அவன் இழுக்க,

“அப்படியா? நான் எதுவுமே சொல்லலையே…” காய்கறிகளை எடுத்து வைத்து கழுவ, அதை அவர் கையில் இருந்து வாங்கியவன், தானே கழுவத் துவங்கினான்.

“அம்மா, பல்லவிக்கு மாமா மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சுட்டாரா? உங்களுக்கு நல்லா தெரியுமா?” தன் ஆர்வத்தை அடக்க முடியாமல் அவரிடம் மீண்டுமாக கேட்டான்.

பத்மாவதியோ அவனைக் கண்டுகொள்ளாமல், இட்லி ஊற்றுவதில் முனைய, “அம்மா, உங்க புள்ளைக்கு கல்யாணம் பண்ணிப் பாக்கணும்னு உங்களுக்கு ஆசையே இல்லையா?” அவர் தோளைப் பிடித்து தன் பக்கம் திருப்ப, அவனை போலியாக முறைத்துக் கொண்டிருந்தார்.

“என் செல்ல அம்மால்ல…” அவன் கொஞ்ச,

“இல்ல…” கத்தரித்தாற்போல் அவர் உரைக்க, முகத்தை பாவமாக மாற்றிக் கொண்டான்.

“பிளீஸ்ம்மா, சொல்லுங்க. சுவாமி மாமா பல்லவிக்கு மாப்பிள்ளை பாக்கறாங்களா? உங்ககிட்டே சொன்னாங்களா?” அவன் குரல் எதிர்பார்ப்பில் தத்தளித்தது.

“ஏண்டா, அவமேலே இவ்வளவு ஆசை வச்சிருக்க, முன்னாடியே சொல்லியிருந்தால் இந்நேரம் கல்யாணமே முடிச்சு வச்சிருப்பேன். இப்போ கூட நானே கண்டு பிடிச்சதால் ஆச்சு. இல்லன்னா இப்ப கூட சொல்லியிருக்க மாட்டல்ல.

“நம்ம குடும்பத்தில் காதலுக்கு யாராவது தடை சொல்லியிருக்காங்களா என்ன? ஏண்டா என்கிட்டே மறைச்ச?” அவர் குரலில் கவலை.

“மறைக்கணும்னு எல்லாம் எதுவும் இல்லம்மா. பல்லவி படிப்பை முடிச்சதும், நானே அவகிட்டே என் காதலை சொல்லணும்னு நினைத்தேன் அதான்…” அவன் முகத்தில் சிறு வெட்கம் உதையமாக, அவன் கன்னம் வழித்தார்.

“உங்க அப்பாகிட்டே சொன்னேன்னு வச்சுக்கோ, அடுத்த நிமிஷம் மனுஷன் அங்கே போய் நிப்பார்…” அவர் சொல்ல,

“ஹையோ அம்மா…, அப்படி எதையும் பண்ணிடாதீங்க. நான் என் விருப்பத்தை சொல்லாததுக்குக் காரணமே அப்பாதான். பல்லவியோட படிப்பு முடியணும்னு சொன்னால் எல்லாம் அவர் கேட்டுக்கவே மாட்டார். நம்ம வீட்டுக்கு வந்து படிக்கட்டும்னு, உடனே தட்டை தூக்கிட்டு போய் நின்னுடுவார்.

“சுவாமி மாமா என்ன நினைக்கிறாங்க, எப்படி மாப்பிள்ளை தேடறாங்கன்னு எதுவும் தெரியாமல், திடுதிப்புன்னு அவர் முன்னால் போய் நின்னால் எல்லாம் கெட்டு போய்டும்” பதறினான்.

“அப்படி போய் நின்னாலும் என்னடா தப்பு? நாம என்ன ஒண்ணும் இல்லாதவங்களா? உங்க அப்பா கவர்மெண்ட் காண்ட்ராக்டர்…, நீ இப்போ சொந்தமா கோல்ட் ஸ்டோரேஜ், பெசிலிடேட்டர்…, இன்னும் என்ன என்னவோ பிஸினஸ் பண்ற.

“பணம் இங்கேயும் கொட்டிக் கிடக்குது. பணத்தை மூட்டையில் கட்டி பரண்மேல் தூக்கி போட்டு வச்சிருக்கார்…, அப்படி இருக்கும்போது எதுக்கு தயங்கணும்? அதுவும் நீ அவளை விரும்புறன்னு தெரிந்தால் போதும், அடுத்த நிமிஷமே என் அண்ணனே இங்கே வந்து நிப்பான்…” படபடவென பொரிந்தார்.

“அம்மா, எல்லாம் எனக்குப் புரியுது. பல்லவி மனசில் என்ன இருக்குன்னு தெரிஞ்சுட்டு உங்ககிட்டே சொல்றேன், பிறகு போங்க சரியா?” அவர் கன்னம் பிடித்து கொஞ்சினான்.

“ஏண்டா இத்தனை நாள் அவகிட்டே பேசாமல் என்ன பண்ணிட்டு இருக்க? முதல்ல அவகிட்டே பேசு. உன்னால் முடியலன்னா சொல்லு, பெரியவங்க நாங்க பாத்துக்கறோம்...” அவர் உரைக்க,

“அம்மா, எனக்கு ஒரு பத்து நாள் டைம் கொடுங்க, உங்களுக்கு சொல்லுறேன். தேங்க்ஸ்ம்மா...” உரைத்தவன், அவர் தோளோடு அணைத்து விடுவித்தான்.

கூடவே, “என்னை மடக்க, ரவிக்கு மாப்பிள்ளை வேஷம் போடப் பாத்தீங்க பாருங்க..., அங்கே நிக்கறீங்க நீங்க...” மெல்லியதாக சிரிக்க,

“இந்த மௌனசாமியார் வாயைத் திறக்க வைக்க அப்போ கூட முடியலை பார். பல்லவி பேரை கேட்ட பிறகுதானே வாயைத் தொறந்த” அவனை மடக்கினார்.

“உங்களுக்கு எப்படிம்மா தெரியும்?” தன் மனதுக்குள் பொத்திவைத்த ரகசியத்தை எப்படி கண்டுகொண்டார் என அவனுக்கு அறிந்தே ஆகவேண்டும்.

“ம்..., எனக்கு வியாதி வந்தா கூட பல்வலிதான் வரணும்னு உன் தம்பிகிட்டே புலம்பிட்டு இருந்தியே..., அப்போ கண்டு பிடிச்சதுதான்” அவர் அசால்ட்டாக உரைக்க, வியந்துபோய் நின்றுவிட்டான்.

கூடவே வாய்விட்டு சிரிக்க, அவனது சிரிப்பில் தானும் இணைந்து கொண்டார்.

“ரொம்ப நாள் எடுக்காதடா..., சீக்கிரமே பேசிடு..., எதுக்கும் அண்ணாகிட்டே விஷயத்தை லேசா போட்டு வைக்கறேன். அவரும் ரொம்ப சந்தோஷப் படுவார். ஒண்ணுவிட்ட தங்கை என்றாலும், என்னை சொந்த தங்கை மாதிரிதான்

அண்ணா பாத்துப்பார். அதனால், நான் கேட்டா நிச்சயம் ஒத்துப்பார்.

“அதைவிட, நீ அவளை மனசுக்குள்ளே நினைக்கறன்னு தெரிஞ்சால் மறு பேச்சே பேச மாட்டார். அடுத்த நல்ல முகூர்த்த நாள் எதுன்னு பாப்பார்” பத்மாவதி நம்பிக்கையாய் உரைக்க, அப்பொழுதே தன் காதல் நிறைவேறிவிட்ட சந்தோசம் அவனிடம்.

கூடவே, தன் காதலை பல்லவி ஏற்றுகொள்ள வேண்டுமே என தவிப்பாகவும் இருந்தது. பல்லவி வீட்டுக்கும், அவனது வீட்டுக்கும் ஜஸ்ட் இரண்டு தெரு வித்தியாசம்தான். அவன், அவனது தம்பி, பல்லவி அனைவரும் படித்தது ஒரே பள்ளியில்தான்.

பள்ளிப்படிப்பை முடித்து, பிஈ முடிக்கும் வரைக்கும் பள்ளவியின்மேல் பெரிதாக ஈர்ப்பு இருந்தது இல்லை. ஆனால், அவள் பெரியவளாகி, கிட்டத்தட்ட ஒரு மாதங்கள் அவளை கண்ணிலேயே காணவில்லை என்னும்பொழுது, அவனது கண்கள் அவளைக் காண ஏங்கியது.

அந்த நேரம் மெல்லியதாக அவனுக்குள் எழுந்த மாற்றம், அவள் கல்லூரி செல்ல அடியெடுத்து வைத்த பொழுது காதலாக உரு மாறியது. பல்லவிக்கு பிரஷாந்த் என்றால் எப்பொழுதும் ஸ்பெஷல் தான். அவளுக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லாத காரணத்தால், அவள் எண்ணங்கள், விருப்பு, வெறுப்பு என அனைத்தயும் முதலில் அவள் பகிர்ந்து கொள்வது அவனிடம்தான்.

அவள் பேச்சில் கொஞ்சமாவது சிறு மாறுபாடை உணர்ந்திருந்தால், எப்பொழுதோ தன் காதலைச் சொல்லியிருப்பான். திடுமென அவளிடம் தன் காதலைச் சொல்லவும் தயக்கமாக இருந்தது. ஆனால், இதற்குமேல் தயங்கினால் வேலைக்கு ஆகாது என்பதும் புரிய, அவளிடம் தன் காதலைச் சொல்ல முடிவெடுத்தான்.

# பகுதி - 3

தன் அறைக்குள் முடங்கிக் கிடந்தாள் பல்லவி. செல்வம் வெளிநாடு சென்று இன்றோடு மூன்று மாதங்கள் முடிந்துவிட்டது. வெளிநாடு சென்றவுடன் தன் அலைபேசி எண்ணை கொடுப்பதாகச் சொன்னவன் இன்றுவரைக்கும் செய்யவில்லை.

ஒவ்வொருநாளும் விடிகையில் எதிர்பார்ப்போடு அது துவங்குவதும், ஏமாற்றத்தில் அது முடிவதையும் எண்ணி வெதும்பிப் போனாள். செல்வத்தின் வீடு அவளுக்கு நன்றாகத் தெரியும். அவனது நண்பர்கள் அவளுக்கும் நண்பர்கள் தானே, அவர்களைத் தொடர்பு கொண்டு, செல்வத்தைப் பற்றி ஏதாவது தெரியுமா என விசாரித்துவிட்டாள்.

ஆனால், பலன் என்னவோ பூஜ்யம்தான். அனைவரும் ஒன்றாக சொன்ன ஒரே பதில், அவன் வெளிநாடு சென்ற பிறகு எங்களை தொடர்பு கொள்ளவில்லை என்பதே. நாட்கள் செல்லச் செல்ல, மனம் பயத்தில் நடுங்கத் துவங்கி விட்டது.

‘செல்வம், ஏன் இப்படி பண்ற? ஒரு முறையாவது என்னிடம் பேசிவிடு’ மானசீகமாக அவனிடம் மன்றாடுவதைத் தவிர அவளுக்கும் வேறு வழி இருக்கவில்லை.

அவளது தந்தையிடம் சொன்னால், செல்வத்தைப் பற்றி ஒரு நிமிடத்தில் விசாரித்து சொல்லிவிடுவார். ஆனால், தன்னைப் பற்றி எதுவும் வீட்டில் சொல்லிவிடாதே என அவனே சொல்கையில், செல்வத்தின் வார்த்தையை மீறி அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

படிப்பு முடிந்த அடுத்த மாதமே, அவளுக்கு வரன் பார்க்கட்டுமா என கேட்ட தந்தையிடம், ‘ஆறுமாதம் அவரோடு இருக்கிறேன்’ என அவள் சொல்லிவிட, இன்று

வரைக்கும் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூட வீட்டில் பேசவில்லை.

காதலுக்கு எதிரி வீட்டிலோ வெளியிலோ இருந்தால் அதை எதிர்த்து போராடலாம். ஆனால், காதலுக்கு எதிரியாக, தடையாக காதலனே இருக்கையில் அவளால் என்ன செய்ய முடியும்?

செல்வத்தின் வார்த்தையை மீறி, அவனைப் பற்றி வீட்டில் சொல்லிவிட ஒரு நொடி போதாது. ஆனால், தனக்கென ஒரு கௌரவம் வேண்டும் அடையாளம் வேண்டும் என அதைத் தேடி அவன் சென்றிருக்க, இடையில் அதை தடை செய்யவும் அவளால் முடியவில்லை.

அதே நேரம், செல்வத்தின் இந்த அமைதி..., ‘ஒரு போன் செய்தால் என்ன? போன் செய்தால் என்ன வந்துவிடப் போகிறது? என் தவிப்பு, பயம், நிலைமை, அவனுக்குப் புரியவே இல்லையா?’ மனதுக்குள் மறுகத்தான் முடிந்தது.

அந்த நிலையிலும் ஒரு சதவீதம் கூட, தன்னை அவன் ஏமாற்றிவிடுவான் என அவள் எண்ணவே இல்லை. இதுதான் காதலின் சாபமோ? அறைக்குள்ளேயே அவள் அடைந்து கிடக்க, அவளைக் காண வந்தான் பிரஷாந்த்.

அவன் அவளது வீட்டுக்கு வரவே, “பிரஷாந்த், வாப்பா..., என்ன இப்போதான் இங்கே வர வழி தெரிஞ்சதா? பிசினஸ்மேன் ஆனாலும் ஆன, உங்க மாமா மாதிரியே பணத்தை துரத்த ஆரம்பிச்சுட்ட..., உள்ளே வா, ஏன் அங்கேயே நிக்கற...?” அவனை வரவேற்றார், பல்லவியின் தாய் மல்லிகா.

“அப்படியெல்லாம் எதுவும் இல்ல அத்த, இப்போதானே பிசினஸை ஆரம்பிச்சிருக்கேன், கொஞ்சம் கூடவே இருக்க வேண்டி இருக்கு. ஒரு வருஷம் போனால் ஸ்டெடி ஆயிடுவேன்...” உரைத்தவன், அவர் அறியாதவாறு பார்வையை சுழற்றினான்.

“உக்காருப்பா..., டீ எடுத்துட்டு வர்றேன்...” அவர் உள்ளே செல்ல முயல,

“என்ன அத்த, வீட்டில் யாரையுமே காணோம்?” மெதுவாக கேட்டான்.

“உங்க மாமா கொடவுனுக்கு போயிருக்கார். பல்லவி, ரூமுக்குள்ளே தான் இருக்கா. படிப்பை முடிச்ச பிறகு, போரடிச்சுபோய் உக்காந்து இருக்கா...” உரைத்தவர் உள்ளே சென்று மறைந்தார்.

முன்னர் வெகு இயல்பாக பல்லவியின் அறைக்குச் சென்று பழக்கம்தான். இப்பொழுது சென்றாலும் அவர் எதுவும் சொல்லப்போவதில்லை. ஆனால், மனதுக்குள் நேசத்தை சுமந்துகொண்டு, அவள் அறைக்குச் செல்வது அவனால் முடியாத விஷயமாக இருந்தது.

அதே நேரம், அவளைக் காணாமல் இருப்பதும் ஒரு மாதிரி இருக்க, “பல்லவி...” உரிமையாகவே குரல் கொடுத்தான்.

தன் அறையில் அமர்ந்திருந்தவளுக்கு, பிரஷாந்தின் அழைப்பு செவிகளைத் தீண்ட, முகம் விகசிக்க, சட்டென இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள்.

“மாமா...” வாய்விட்டே முனகியவள், வேகமாக வெளியே வந்தாள்.

“மாமா, எப்படி இருக்க...? உன்னைப் பாத்து ரொம்ப நாள் ஆன மாதிரி இருக்கு” கேட்டவள், அவன் அருகே வந்து அமர்ந்தாள். அவள் தன் அருகில் இயல்பாய் அமர, அவன் நெஞ்சுக்குள் மெல்லிய சாரல்.

“ரொம்ப நாள் எல்லாம் ஆகலை, ஒரு வாரம்தான் ஆகுது. போன வாரம் உங்க கடையில் வச்சு பாத்தோமே மறந்துட்டியா?” அவன் கேட்க,

“ம்ச், அதெல்லாம் உன்னை வீட்ல பாக்குற மாதிரி ஆகுமா? என்னை உங்க கோல்ட் ஸ்டோரேஜ்க்கு கூட்டி போறேன்னு சொன்னியே என்ன ஆச்சு? வர வர என்னை நீ கண்டுக்கறதே இல்லை...” குறைபட்டாள்.

அவள் பேச்சை கேட்டவாறே வெளியே வந்த மல்லிகா, “பல்லவி, அவனை ஒருமையில் பேசாதேன்னு எத்தனை முறை சொல்லிட்டேன். உன்னைவிட அஞ்சு வயசு பெரியவன். ஒழுங்கா வாங்க போங்கன்னு கூப்பிட்டு பழகு. இன்னும் என்ன நீங்க ரெண்டுபேரும் சின்னப் பிள்ளைகளா?” அவளை கண்டித்தார்.

“போம்மா..., எனக்கு அப்படித்தான் கூப்பிட வருது...” அவள் சிணுங்க, அவளது அந்த செய்கையை வெகுவாய் ரசித்தான்.

கூடவே, “விடுங்க அத்த..., அவளுக்கு எப்படி கூப்பிட வருதோ அப்படியே கூப்பிடட்டும்” உரைத்தவன், அவர் கையில் இருந்து கப்பை வாங்கிக் கொண்டான்.

“எல்லாம் நீ கொடுக்குற இடம்தான்..., என்னவோ போங்க. நான் சொன்னால் கேக்கவா போறீங்க? சரி, ஏதாவது விஷயமா வந்தியாப்பா? அவர்கிட்டே ஏதாவது சொல்லணுமா? நான் வேண்ணா அவரை போன் பண்ணி வரச் சொல்லவா?” கேட்டவர் தன் அலைபேசியை எடுக்க முயன்றார்.

“அத்த, பல்லவியை என்னோட வெளியே கூட்டி போகலாம்னு வந்தேன். என்னோட கோல்ட் ஸ்டோரேஜ் பாக்கணும்னு ரொம்ப நாளா கேட்டுட்டே இருக்கா அதான்...” சற்று தயங்கி நிறுத்தினான்.

“அதுக்கென்னப்பா தாராளமா கூட்டி போ..., மதியம் சாப்பாட்டுக்கு வந்துடுவீங்களா? இல்ல லேட் ஆகுமா?” உடனே அனுமதி வழங்கினார்.

“ஹை…, மாமா, நிஜமாதான் சொல்றியா? இப்போவே போறோமா? சூப்பர்…, நான் போய் ரெடி ஆகறேன்…” குதித்துக்கொண்டு உள்ளே ஓடினாள்.

அவள் உள்ளே செல்லவே, “பிரஷாந்த்…, இப்போவாவது உன் மனசில் இருப்பதை அவகிட்டே சொல்லிடு. அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை வச்சுடலாம். வேற வீட்டுக்கு போகணும் என்ற பயத்திலேயே கல்யாணம் இப்போ வேண்டாம்னு சொல்லிட்டு இருக்கா.

“அவளை நீ கட்டிக்க ஆசைப்படுறன்னு தெரிந்தால், நிச்சயமா மறுக்க மாட்டா. எங்களுக்கும் அவ எங்கேயும் கண்மறைவா இருக்கா என்ற நினைப்பே இருக்காது…” அவர் சொல்ல, ஆனந்த அதிர்ச்சியின் உறைந்து போனான்.

“அத்த…, உங்களுக்கு…, நீங்க…” அவன் தடுமாற,

“பத்மா நேத்தைக்குதான் என்கிட்டே சொன்னா…, முன்னாடியே சொல்லியிருந்தால், இந்நேரம் கல்யாணமே முடிஞ்சிருக்கும்…” அவர் சந்தோஷமும், திருப்தியும் ஒருங்கே எழ உரைக்க, அப்படியே எகிறி குதிக்கவேண்டும்போல் இருந்தது.

இல்லையென்றாலும் தன் காதலுக்கு அவர்கள் வீட்டில் எதிர்ப்பே இருக்காது என்பது அவனுக்குத் தெரியும்தான். ஆனாலும், அவர்கள் வாயால் கேட்கையில் அதன் சந்தோஷமே அலாதி தானே.

“மாமாக்கு தெரியுமா அத்த…” மெல்லியதாக வெட்கப்பட்டான்.

“உங்க மாமாவுக்கு தெரிந்திருந்தால் இன்னைக்கு காலையில் கொடவுனுக்கா போயிருப்பார்? உன் வீட்டில்தான் நின்னிருப்பார். ஏற்கனவே எங்க மனசில் இப்படி ஒரு நினைப்பு இருக்கு. ஆனாலும், உங்க மனசு தெரியாமல் சலனப்படுத்த வேண்டாம்னு நினைச்சுட்டு இருந்தோம்.

“உங்க அம்மா நேத்து சொன்ன உடனே பால் பாயாசம் வச்சு கொடுத்தேன். உங்க அம்மாளுக்கும் ஒரே சந்தோசம். இப்போ பல்லவி மனசுதான் தெரியணும். அதையும் நீயே கேட்டு சொல்லிடு, பேசி முடிச்சுடலாம்” அவர் பேசி நிறுத்த, அங்கே வந்தாள் பல்லவி.

“என்ன அத்தையும், மருமகனும் ரொம்ப நேரமா ரகசியம் பேசிட்டு இருக்கீங்க” அவள் கேலியாக வினவ, அவர்கள் மெல்லியதாக சிரித்துக் கொண்டார்கள்.

“அம்மா, மதியம் சாப்பாட்டுக்கு எல்லாம் வர மாட்டோம். இன்னைக்கு புல் டே வெளியேதான்..., பாய்...” அவன் கைபிடித்து எழுப்ப, மறுக்காமல் எழுந்து கொண்டான்.

“சரி அத்த..., அப்போ நாங்க போயிட்டு வர்றோம்...” அவளோடு நடந்தவாறே உரைக்க, நிறைவாகவே அவர்களை வழியனுப்பினார். இருவரின் ஜோடிப்பொருத்தம் பார்த்து “என்கண்ணே பட்டுடும் போல, ரெண்டுபேரும் வந்த உடனே சுத்திப் போடணும்...” எண்ணியவர் தன் வேலையைப் பார்க்கப் போனார்.

“மாமா, கோல்ட்ஸ்டோரேஜ்ல ரொம்ப சில்லுன்னு இருக்கும் தானே..., எவ்வளவு ஏரியா இடம்? யார் கூட எல்லாம் அக்ரிமெண்ட் போட்டு இருக்கீங்க?” அவள் வினவ, அவனுக்கோ உள்ளுக்குள் உற்சாக ஊற்று.

தன்னவள் தன் தொழில் பற்றி விசாரிக்கிறாளே. “பல்லவி, கிட்டத்தட்ட இருபதாயிரம் அடி இடம். இப்போ ஐஸ்கிரீம் கம்பெனி காரங்க இரண்டாயிடம் அடி இடம் ஆக்குபை பண்ணியிருக்காங்க. மெடிசின் கம்பெனி காரங்க கொஞ்ச இடம், இன்னும் சிலரும் வாங்கி இருக்காங்க” அவள் கேட்டவற்றை விளக்கினான்.

“சூப்பர் மாமா..., உங்களுக்கு எப்படி இந்த ஐடியா வந்துது? நான் என்னவோ, பெரிய மாமா மாதிரி நீங்களும் காண்ட்ராக்ட் வேலைதான் செய்வீங்கன்னு நினைச்சேன். பட் யூ ஆர் கிரேட்...” சிலாகிக்க, சிலிர்த்துப் போனான்.

தன் காரில் தன்னவள், ஒரு நீண்ட பயணம், காரை நிறைக்கும் அவளது வாசனை, ஆழ்ந்து அனுபவித்தவன், ரசித்து காரை செலுத்தினான்.

அவனது கோல்ட் ஸ்டோரேஜ் இருக்கும் இடம் செல்ல, கிட்டத்தட்ட இரண்டுமணிநேரப் பயணம். வழியில் இளநீர், நுங்கு என அவன் வாங்கிக் கொடுக்க, அனைத்தையும் சுவைத்தவாறே பயணித்தாள்.

“டெய்லி நுங்கு வாங்கி சாப்பிடுவீங்களா? சிட்டிக்கு வெளியே சட்டுன்னு ஒரு கிராமத்து அட்மாஸ்பியர்..., ரொம்ப நல்லா இருக்குல்ல...” குழந்தையாய் குதூகலிக்க,

“நீ கூட வந்தால், டெய்லி சாப்பிடலாம்...” தன் மனதை மெல்லியதாக திறந்து காட்டினான்.

ஆனால், ஏற்கனவே காதல் மயக்கத்தில் இருப்பவளுக்கு அவனது காதல் புரியவில்லை. மாறாக, “காலையில் செம்ம மூட்ஆஃப்..., இப்போ அதுக்கு ஆப்போசிட்டா மனசு ரிலாக்ஸா இருக்கு...” தன் மனதை அப்படியே உரைக்க, உள்ளுக்குள் திடுக்கிட்டான்.

‘தன் பல்லவிக்கு மூட்ஆஃப்பா..., அதெப்படி சாத்தியம்? அந்த வீட்டின் மகாராணி, அவள் மனதில் நினைப்பதை கூட சாதித்துக் கொடுக்க காத்திருக்கும் பெற்றவர்கள்..., அப்படியிருக்கையில்...’ எண்ணியவன்,

“ஏன் பல்லவி...? உனக்கு என்ன மூட்ஆஃப்...?” அவனால் தெரிந்துகொள்ளாமல் இருக்கவே முடியாது.

“அதை பிறகு சொல்றேன்..., இப்போ நாம உங்க இடத்தை போய் பார்ப்போம். அதோ..., அங்கே தெரியுதே..., அதுதானே..., எப்படி கண்டுபிடித்தேன் பாத்தீங்களா” அங்கே இருக்கும் மனநிலையை கெடுத்துக்கொள்ள அவள் விரும்பவில்லை.

அவனுக்கோ, அவள் சொல்லாமல் விட்டது பெரும் தவிப்பை கொடுத்தது. அதை மறைத்தவன், “ஆமா, அதேதான்…” உரைத்தவன், காரை கிளைச் சாலையில் திருப்ப, சற்று கரடு முரடான சாலையில் கார் ஏறி இறங்கத் துவங்கியது.

மூன்று ஆள் உயரத்துக்கு இருந்த அந்த கேட், அவன் ஹாரனை ஒலிக்கவிடவே அகலமாகத் திறந்து கொண்டது. செக்கியூரிட்டி காலை வணக்கம் சொல்லி, விறைப்பாக சலூட் வைக்க, ஒற்றை தலையசைப்பில் அதை ஏற்றுக் கொண்டவன் காரை அதன் இடத்தில் நிறுத்தினான்.

வெளியே சூரியன் சற்று தகிக்க, அவனது அலுவலக அறையோ சில்லென குளிர்ந்து. “மாமா, இங்கேயே இப்படி குளிருதே…, உள்ளே எப்படி இருக்கும்?” கேட்டவளது கண்கள், உள்ளே சென்று பார்க்க ஆர்வத்தில் மின்னியது.

“கொஞ்சம் வெயிட் பண்ணு பல்லவி. ஏதாவது மெடிசின் எடுக்க வேண்டி இருக்கான்னு பாத்துட்டு, அதை எடுக்க உள்ளே போகலாம்…” உரைத்தவன், தன் கணினியை இயக்கி ஆடரை ஆராய்ந்தான்.

“ம்…, ஒரு பாக்ஸ் எடுக்க வேண்டி இருக்கு. அதை எடுத்துட்டு வந்துடலாம்” உரைத்தவன், “பாண்டி…” உரக்க குரல் கொடுக்க, அவனது உதவியாளன் உள்ளே வந்தான்.

“சார்…” பவ்யமாக நின்றவன், பல்லவியைப் பார்த்து, ‘வணக்கம்’ என்னும் விதத்தில் மெல்லியதாக கையை மார்புக்கு குறுக்காக வைத்தவன், தலையை லேசாக அசைக்க, அவளும் தானாகவே தலை அசைத்தாள்.

“ட்ரெஸ், மாஸ்க் எல்லாம் எடுத்துட்டு வாங்க…” அவன் உரைக்க,

“சார், எதுன்னு சொன்னீங்கன்னா நானே எடுத்துட்டு வந்துடுவேன். நீங்க…” பாண்டி தயங்கினான்.

“பல்லவிக்கு உள்ளே போய் பாக்கணுமாம்...” உரைத்தவன், கண்களால் சிரிக்க, அதிர்ச்சியில் விழி விரிய ஒரு நொடி நின்றுவிட்டான் பாண்டி.

எதையோ சொல்லப் போனவன், பிரஷாந்தின் தலை மறுப்பாக அசைய, தான் சொல்ல வந்ததை அப்படியே நிறுத்திக் கொண்டான். அவன் அங்கிருந்து செல்லவே, “என்ன மாமா, பாண்டி பேயறைஞ்ச மாதிரி முழிக்கறான்?” அவள் புரியாமல் கேட்க, அதற்கும் சிரிப்பையே பதிலாக்கினான்.

“இப்போ எதுக்கு சிரிக்கறீங்க? சொல்லிட்டு சிரிங்க...” அவன் தோளில் மெல்லியதாக குத்த, அவள் செய்கையை ரசித்தான்.

“பல்லவி..., உள்ளே மைனஸ் நாப்பது டிகிரி இருக்கும். சுவாசிக்க ரொம்ப சிரமமா இருக்கும். வாயைத் திறந்து நல்ல அகலமா மூச்சு விடணும். முடியலன்ன என்கிட்டே உடனே சொல்லிடணும். அறுபது செக்கென்ட் கூட உன்னால் தாக்குபிடிக்க முடியாது. சொல்லிட்டேன்...” அவன் எச்சரித்தான்.

“ஒரு நிமிஷமா...? அதெல்லாம் இல்லை..., அஞ்சு நிமிஷம் நான் தாக்குப் பிடிப்பேன்” அவள் வீம்புக்கு உரைக்க, இப்பொழுது இதழ் பிரிய புன்னகைத்தான்.

“அப்படியா..., பாப்போம்...” அவன் சொல்ல, அவர்களுக்குத் தேவையான உடை, மாஸ்கோடு உள்ளே வந்தான் பாண்டி. அவளை அழைத்துக் கொண்டு வெளியே வந்து, கீழே ஓடிய படிகளில் இறங்கினான். அங்கே இருந்த சிறு அறையின் வந்து நின்றான்.

அவளது உடையை தானே அணிவித்தவன், முழங்கால் அளவுக்கு தடிமனான லெதர் பூட்ஸ், தலையை முழுதாக மறைத்த மாஸ்க், மூக்கில் சுவாசிக்க வேண்டி இருக்கும் உபகரணம் அனைத்தையும் பொருத்தியவன், பாண்டியின் உதவியோடு தன் உடைகளை அணிந்து கொண்டான்.

எடுக்க வேண்டிய மெடிசின் எங்கே இருக்கிறது என கணினியில் பார்த்தவன், “வா…” அவளை அழைத்துக் கொண்டு அந்த இரும்பு கதவுக்கு முன்னால் சென்று நின்றான்.

“பாண்டி, ரெண்டு நிமிஷம்…” உரைத்தவன், அந்த கதவில் இருந்த சக்கரத்தை பாண்டி சுழற்ற, உள்ளே செல்ல தயாரானான்.

அந்த இரும்புக் கதவைத் திறந்தவுடன் அவள் உணர்ந்தது, தேகத்தை ஊடுருவும் குளிரையே. அவர்கள் உள்ளே நுழைந்த மறு நொடி கதவை பாண்டி பூட்டிவிட, மூச்சு விட முடியாமல் திண்டாடிப் போனாள்.

“பல்லவி, ஆழமா மூச்சு விடு…” கண்ணாடி மாஸ்க்குக்கு பின்னால் அவன் உரக்க குரல் கொடுக்க, தலையை உருட்டியவள், வேகவேகமாக மூச்செடுத்தாள். ஆனாலும், அவளால் நிலைக்கு வர முடியவில்லை என்றே சொல்லலாம்.

ஊசிமுனையாய் தன்னைத் தாக்கிய குளிரையும் சம்மாளிக்க முடியவில்லை. ‘இந்த ட்ரெஸ் போட்டுமே இப்படி இருக்கே, இது இல்லன்னா?’ சிந்திக்கவே அச்சமாக இருந்தது.

“வெளியே போறியா…” அவன் கதவை திறக்க முயல, அவன் கை பிடித்து தடுத்தவள், “உள்ளே போகலாம்…” அவன் கை பிடித்து இழுத்தாள்.

“ஆர் யூ ஓகே…?” அவன் கத்த, வேகமாக தலையை உருட்டினாள்.

அடுத்த நொடி, தான் எடுக்க வேண்டிய மெடிசின் பக்கம் நகர்ந்தவன், அங்கே அடுக்கடுக்காக இருந்த ட்ரேக்களில் ஒன்றை இழுக்க, புகைமூட்டம் பறக்க, தனக்கு தேவையான பாக்ஸை எடுத்தவன், அடுத்த நொடி, அவளை கை பிடித்து

இழுத்துக் கொண்டு அந்த இரும்பு கதவின் முன்னால் நின்றான்.

அதற்கு முன்பாகவே அவன் சொன்ன இரண்டு நிமிடம் முடிந்திருக்க, பாண்டியே வெளியே இருந்து கதவைத் திறக்க, அடுத்த நொடி அவளை இடையோடு அணைத்தவாறு வெளியே பாய்ந்திருந்தான்.

பாண்டி கதவை மூடிவிட்டு, பிரஷாந்தின் கரத்தில் இருந்து பாக்ஸை வாங்கி, பிரீசர் பாக்ஸில் போட்டான். பிரஷாந்த், பல்லவியின் முகத்தில் இருந்த மாஸ்கை வேகமாக கழட்டியவன், அவளது பூட்ஸையும் அகற்றினான்.

கிட்டத்தட்ட உறைந்து போயிருந்தாள் பல்லவி. “பல்லவி..., பல்லவி...” அவளை உலுக்க, வேகமாக வெளி காற்றை சுவாசித்தவள் மலங்க விழிக்க, விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்கினான்.

கை உறையை உருவிப் போட்டவள், “மாமா...” கண்டனமாக அழைத்து, “சிரிக்காதே...” முறைத்தாள்.

பாண்டி அங்கே இருந்து சென்றுவிட்டிருக்க, “நான் உயிரோட தானே இருக்கேன்” அவள் கேட்ட மறு நிமிடம், அவன் முகமே மாறிவிட்டது. அதைப் பார்த்தவள், தன் நாக்கை கடித்தவாறே, “மாமா, ஜஸ்ட் கேலி பண்ணேன், அதுக்கு ஏன் இப்படி முகமே மாறிடுச்சு...” அவன் கன்னம் தொட்டு சமாதானப்படுத்தினாள்.

“இதுக்குத்தான் நான் உன்னை இங்கே அழைச்சுட்டு வரவே இல்லை” அவன் குரல் இறுக உரைக்க, அவன் கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

“கேலின்னா..., என்ன வேண்ணா சொல்லுவியா நீ...?” அவனால் தாங்கவே முடியவில்லை. அவளோடு நூறு ஜென்மம் அவன் வாழ நினைக்க, அவள் சாவைப் பற்றி பேசினால் அவனும் என்னதான் செய்வான்.

“ஹையோ ஆண்டவா, ஏதோ தெரியாமல் வாயில் வந்துடுச்சு, விடுங்களேன். முதல்ல உங்க பூட்ஸ் எல்லாம் கழட்டுங்க…” தானே அவன் பூட்ஸை கழட்ட முயல, வேகமாக அவளை விட்டு விலகி நின்றான்.

“நான் பாத்துக்கறேன்…, நீ காலை எல்லாம் பிடிச்சுகிட்டு, எந்திரி மேலே” அவன் மறுக்க,

“அப்போ நீங்க எனக்கு பண்ணீங்க…, அது மட்டும் என்னவாம்…?” அவன் மறுக்க, மறுக்க கேட்காமல் பிடிவாதமாக அதைச் செய்துவிட்டே ஓய்ந்தாள்.

அவன் அப்பொழுது சற்று இலகுவாகி இருக்க, “இதுக்குள்ளே எப்படி மாமா வேலை பாப்பீங்க…?” அவள் சிறு பயத்தோடு கேட்க,

“எங்களுக்கெல்லாம் பழகிடுச்சு…” அவன் சாதாரணமாக உரைக்க, அவள் முகம் தெளியவே இல்லை.

அதைப் பார்த்தவன், “ஒரு சாதாரண மனுஷனால், மூணு நிமிஷம் உள்ளே தாக்குபிடிக்க முடியும். அதுக்கு முன்னாடி வேலையை முடிச்சிடுவோம். சப்போஸ் அவன் உள்ளே இருந்து வர லேட் ஆனால், நாலாவது நிமிஷம், வெளியே இருக்க ஆட்கள் உள்ளே போய் அவங்களை வெளியே கூட்டி வந்துடுவாங்க. சோ…, பயப்பட தேவையே இல்லை” அங்கே இருக்கும் சூழலை விளக்கினான்.

“நீங்க உள்ளே போவீங்களா?” அவள் கேட்க,

“இது என்னோட பிளான்ட்…, நான் போகாமல்…?” அவளிடம் திருப்பிக் கேட்க,

“இனிமேல் போகாதீங்க…?” பிடிவாதமாக உரைத்தாள்.

“ஏன்…?” அவன் கண்களில் கூர்மையோடு வினவ,

“என்ன ஏன்...? போகாதீங்கன்ன போகாதீங்க அவ்வளவுதான். இன்னும் இங்கே வேற வேலை இருக்கா? நாம போகலாமா?” அவள் அங்கிருந்து செல்ல முயன்றாள்.

“முக்கியமான மெடிசின் ட்ரேயோட கோட் என்கிட்டேதான் இருக்கும். அதை எடுக்க நான்தான் எடுக்கணும். அதெல்லாம் ஒரு நிமிஷ வேலை, அதை மட்டும் நானே பாக்கறேன் சரியா?” அவன் உரைக்க, அரை மனதாக சம்மதித்தாள்.

# பகுதி - 4

கோல்ட் ஸ்டோரேஜில் மேலும் சில வேலைகளை மேற்பார்வையிட்டு முடித்தவன், அவளை அழைத்துக்கொண்டு கியம்பினான். நேரம் இரண்டுமணியை நெருங்கவே, “மாமா, பக்கத்தில் இருக்கும் ஹோட்டல்க்கு வண்டியை விடுங்க, செம பசி...” அவள் உரைக்கவே மறுக்காமல் காரை ஹோட்டலுக்குச் செலுத்தினான்.

அவர்கள் உணவுக்காக காத்திருக்க, தன் காதலைச் சொல்ல தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தான் பிரஷாந்த். ஆடர் செய்த உணவு வரவே, ஒருவருக்கொருவர் பரிமாறியபடி உண்ண, பல்லவியின் மனமோ, செல்வத்தை எண்ணி வாடியது.

அவள் முகத்திலேயே ஒரு கண் வைத்திருந்தவன், “பல்லவி, உன்கிட்டே ஒரு விஷயம் பேசணும், அதுக்கு முன்னாடி, உன் மேரேஜ் பத்தி என்ன முடிவெடுத்திருக்க?” மெதுவாகத் துவங்கினான்.

திருமணம் என்ற பேச்சை எடுத்த உடனேயே அவள் முகத்தில் சிறு கலவரம் வந்து போக, கூடவே ஒரு சோகம் நீங்காமல் ஒட்டிக் கொண்டது. அதைப் பார்த்தவன், “என்கிட்டே எதையாவது மறைக்கறியா பல்லவி” அவன் கேட்க, சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவள் கண்களில் இருந்த அலைப்புறுதலில் தவித்துப் போனான். “எதுவா இருந்தாலும் சொல் பல்லவி...” அவளைத் தூண்டினான்.

காரணமே இல்லாமல் அவன் மனம் அதிர்ந்தது. ‘என்னவோ வரப் போகிறது’ அவன் உள்மனம் உரைக்க, அதை அடக்கியவாறே உணவை உண்டான்.

“என்கிட்டே சொல்லக் கூடாதுன்னா வேண்டாம்…” அவன் சொல்ல, அவ்வளவு நாளாக உள்ளுக்குள் மறைத்து வைத்து புளுங்கியதாலோ என்னவோ, அவன் கேட்கவே, சட்டென கண்கள் கலங்கிப் போனது.

“உங்ககிட்டே சொல்லக் கூடாதுன்னு எல்லாம் இல்லை…” அப்பொழுதும் அவளால் வெளிப்படையாக சொல்லிவிட முடியவில்லை. காதலனனின் துணை இருக்கிறது என்றால் தைரியமாகச் சொல்லிவிடலாம், இது…, ஒரு பெருமூச்சு எழுந்தது. கூடவே, தன் காதல் என்னவாகுமோ என்ற பயமும் சேர, அதற்குமேல் அவளால் உண்ண முடியவில்லை.

அவள் உணவை பிசைய, “யாராவது உன் மனசில் இருக்கறாங்களா பல்லவி” அந்த வார்த்தையை கேட்கும் முன்பே, உள்ளுக்குள் செத்துப் பிழைத்தான். அப்பொழுது கூட, நீ யாரையாவது காதலிக்கிறாயா என அவனால் கேட்டுவிட முடியவில்லை.

அவனுக்குள் இருக்கும் காதலன் கொஞ்சம் கொஞ்சமாய் செத்துப் பிழைக்கையில், அவள் மற்றவனை காதலிக்கிறாளா என அவனால் எப்படி கேட்க முடியும்?

“மாமா…?” அவள் அதிர்ச்சியாய் அழைக்க, அந்த அதிர்ச்சியே சொன்னது, அவள் மனதில் யாரோ இருக்கிறார் என. அந்த நிமிடம், அவள் எதிரில் அவனால் இருக்க முடியவில்லை. அந்த கோல்ட்ஸ்டோரேஜுக்குள் கூட அவன் இவ்வளவு மூச்சுத் திணறலை அனுபவித்ததில்லை.

தன் காதல் தன் கண் முன்பாகவே செத்துப்போன அவலம், உள்ளுக்குள் விழுந்த இடியை கண்களில் வராமல் தடுக்க திண்டாடிப் போனான். உள்ளுக்குள் மனம் புழுவாய் துடிக்க, வெளியே பனிப்பாறையாய் தன்னை மாற்றிக் கொண்டான்.

மேலே ஒரு வார்த்தை கூட அவனால் கேட்க முடியவில்லை. என்னவென்று கேட்பதாம்? அவள் காதல் கதையை கேட்க

மனதுக்குள் சக்தி கொஞ்சமும் இல்லையே, அப்படியிருக்க, இதழ்கள் வார்த்தையை உதிர்க்குமா என்ன?

“மாமா...” அவன் மௌனத்தை அவள்தான் கலைத்தாள். அப்பொழுதும் வாய் திறந்து அவனால் பேச முடியவில்லையே.

“உங்ககிட்டே முன்னாடியே சொல்லலைன்னு கோபமா மாமா?” மேஜைமேல் இருந்த அவன் இடக்கரத்தை மெதுவாக அழுத்த, அந்த தொடுகை நெருப்பாய் சுட்டது.

வேகமாக தன் கரத்தை உருவிக் கொள்ள, “சாரி மாமா..., உன்கிட்டே மறைக்கணும்னு எல்லாம் நினைக்கலை, என்னால் சொல்ல முடியலை, அதுதான் உண்மை. என் காதலுக்கு அப்பா மறுப்பாங்களா என்ன? அப்படியிருக்கும்போது, ஏன் சொல்லலைன்னு யோசிக்கவே மாட்டியா?” அவன் மூளை மரத்துப் போயிருக்க, அவன் எதை யோசிப்பதாம்.

“அவர் செல்வம்..., என்னோடவே பி.ஃபார்ம் படித்தவர்...” அவள் சொல்ல, அவனால் அதை காதால் கேட்க கூட முடியவில்லை.

‘எதுவும் சொல்லாதே...’ வெடிக்கத் துடித்த நாவை கட்டிப்போடவே அவன் மிகுந்த சிரமப்பட்டான்.

“அவர் இப்போ வெளிநாடு போயிருக்கார். அவர் ரெண்டு வருஷத்தில் வந்துடுவார், அதற்குப் பிறகுதான் கல்யாணத்தைப் பத்தியே முடிவெடுக்கணும்” மேலும் அவனது குடும்ப சூழல், அவளது இப்போதைய நிலை என அவள் விளக்க, ஒரு வார்த்தை கூட பேசாமல் அனைத்தையும் கேட்டுக் கொண்டான்.

“ஏதாவது பேசுங்க மாமா...” அவனது அமைதி அவளை வதைக்க, அவனை உலுக்கினாள்.

“சாப்பிடு போகலாம்...” உரைத்தவன், தன் முன்னால் இருந்த உணவை ருசி அறியாமல் விழுங்கி வைத்தான். சாப்பிடாமல் எழுந்து சென்றால், ஏன் என அவள் கேட்கும் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியாதே.

அவன் உணவை முடிக்க, பாதியிலேயே தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டவள் கிளம்பிவிட்டாள். அவன் ஏன் என்று ஒரு வார்த்தையும் கேட்கவில்லை. மௌனமாக பில்லை செலுத்தியவன், அமைதியாக காருக்கு விரைந்தான்.

காலையில் சென்றதற்கு எதிராக, அந்த பயணம் பெரும் கொடுமையாக இருந்தது. தன் காதலி, வருங்கால மனைவி என காலையில் இனிமையாக இருந்த உணர்வுகள் அனைத்தும், இப்பொழுது அவள், மற்றவனின் காதலி, அவனது வருங்கால மனைவி என நினைக்கவே குமுறிக்கொண்டு வந்தது.

“மாமா..., நான் வீட்ல சொல்ற வரைக்கும், நீங்க எதுவும் சொல்லிடாதீங்க மாமா” அவள் குரல் வீட்டுக்கு அருகே வருகையில் கெஞ்சலாக ஒலிக்க, உள்ளுக்குள் நொறுங்கிப் போனான்.

“நான் எதுவும் சொல்லலை..., நீ தைரியமா போ...” உரைத்தவன், காரை வீட்டுக்குத் திருப்பினான். அவனுக்குத் தெரியும், தன் தாய், தன் வருகைக்காக காத்திருப்பார் என்று, அவரை ஏமாற்ற அவனால் முடியாது. தன் ஏமாற்றத்தை விழுங்கிக் கொண்டு, வீட்டுக்கு சென்றான்.

அவன் கார் கேட்டுக்குள் நுழையும்பொழுதே, பத்மாவும், மல்லிகாவும் ஒருங்க வாசலில் தோன்றினார்கள். அவர்கள் முகங்களில் இருந்த எதிர்பார்ப்பு, ‘ஹையோ’ வென இருந்தது. தன் முகம் இப்பொழுது கொஞ்சம் வாடினாலும் அவர்கள் நொடியில் கண்டுகொள்வார்கள் என்பதால், முகத்தை புன்னகை முகமாக மாற்றிக் கொண்டான்.

ஆயிரம் இருந்தாலும், பல்லவி தன்னை நம்பி உரைத்த விஷயத்தை அவனாக யாரிடமும் சொல்லப் போவதில்லை.

அப்படியிருக்கையில், தன்னை மீறியும் எதையும் வெளிப்படுத்திவிடக் கூடாது என முடிவெடுத்தான்.

காரை நிறுத்தியவன், “அட என்ன..., அத்த நம்ம வீட்டுப் பக்கம்..., அதிசயமால்ல இருக்கு...” போலியாக வியந்தவாறே காரில் இருந்து இறங்கினான்.

“என்னை கேலி பண்றது பிறகு இருக்கட்டும், முதல்ல நீ போன விஷயம் என்ன ஆச்சு அதைச் சொல்லு...” மல்லிகா படபடத்தார்.

“வீட்டுக்குள் வந்துட்டு சொன்னால் போதுமா, இல்ல இங்கேயே நின்னுட்டே சொல்லணுமா...?” என்ன சொல்வது என அவனுக்கு யோசிக்க அவகாசம் வேண்டி இருந்தது.

“அண்ணி, இவ்வளவு நேரம் அவன் எப்போ வருவான்னு கேட்டுட்டு இருந்தீங்க, அதான் இப்போ வந்துட்டானே..., சொல்லாமல் எங்கே போகப் போறான்? முதல்ல உள்ளே வாங்க...” பத்மா உரைக்க, வேகமாக அவன் பின்னால் உள்ளே வந்தார்.

தன் வயதையும் மறந்து, சிறுபிள்ளைபோல் தன் பின்னால் ஓடிவரும் அத்தையை எண்ணி உள்ளம் நனைந்தது. ‘இவர்களது எதிர்பார்ப்பு, ஆசை அனைத்தையும் எப்படி பொசுக்க? இந்த காதல் எனக்குள் வராமலே போயிருக்கலாம்?’ வேதனையாக எண்ணிக் கொண்டான்.

தாய் கொடுத்த தண்ணீரை வாங்கிக் குடித்தவன், இதற்குமேல் தன் அமைதி ஆபத்து என்பதை புரிந்தவனாக, “அத்த, எதுவா இருந்தாலும் உங்க பொண்ணுதான் உங்ககிட்டே சொல்வாளாம். என்னை வாயையே தொறக்கக் கூடாதுன்னு சொல்லிட்டா. அதுவும், அவளுக்கு எப்போ கல்யாணம் கட்டிக்கணும்னு தோணுதோ..., அப்போதான் சொல்வாளாம்.

“ரொம்ப அவசரப்பட்டா என்னைய வேற எவளையாவது கட்டிக்க சொல்லிட்டா. இப்போ சொல்லுங்க..., நான் என்ன

செய்யட்டும்?” பாதி உண்மையும், மீதி பொய்யுமாக அவன் கேட்க, பெரியவர்கள் இருவருக்கும் அப்படி ஒரு புன்னகை.

“அண்ணி, இந்த காலத்து புள்ளைங்களுக்கு எல்லாத்திலையும் அவசரம்னு பேசிக்கறோம், ஆனா, நம்ம புள்ளைங்களைப் பாருங்க, ஒரே நிதானம்தான். எப்படியோ, நீங்க பேசிகிட்டதே எங்களுக்குப் போதும். அண்ணி, நான் சொல்லல, பல்லவி ஒத்துக்கிடுவான்னு,

“நீங்கதான் பயந்துகிட்டே இருந்தீங்க. நுங்கு பாயாசம் செய்யச் சொல்லியிருக்கேன், இருந்து ஒரு வாய் சாப்ட்டுட்டு போங்க…” பத்மா உரைக்க, மல்லிகா சோபாவில் நிம்மதியாக அமர்ந்தார்.

“உங்களுக்கு என்ன அண்ணி, உங்க புள்ள மனசில் இருப்பது உங்களுக்குத் தெரியும், நிம்மதியா இருந்தீங்க. நான் அப்படியா? எப்படியோ, இனிமேல் நான் நிம்மதியா இருப்பேன். எப்போ அவளுக்கு அவங்க அப்பாகிட்டே சொல்லணுமோ சொல்லிக்கட்டும்…, நீங்க முதல்ல அந்த பாயாசத்தை மாப்பிள்ளைக்கு கொடுங்க…” மல்லிகா சொல்ல, துவண்ட மனதை இறுக்கியவன், மெதுவாய் புன்னகைத்தான்.

கூடவே, அத்த, இப்போதானே சொன்னேன், அவதான் முடிவை சொல்லுவான்னு. இப்போ என்னை நீங்க மாப்பிள்ளைன்னு சொன்னா அவ கோவிச்சுக்க மாட்டாளா? சோ…, எப்பவும்போல பிரஷாந்த்ன்னே சொல்லுங்க” அவன் தன் மறுப்பை தெரிவித்தான்.

கையில் பாயாச கிண்ணத்தோடு வந்த பத்மா, “பாத்தீங்களா அண்ணி, என் பிள்ளை இப்போவே பொண்டாட்டி தாசனா மாறிட்டான்…” குறைபடுவதுபோல் பெருமைப்பட,

“என்ன செய்யிறது அண்ணி, அவன் அப்படியே அவங்க அப்பாவாட்டம்” மல்லிகா அவர் காலை வார, அந்த வயதிலும் பத்மாவின் முகத்தில் ஒரு வெட்கப் புன்னகை

உதயமானது. அதைப் பார்த்தவனது நெஞ்சம் வேதனையில் விம்மியது.

‘இப்படி ஒரு வாழ்க்கை எனக்கு கொடுத்து வைக்கவில்லையே...’ வேதனையாக எண்ணிக் கொண்டான். மல்லிகா தன் வீட்டுக்கு கிளம்பிச் செல்ல, வேகமாக தன் அறைக்குள் வந்து தஞ்சமானான்.

மனம் முழுவதும் வெறுமை அப்பிக் கிடந்தது. மறுநாளே, ஒரு வெளிநாட்டு கிளையிண்டை மீட் செய்யவேண்டும் எனச் சொல்லிக்கொண்டு, பெங்களூர் கிளம்பிவிட்டான். ஏற்கனவே அவனது பெசிலிடேடர் வேலைக்கு அவன் கல்கத்தா, மும்பை, பெங்களூர் என செல்வது வழக்கம் என்பதால் அவனை யாரும் சந்தேகப்படவில்லை.

அடுத்த இரண்டு நாட்கள், தான் தங்கியிருக்கும் ஹோட்டல் அறையிலேயே முடங்கிக் கிடந்தான். தன் காதல் தோல்வியில் முடிந்த துயரத்தை முடிந்த அளவு கரைக்க முயன்றான். ஆனாலும், ஆறுவருடம் மனதுக்குள் பொத்தி வைத்து வளர்த்த காதல், விருட்சமாகி இருக்க, அதைப் பிடுங்கி எறிவது பெரும் வேதனையை அளித்தது.

‘ஏண்டா..., உனக்கு காதல் வரலாம், அவளுக்கு காதல் வரக் கூடாதா? இது எந்த விதத்தில் நியாயம்?’ தன்னையே கேள்வி கேட்டுக் கொண்டான்.

‘உன் காதல் போலத்தானே அவளது காதலும்? உனக்காவது ஒருதலைக் காதல், அவளுக்கு இருவரும் மனம் ஒத்த காதல். அப்படியிருக்கையில் அவளுக்கு எப்படி இருக்கும்? நீ விரும்பினால், அவளும் உன்னை விரும்ப வேண்டும் என்று ஏதும் கட்டாயமா என்ன?

“இத்தனை வருடம் உன் காதலைச் சொல்ல தைரியமின்றி தானே இருந்தாய்?’ அவனது மனசாட்சி கேள்வி கேட்க,

“இல்லை..., என் காதலை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற மமதையில் இருந்தேன்...”

வாய்விட்டே புலம்பினான்.

மூன்றாம் நாள் விடியலில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். பல்லவி தனக்கு கிடையாது என்பதை ஒரு மாதிரி ஏற்றுக் கொண்டான். தன் காதல் தோல்வியில் முடிந்துவிட்டது பெரியவர்களுக்குத் தெரிய வரும்பொழுது, தான் இப்படி மறுகிக் கொண்டு இருக்கக் கூடாது என முடிவெடுத்தான்.

அனைத்தையும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்த பிறகே தன் வீடு திரும்பினான். பழைய பிரஷாந்த்தாக மற்றவர்கள் முன்னால் நடமாடத் துவங்கினான். அப்படி அவனாகவே நினைத்துக் கொண்டான். ஆனால், அவன் சிக்கினான் தன் தம்பி ரவியிடம்.

# பகுதி - 5

பிரஷாந்த் மற்றவர் முன்னிலையில் சாதாரணமாக நடமாடினாலும், அவனது தம்பி ரவி, ஒரு மாதமாக அவனை கவனித்துக் கொண்டுதான் இருந்தான். பழைய கலகலப்பு பிரஷாந்திடம் இல்லை. அனைவரோடும் பேசினான், அவர்கள் கேலிக்கு ஈடு கொடுத்தான், ஆனாலும் அவன் கண்களில் இருக்கும் வெறுமை..., ரவியை புருவம் நெரியச் செய்தது.

அன்று ஒரு பாரின் கம்பெனி, தங்கள் வேர்ஹவுசை நிறுவ இடம் பார்க்கச் சொல்லியிருக்க, அவர்கள் கேட்ட இடம், கேட்ட இடத்தைச் சுற்றிய சூழல் என அனைத்தையும் கணினியில் கணக்கிட்டுக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவனது அறைக்கு வந்த ரவி, அறைக் கதவை மூடி தாழ் போட்டான். அவன் செய்கையைப் பார்த்த பிரஷாந்த், “என்னடா, முன்னெச்சரிக்கை எல்லாம் பலமா இருக்கு, ஏதாவது பெர்சனலா பேசணுமா? ஏதாவது காதல் விவகாரமா?” கேட்டவனது குரலில் சந்தேகமே அதிகம் இருந்தது.

அவர்கள் குடும்பத்தைப் பொறுத்த வரைக்கும், காதல் என்றால் கண்ணை மூடிக்கொண்டு தலை ஆட்டுவார்கள். அப்படியிருக்கையில், தன் தம்பி தன்னைத் தேடி, அதுவும் இந்த இரவு நேரத்தில் வந்திருக்கிறான் என்றால், அது சாதாரணமாக இருக்க முடியாது என்பது அவனது எண்ணம்.

அவனையே கூர்மையாக பார்த்தவாறு, “ஆமா, காதல் விவகாரம்தான். ஆனா என் காதல் இல்லை, உன் காதல்...” தெளிவாக உரைத்தவன், அண்ணனை கூர்மையாக அளவிட்டான்.

“அதைப்பத்தி பேச என்னடா இருக்கு? அதான் ஏற்கனவே சொல்லிட்டேனே, எல்லாம் பல்லவி கையில்தான்

இருக்குன்னு” சாதாரணமாக உரைத்துவிட்டு, தன் கணினியை ஆராய, பட்டென அதை மூடினான் ரவி.

“ரவி, என்ன இது…, நான் வொர்க் பண்ணிட்டு இருக்குறது தெரியுதா இல்லையா?” கோபத்தில் கத்தினான்.

“இந்த கத்துறதுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன். அதுக்கு வேற ஆளைப் பாரு. உண்மையைச் சொல், உன் காதலை அண்ணி ஏத்துக்கலையா? இல்ல, அவங்க வேற யாரையாச்சும் விரும்பறாங்களா? எனக்கு தெரிஞ்சாகணும்.

“இப்போ நீ உண்மையை சொல்லலன்னா, பெரியவங்க எல்லாரையும் நாளைக்கே கூப்ட்டு பொதுவில் இந்த விவகாரத்தை நான் பேசுவேன்” நான் செய்வேன் என்ற தெனாவெட்டில் அவன் நிற்க, தன் தலையில் கை வைத்துக் கொண்டான்.

“அப்படி எதையும் செய்து வைக்காதே ரவி” அவன் குரல் கெஞ்சலாக ஒலித்தது.

தன் அண்ணனா தன்னிடம் இப்படி பேசுவது என வியந்து போனான். அவன் சாதாரணமாக இருந்திருந்தால், அவர்கள் விவகாரத்தில் பிரச்சனை எதுவும் இல்லையென்றால், நீயென்ன சொல்வது, நானே அனைவரையும் அழைக்கிறேன் என திமிறியிருப்பான், இது…’ எண்ணியவன், தன் அண்ணனின் அருகில் அமர்ந்தான்.

“என்ன பிரஷாந்த்? ஏன் இப்படி இருக்க? என்கிட்டே மட்டுமாவது உண்மையைச் சொல்?” அவனை உலுக்கினான்.

“பல்லவி வேற ஒருத்தனை விரும்பறா, அவன் வெளிநாட்டில் இருக்கானாம், அவன் வர வரைக்கும் கல்யாணத்தை பத்தி பேச  முடியாத சூழலில் அவ

இருக்கா?” அவன் சொல்ல, அவனை நம்ப முடியாமல் பார்த்தான்.

“நீ சொல்றது உனக்கே வேடிக்கையா இல்ல? மாமா அவ விருப்பத்துக்கு விரோதமா எதையுமே செய்ய மாட்டாரே பிறகு ஏன் இந்த கதை?” அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

“உன்னைப் பிடிக்கலன்னா நேரடியா சொல்லியிருக்கலாமே, தேவையில்லாமல் இந்த கதை எதுக்கு?” அவன் அப்படித்தான் எண்ணினான்.

“நான் என் காதலை அவகிட்டே சொல்லவே இல்லை, அதுக்கு முன்னாடியே…” உரைத்தவன், தன் வேதனையை விழுங்கிக் கொண்டான்.

“அவனைப்பற்றி விசாரிச்சியா?” நீ செய்திருப்பாயே என்ற நம்பிக்கை அவனிடம்.

“ம்…, விசாரிச்சேன். வீட்டுக்கு அடங்கிய பையன், ஒரு அக்கா, தங்கச்சி, அக்கா வீட்டுக்காரர் டாஸ்மாக்கில் வேலை செய்யறான், தங்கச்சி வீட்டுக்காரனும் கொத்தனார். இவன்தான் வீட்டு நிலையை மீறி படிச்சிருக்கான்.

“வீட்டை சுத்தி ஏகப்பட்ட கடன், அதை அடைக்கவே அவனுக்கு ஒரு வருஷம் ஆகும். பிறகு, வீடு வைக்கணும், அதுக்கு பிறகுதான் கல்யாணம்…” அவனிடம் ஒரு பெருமூச்சு எழுந்தது.

“பல்லவியை அவன் கட்டிகிட்டா, இதெல்லாம் ஒரு நிமிஷத்தில் முடிஞ்சுடுமே, ஏன் செய்யலையாம்?” தன் தாடையை தேய்த்துக் கொண்டான்.

“கௌரவம் பாக்கறான் போல…” பிரஷாந்த் சொல்ல, மற்றவனை இருவராலும் தவறாக நினைக்க முடியவில்லை.

“இப்போ இதில் நீ என்ன முடிவு பண்ணியிருக்க?” ரவி கேட்க,

“அவங்க விஷயத்தில் நாம தலையிட முடியாது ரவி. எனக்கு அவ கிடையாதுன்னா, அந்த கடவுளால் கூட அவளை எனக்கு கொடுக்க முடியாது...” தெளிவாக உரைத்த அண்ணாவை, இரக்கம் பொங்கப் பார்த்தான்.

“நீ சீக்கிரமே வேற கல்யாணம் பண்ணிக்கோடா...” ஒரு காதலை கலைக்கும் அளவுக்கு எல்லாம் ரவியால் யோசிக்க முடியவில்லை.

“கண்டிப்பா பண்ணிப்பேன் ரவி. நான் இப்படியே இருந்தால், எல்லோரும் வருத்தப்படுவாங்க. பல்லவி கல்யாணம் முதல்ல முடியட்டும், பிறகு பண்ணிக்கறேன்” அவன் உரைக்க,

“சாரிடா...” அவனை இறுக அணைத்துக் கொண்டான்.

“விடுடா..., நானே எல்லாத்தையும் மறக்க முயற்சி பண்ணிட்டுதான் இருக்கேன். எல்லாம் சரியா போய்டும், நீ யார்கிட்டேயும் உளறி வைக்காதே” அவன் சொல்ல, மௌனமாக தலை ஆட்டினான்.

நாட்கள் மாதங்களைக் கடக்க, கிட்டத்தட்ட ஒரு வருடம் முடிந்த பிறகும் செல்வம் அவளை தொடர்பு கொள்ளவே இல்லை. அதே நேரம், அவனது வீட்டு விஷயங்களை பிரஷாந்தே அவளிடம் தெரிவித்தான். செல்வம் வீட்டுக் கடனை அடைத்துக் கொண்டிருக்கிறான் என்னும் நினைவே அவளை அதிகம் வருத்தியது.

‘ஏன் என்னிடம் செல்வம் உண்மையைச் சொல்லவில்லை?’ அவளால் தாங்க முடியவில்லை. ஏற்கனவே அவன் வீடு வைத்த பிறகுதான் திருமணம் செய்வேன் என்று சொன்னது வேறு நினைவிற்கு வந்து இம்சித்தது.

‘இன்னும் தாமதிக்கச் சொல்வானோ?’ அவளால் மேலும் சில வருடங்கள் கடப்பதை நினைத்து கூட பார்க்க முடியவில்லை.

சுவாமி, அவளிடம் பலமுறை திருமணத்தைப் பற்றி கேட்டுவிட்டார். அவள்தான் பிடிகொடுக்காமல் இருக்கிறாள். இன்னும் எத்தனை நாள் தாங்கும் என்பதே அவளுக்குத் தெரியாமல் இருக்கையில், மாதங்கள், வருடங்களை அவள் எப்படிக் கடப்பதாம்?

அவள் இப்படி திணறிக் கொண்டிருந்தால், பத்மாவும், மல்லிகாவும் வேறு விதமாக தவித்துக் கொண்டிருந்தார்கள். எப்பொழுது பல்லவி வாய் திறப்பாள் என்பதே அவர்களது வேண்டுதலாக இருந்தது.

பத்மா அவளை சந்திக்க முயல்வதை, பிரஷாந்தின் வார்த்தைகள்தான் கட்டிப் போட்டிருந்தன. இந்த நிலையில், மல்லிகா பல்லவியின் ஜாதகத்தைப் பார்க்க, இருபத்து ஐந்து வயதில் அவளுக்கு திருமணம் நடக்கவில்லை என்றால், அவளுக்கு திருமணம் நடக்கவே வாய்ப்பில்லை என குண்டைத் தூக்கிப் போட்டிருக்க, மாய்ந்து போனார்.

அதைவிட, அந்த வயதில் அவளுக்கு மிகப்பெரும் கண்டம் இருப்பதாகவும், சேர்த்து உரைக்க, நடுங்கிப் போனார். அனைத்தையும் அவர் வந்து ஒப்பித்தது பிரஷாந்திடமே.

தன் கணவனிடம் உரைக்கலாம் என்றால், காதலித்து திருமணம் செய்த அவர், அந்த ஜோசியம், ஜாதகம் எதையும் துளியும் நம்புவது இல்லை. அப்படியிருக்கையில், மல்லிகா ஜாதகம் பார்த்தார் எனத் தெரிந்தாலே, ‘ஏன் அப்படிச் செய்தாய்?’ என ஆடித் தீர்த்துவிடுவார்.

அந்த பயத்தாலேயே கணவனிடம் உரைக்கவில்லை. மல்லிகா சொன்னவற்றைக் கேட்டவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அந்த நேரம் அங்கே ரவியும் இருக்க, பிரஷாந்த் அவனைத்தான் பார்த்தான்.

‘இடையில் புகுந்து அவன் எதையும் குழப்பிவிடக் கூடாதே என்ற கவலை அவனுக்கு’ ஆனால் ரவி எதைபற்றியும் கண்டுகொள்ளவே இல்லை.

“அத்த, நீங்க நிம்மதியா போங்க..., இப்போதானே பல்லவிக்கு இருபத்திநாலு வயசு ஆகுது. இன்னும் ஒரு வருஷத்தில் என்ன வேண்ணா நடக்கலாம்” அவரை சமாதானம் செய்து அனுப்பி வைத்தான்.

அவர்கள் பொறுமையும் கரையும் நாளும் வந்தது. மல்லிகா கணவனை துளைத்தெடுக்க, மறுநாளே அவளிடம் பேச முடிவெடுத்தார். காலையில் தந்தை கடைக்குப் போகவில்லை என்பதிலேயே, அவர் தன்னிடம் பேசப் போகிறார் என்பதை உணர்ந்து கொண்டாள்.

தாயும் அங்கே இருக்க, இன்று தான் தப்பிக்க முடியாது என்பது அவளுக்குப் புரிந்து போனது. மல்லிகா, பத்மாவை அழைத்திருக்க, அவரும் அந்த நேரம் வந்து சேர்ந்தார்.

பிரஷாந்த் அப்பொழுது வேலைக்கு கிளம்பிச் சென்றிருக்க, ரவி மட்டுமே வீட்டில் இருந்தான். எனவே, “ரவி, அண்ணி கல்யாண விஷயமா என்னை பேச கூப்பிடுறாங்க, நான் போயிட்டு வர்றேன்...” அவனிடம் உரைத்துச் செல்ல, உடனடியாக அவன் பிரஷாந்துக்கு அழைத்தான்.

அவன் அழைக்கவே, “என்னடா இந்த நேரம்...?” அவன் கேட்க, ரவி விஷயத்தைச் சொல்லவே, அடுத்த நிமிடம் தன் வேலையை அப்படியே நிறுத்திவிட்டு, காரை புயல் வேகத்தில் செலுத்தத் துவங்கியிருந்தான்.

‘ஆண்டவா..., அசம்பாவிதமா எதுவும் நடந்துடக் கூடாது...’ மனம் வேண்டுதலை வைத்தது.

வீட்டிலோ, “அம்மாடி..., இங்கே வா., இப்படி உக்கார்...” தந்தை அழைக்கவே, நடுங்கும் மனதோடு அவர் எதிரில் வந்து அமர்ந்தாள். கூடவே, தாயையும், பத்மாவையும் ஒரு

பார்வை பார்த்தாள். அவர்கள் முகங்களில் இருந்த பிரகாசத்துக்கான காரணம் அவளுக்குப் புரியவே இல்லை.

“சொல்லுங்கப்பா...” அவள் கேட்க,

“நீ ஆறு மாசம் டைம் கேட்ட, நான் ஒரு வருஷம் கொடுத்துட்டேன். இப்போ சொல்லு, கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பாக்கட்டுமா?” அவர் கேட்க, பதில் சொல்ல முடியாமல் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

“என்ன பாக்கட்டுமான்னு கேட்டுகிட்டு, பாக்குறேன்னு சொல்லுங்க, அப்போதான் உங்க மக வாயைத் தொறப்பா?” மல்லிகா இடையில், சுவாமி முறைக்க, பத்மா அவர் கரத்தைப் பிடித்து தடுத்தார்.

“உன் மனசில் யாராவது இருக்காங்களாம்மா...?” சுவாமி அவள் தலையை பாசமாக வருடி வினவ, அவள் கண்கள் மெதுவாக கலங்கியது.

“இப்போதான் சரியா கேட்டு இருக்கீங்க...” மல்லிகா தன் சந்தோஷத்தை அடக்க முடியாமல் குதூகலிக்க, பல்லவிக்கோ அழுகை பொங்கியது. அதை கட்டுப்படுத்திக் கொண்டாள். இப்படி ஒரு பெற்றவர்கள் யாருக்கு கிடைப்பார்கள்?’.

அதற்குமேல் அவளால் மௌனமாக இருக்க முடியாமல், மெதுவாக தலை அசைக்க, “பாத்தீங்களா..., நான் சொல்லல..., நல்லா கேட்டுகோங்க...” இப்பொழுதும் மல்லிகாவே பேசினார்.

“யாரும்மா அது...? எங்கே இருக்கான்? என்ன பண்றான்...?” அவர் பொறுமையாக வினவ, சரியாக அதே நேரம், காரை போர்டிகோவில் கிரீச்சிடும் சத்தத்தில் நிறுத்திய பிரஷாந்த், நாலுகால் பாய்ச்சலில் வீட்டுக்குள் நுழைந்தான்.

பெரியவர்கள் அனைவரின் கவனமும் அவன்மேல் பதிய, “அதோ..., அவனே வந்துட்டானே” மல்லிகா, உற்சாக பந்தாக

பதில் கொடுக்கும் முன்னர்,

“என்னோட பி.ஃபார்ம் படிச்சவர்ப்பா..., பேர் செல்வம். அவர் வெளிநாட்டில் இருக்கார். இன்னும் ஒரு வருஷத்தில் வந்துடுவார். அதான்ப்பா இவ்வளவு நாள் உங்ககிட்டே சொல்லலை...” அவள் சொல்லி முடிக்க, மல்லிகாவுக்கும், பத்மாவுக்கும் தாங்கள் கேட்டதை நம்பவே முடியவில்லை.

அதிர்ச்சி என்றால், பேரதிர்ச்சி..., பத்மா தன் நெஞ்சில் கை வைத்து அதிர, மல்லிகாவோ சிலையாகிப் போனார் என்றே சொல்லலாம்.

# பகுதி - 6

தன் மகளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சுவாமி. “இதைச் சொல்ல ஏம்மா இவ்வளவு தயக்கம்? உன் ஆசைக்கு குறுக்கே நாங்க நிப்போமா என்ன? உன் ஆசை தாம்மா எங்களுக்கு முக்கியம். இன்னும் ஒரு வருஷம் தானே, அவர் வரட்டும். நாமளே போய் பேசலாம். நீ இதை முன்னாடியே சொல்லியிருந்தால், நான் உன்னை கேட்டு தொல்லை செய்திருக்கவே மாட்டேனே.

“அவரோட நம்பர் கொடு, நானே பேசறேன். ஒரு முறை பேசிட்டா எனக்கு நிம்மதியா இருக்கும்…” அவர் கேட்க, எந்த எண்ணை அவள் கொடுப்பதாம்?

“அவரோட பழைய நம்பர்தான் என்கிட்டே இருக்கு, புது நம்பர் என்கிட்டே இல்லப்பா” அவள் தயங்க, ஒரு நொடி அவர் புருவம் சுருங்கியதைத் தவிர அவரிடம் வேறு மாற்றம் இல்லை.

“பரவாயில்லம்மா, அவரோட நம்பர் கண்டுபிடிக்கிறதா கஷ்டம்? அப்பா ஏதாவது செய்றேன். நீ மனசுக்குள் எதையும் போட்டு குழப்பிக்காதே, போ” அவளை அனுப்பினார்.

தந்தையின் எதிரில் அதற்குமேல் இருக்க முடியாமல் வேகமாக தன் அறைக்குத் திரும்பிவிட்டாள். பிரஷாந்தோ, அவர்கள் பேச்சுக்கு நடுவில் புகப் பார்த்த மல்லிகாவை, அவர் கை பற்றி அடக்கியவன், ‘எதுவும் சொல்லாதீங்க’ என்னும் விதமாக பார்வையால் கெஞ்சினான்.

பத்மா எதையோ சொல்ல முயல, “அம்மா, நீங்க வீட்டுக்கு போங்க, நான் வந்து பேசறேன்…” அவரை முதல் வேலையாக அங்கிருந்து கிளப்பினான்.

மல்லிகாவை மட்டும் என்றால் அவனால் சம்மாளிக்க முடியும். ஒரே நேரத்தில் இருவர் என்றால், அது அவனால் முடியாத காரியம். அது மட்டுமல்ல, வீட்டில் ரவி

இருக்கிறான், அவன் தாயை சம்மாளிப்பான் என்பது அவனது எண்ணம்.

“அத்த, இப்போ எதுவும் சொல்லாதீங்க...” அவரிடம் சின்னக் குரலில் உரைத்தவன், தன் மாமாவின் பக்கம் திரும்பினான்.

அப்பொழுதுதான் அவனைப் பார்த்தவர், “பிரஷாந்த், பல்லவி சொன்ன பையனை உனக்குத் தெரியுமா? அவன் விலாசம், போன் நம்பர் எல்லாம் கொஞ்சம் கண்டுபிடி...” அவனிடமே சொல்ல, மல்லிகாவுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“மல்லிகா, எனக்கு நேரமாச்சு நான் கிளம்பறேன்...” அவர் செல்லவே,

“பிரஷாந்த், என்னப்பா இது? உனக்கு முன்னமே தெரியுமா? தெரிஞ்சுமா பேசாமல் இருந்த? அவ மனசுக்குள் இருப்பது தெரியாமல் நான் வேற உன்னை” அவன் கரத்தை பற்றியவர், தவறு செய்த குழந்தையாக கண்ணீர் விட, அவனால் தாங்க முடியவில்லை.

“அத்த, இப்போ எதுக்கு அழறீங்க? நான் வருத்தப்படுவேன்னா? அதெல்லாம் எதுவுமே இல்லை. உங்கள் கேலிக்கு எல்லாம் நான் ஈடு கொடுக்க காரணமே, பல்லவியே அவ மனசில் இருப்பதை சொல்வேன்னு சொன்னதால் தான்.

“எனக்கு அவளை கட்டிகிட்டா நல்லா இருக்கும்னு தோணிச்சு அவ்வளவுதான். மத்தபடி, நாங்க என்ன ஒண்ணு மண்ணா பழகினோமா என்ன? நீங்க கவலைப்படாமல் இருங்க, எல்லாம் பல்லவி மனசுப்படி நடக்கும்.

“தேவையில்லாமல், நான் மனசில் இப்படி ஒரு நினைப்பை வச்சிருந்தேன்னு யார்கிட்டேயும் சொல்லி வைக்காதீங்க.

அது நல்லா இருக்காது. நமக்கு பல்லவி வாழ்க்கைதான் முக்கியம், அவளோட சந்தோஷம்தான் முக்கியம்.

“இந்த விஷயம் வெளியே தெரிந்தால், கேக்குறவங்க மனசு ஒண்ணுபோல் இருக்காது. இதை இத்தோட மறந்துடுங்க. பல்லவி மனசுபோல் அவளுக்கு வாழ்க்கை அமையணும். என்னோடது சின்ன நினைப்புதான், அதை பெருசாவே எடுக்காதீங்க” தன் கவலை மறைத்து, அவரைத் தெளிய வைத்தான்.

“உனக்கு வருத்தமா இல்லையாப்பா...?” அவன் கரத்தை இறுக பற்றிக்கொண்டு கேட்டார்.

“இல்லவே இல்லை. விஷயம் தெரிஞ்ச இத்தனை நாளில், நான் என்னைக்காவது வருத்தப்பட்டு பாத்திருக்கீங்களா? போங்க, போய் வேலையைப் பாருங்க...” அவரை அனுப்ப முயன்றான்.

“பிரஷாந்த், பத்மா...” அவர் இழுக்க,

“அவங்களுக்கும் சின்ன அதிர்ச்சிதான், இப்போ உங்ககிட்டே நான் சொன்னதையே அவங்ககிட்டே சொல்லிட்டு போறேன்..., அதையெல்லாம் நீங்க யோசிக்கவே செய்யாதீங்க...” பிடிவாதமாக உரைத்துவிட்டு அங்கிருந்து கிளம்பினான்.

அவனுக்கு நிச்சயம் தெரியும், மல்லிகாவை சம்மாளித்ததுபோல், பத்மாவை சம்மாளிக்க முடியாது என்று. அவன் மனதில் வேரூன்றியிருந்த காதல் அவருக்கு நன்றாகத் தெரியுமே. அவரை என்ன சொல்லி சம்மாளிப்பது என்பது மட்டுமே அவனது கவலையாக இருந்தது.

தன் காரை வீட்டுக்குச் செலுத்த, அவன் காரை நிறுத்தும்பொழுதே தாயின் அழுகுரல் அவனைத் தீண்டியது. “என் புள்ளைக்கா ரவி இப்படி ஆகணும்?” அவர் புலம்ப,

“அம்மா, அண்ணனுக்கு என்ன ஆயிடுச்சுன்னு இப்படி அழறீங்க. உங்களுக்கு இன்னைக்குத் தெரிந்த விஷயம், அவனுக்கு ஆறு மாசத்துக்கு முன்னாடியே தெரியும். அப்படியிருந்தும் அவன் ஏதாச்சும் காமிச்சானா? நீங்களா பெருசா எதையும் கற்பனை பண்ணிக்காதீங்க.

“இப்போ என்ன..., அவன் வேற கல்யாணம் பண்ணிக்க மாட்டானோ என்பதுதானே உங்க கவலை, அதோ அவனே வர்றான்..., அவன்கிட்டே கேளுங்க. சும்மா ஒப்பாரி வைக்காதீங்க” அவன் சொல்ல, சட்டென தன் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டவர், பிரஷாந்தின் பக்கம் திரும்பினார்.

“பிரஷாந்த்...” ஓடி வந்து அவனை அணைத்துக் கொள்ள, தாயை ஒரு கையால் அணைத்தவன், “அம்மா, எனக்கு பல்லவியை பிடித்தது, இல்லன்னு எல்லாம் நான் சொல்லலை. அதுக்காக அவதான் வாழ்க்கை, அவ இல்லன்னா எனக்கு எதிர்காலமே இல்லன்னு எல்லாம் எதுவும் இல்லை.

“நீங்க எனக்கு ஒரு பொண்ணைப் பாருங்க..., அவளை நான் கட்டிக்கறேன். பல்லவி அவளுக்கு பிடிச்சவனை கட்டிக்கிட்டு சந்தோஷமா இருக்கட்டும். ஏன்..., பல்லவியைத் தவிர வேற பொண்ணு எனக்கு பொண்டாட்டியா வந்தால் அவளை ஏத்துக்க மாட்டீங்களா?” அவனும் தம்பி பேசிய அதையே ஒத்து பேச, நன்கு தெளிந்தார்.

“நிஜமாவே வேற கல்யாணம் பண்ணிக்கறியா?” அவன் கன்னம் வழிக்க,

“யம்மோவ்..., அவன் பொண்டாட்டி என்ன ஊரைவிட்டா ஓடிப் போயிட்டா, அவன் வேற கல்யாணம் பண்ணிக்க, போய் வேலையைப் பாரும்மா...” ரவி உரைக்க,

“எடு அந்த தொடப்பக்கட்டையை..., நல்ல பேச்சு பேசும்போது எப்படி பேசறான் பார்...” அருகில் அவனை அடிக்க ஏதாவது கிடைக்குமா எனத் தேட, அவன்

அங்கிருந்து ஓடுவதுபோல் பாவ்லா காட்ட, அந்த இடத்தின் இறுக்கம் குறைந்தது.

“ஆனாலும் நீ முன்னமே சொல்லியிருக்கலாம்...” அவர் குறைபட,

“அம்மா, மறுபடியும் ஆரம்பிக்காதீங்க..., எனக்கு நிறைய வேலை இருக்கு, நான் கிளம்பறேன்...” அவன் செல்லப் போக, அப்பொழுதும் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்தவன், “அம்மா, இப்படியெல்லாம் பாக்காதீங்க. நான் நல்லாத்தான் இருக்கேன் போதுமா? டேய்..., அம்மாவை கொஞ்சம் கவனிச்சுக்கடா, காதல் தோல்வியில் தாடி வச்சிடுவாங்க போல...” அவன் உரைக்க, ரவி வெடித்து சிரிக்க,

“படவா...” பத்மாவின் முகத்திலும் மெல்லிய புன்னகை.

அடுத்த ஒரே வாரத்தில், வெளிநாட்டில் இருக்கும் செல்வத்தின் அட்ரஸ், போன் நம்பர், அவன் வேலை செய்யும் இடத்தில், அவனுக்கான ஐடியின் செராக்ஸ் என மொத்த தகவலோடு சுவாமியை வந்து சந்தித்தான் பிரஷாந்த்.

அவை அனைத்தும் அவன் ஏற்கனவே கலெக்ட் செய்து வைத்திருந்தவைதான். அவரது சந்தேகத்துக்கு ஆளாகக் கூடாது என்பதாலேயே ஒரு வாரத்துக்குப் பிறகு, அந்த தகவல்களை அவரிடம் கொடுத்தான்.

“அவனைப் பத்தி அங்கே விசாரிச்சியா? என்ன சொல்றாங்க?” ஒரு வருடமாக மகளை தொடர்பு கொள்ளாமல் இருப்பவன்மேல் சட்டென ஒரு நல்லெண்ணம் எழ மறுத்தது, எனவே கேட்டார்.

“குறை சொல்ற மாதிரி எதுவும் இல்ல மாமா?” அவன் அத்தோடு முடித்துக் கொண்டான்.

“அப்படியா சொல்ற...? சரி பய வரட்டும்...” அவன் கொடுத்த தகவல்களை பீரோவில் பத்திரப்படுத்தியவர், அதை அத்தோடு முடித்துக் கொண்டார்.

செல்வத்தின் வீட்டு வேலைகள் துவங்கி, அது உருவம் பெற, அவன் ஊருக்கு வருகிறான் என்ற தகவலும் அவர்களை வந்து சேர்ந்தது. “மாமா, செல்வம் நாளைக்கு ஊருக்கு வர்றான்...” பிரஷாந்த் சொல்ல,

“ஒரு ரெண்டு நாள் போகட்டும்..., அவன் வீட்டுக்கே போய் பாக்கலாம்” உரைத்தவர், தன் தாடையை தடவியவாறு எதையோ சிந்தித்தார்.

அவன் ஊருக்கு வந்த மறுநாள், “அம்மாடி..., தம்பி உன்னை வந்து பாத்தாரா?” வீட்டில் தன் சுடிதாருக்கு ஜமிக்கி வேலை செய்து கொண்டிருந்த பல்லவி, அதை விட்டுவிட்டு அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

“யார்ப்பா...?” அவள் கேட்க,

“இல்ல, செல்வம் ஊருக்கு வந்துட்டாப்ல..., அதான் கேட்டேன்” உரைத்தவர் சென்றுவிட்டார். ஆனால், அவர் சொன்னதை கேட்டவளுக்குத்தான், அதை எப்படி எடுத்துக்கொள்ளவென்றே தெரியவில்லை.

‘செல்வம் ஊருக்கு வந்துட்டாரா? ஏன் என்னிடம் சொல்லவே இல்லை? வருவதாக ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே’ அவளால் தாள முடியவில்லை.

மறுநாள் காலையே பிரஷாந்த், ரவி, சுவாமி, பிரஷாந்தின் அப்பா ராஜன் என அனைவரும் கிளம்ப, “செல்வம் வீட்டுக்குதாம்மா போறோம்” அவர் உரைக்க, அவரை எப்படி அவளால் தடுக்க முடியும்?

“என்னங்க..., பாத்து பேசுங்க...” மல்லிகா உரைக்க,

“ஏண்டி நாங்க என்ன சண்டைக்கா போறோம்? சம்பந்தம் தானே பேசப் போறோம், அதெல்லாம் எங்களுக்குத் தெரியும்…” உரைத்தவரின் குரலில் என்ன இருந்தது என்று மற்றவர்களால் உணர முடியவில்லை.

காரை பிரஷாந்த் செலுத்த, காருக்குள் ஒரு அசாத்திய மௌனம் நிலவியது. “மச்சான்…, அவங்களை கோயிலுக்கு எங்கேயாவது வர வச்சிருக்கலாமே. அங்கே நாமெல்லாம் நிக்க கூட இடம் இருக்காது போல” ராஜன்தான் அங்கே இருந்த மௌனத்தை கலைத்தார்.

“இல்ல…, எனக்கு அந்த வீட்டை பாக்கணும்…”சுவாமி அத்தோடு பேச்சை முடித்துக் கொண்டார்.

அந்த ஆடி கார், செல்வத்தின் வீட்டின் முன்னால் நிற்க, செல்வம் வெளிநாட்டின் இருந்து வந்திருக்கிறான் என்பதால், அவனது அக்கா, தங்கை குடும்பம் முழுவதும் அங்கே வந்திருக்க, அனைவரும் வீட்டில் இருந்து வெளியே வந்தார்கள்.

மொத்தமே அவர்கள் வீட்டு ஹால் அளவுதான் இருந்தது செல்வத்தின் வீடு. அவன் கட்டிக்கொண்டிருக்கும் வீடு கொஞ்சம் பெரிதாக இருந்தது.

‘யார் இவர்கள்…?’ என்பதுபோல் அனைவரும் நிற்க, செல்வமோ என்ன செய்வது எனத் தெரியாமல் பிரம்மை பிடித்து நின்றிருந்தான்.

# பகுதி - 7

செல்வத்துக்கு அந்த காலை வேளையில் தன் வீட்டின் முன்னால் வந்து இறங்கியவர்களைப் பார்த்து, தன் கண்களையே நம்ப முடியவில்லை. முதலில் தன் காதலுக்கு பல்லவியின் வீட்டில் சம்மதம் சொல்வார்கள் என்பதையே ஏற்க முடியாமல் இருப்பவன் அவன்.

அப்படியிருக்கையில், அவர்களே தன் வீட்டின் முன்னால் வந்து இறங்கினால், அவனும் என்னதான் செய்வான்? தங்கள் காதலை அவளது வீட்டில் சொல்வதற்கு மறுப்பு தெரிவித்ததன் காரணமே அவர்களது உயரம் கண்ட அச்சத்தால் தான்.

சொல்லப்போனால் அவளைக் காதலிக்கத் துவங்கியதே ஒரு விளையாட்டாகத்தான். ‘இவள் எல்லாம் என்னை எங்கே காதலிப்பாள்?’ என்ற அசட்டுத்தனத்தில் துவங்கியது, இவ்வளவு சீரியசாக முடியும் என்றே அவன் எண்ணவில்லை.

தான் வெளிநாடு செல்லும் முன்னர், தங்கள் காதலுக்கு சம்மதம் வாங்க வருமாறு அவள் அழைத்த பொழுதெல்லாம், எங்கே தன் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிவிடுவார்களோ என்ற பயத்திலேயே தங்கள் காதல் வெளியே தெரிவதை தவிர்த்தான்.

‘இந்த காதல் எல்லாம் சரிபட்டு வராது…, விட்டுவிடலாம்…’ என அவளிடம் சொல்லிவிட அவனுக்கும் ஆசைதான். ஆனால், அவள் இருக்கும் தீவிரத்தைப் பார்த்தால், ஏதாவது சீன் கிரியேட் பண்ணி விடுவாளோ என்பதாலேயே அதை தடுத்து வந்தான்.

தான் வெளிநாடு சென்று, ஒரு தொடர்பும் இல்லாமல் போனால் தன்னை மறந்துவிடுவாள் என எண்ணினால்…, அது தொடர்வதை எண்ணி உறைந்து போனான். தான்

வருவதை, தங்கள் வீட்டுக்கே இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் சொல்லியிருந்தான்.

அப்படியிருக்கையில் இவர்களுக்கு எப்படித் தெரியும்? அதுவேறு அவன் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது.

“வந்தவங்களை வாங்கன்னு சொல்லாமல் எப்படி நிக்கறான் பார்?” ரவி, பிரஷாந்தின் காதில் முணுமுணுக்க, ‘ம்ச்…’ ஒற்றை குரலில் அவனை அடக்கினான்.

“என்ன செல்வம்…, எங்களை எல்லாம் யார்ன்னு தெரியுதா?” பிரஷாந்த் கேட்க,

“ஹான்…, ம்…, வாங்க…” பழைய வீட்டில் அவர்களை அழைக்க முடியாமல், புதிதாக கட்டிக்கொண்டிருக்கும் வீட்டின் உள்ளே அழைத்தவன், அங்கே இருந்த மர பெஞ்சை தூக்கி உள்ளே போட்டான்.

“யாருடா இது…?” அவனது தாய், செல்வத்திடம் கேட்க, அவனோ தடுமாறிப் போனான்.

“அட, அதைச் சொல்லத்தானே வந்திருக்கிறோம். உள்ளே வாங்க. பையனோட அப்பா, பெரியவங்க எல்லாம் உள்ளே வாங்க…” ராஜன் உரைக்க, எதற்கு என்று புரியவில்லை என்றாலும், அனைவரும் உள்ளே சென்றார்கள்.

அவர்களது பட்டு வேஷ்டியும் படகு காரும், உடன் வந்திருக்கும் வாலிபர்களும், அவர்கள் சொல்லவில்லை என்றாலும் விஷயத்தை யூகிக்க முடியாதா என்ன?

ராஜனும், சுவாமியும் பெஞ்சில் அமர, ரவியும், பிரஷாந்தும் அவர்கள் அருகில் நின்றார்கள். “நான் யார்ன்னு தெரியுதா?” அவர் கேட்க, டிவியில் வரும் சில விளம்பரங்களில் அவரைப் பார்த்த நினைவு, அங்கே இருந்த பெண்களுக்கு வந்தது.

செல்வத்தின் அக்கா மகளோ, “சுவாமி ஜவுளிக்கடை விளம்பரத்தில் வருவீங்களே...” அங்கிருந்த பெரியவர்கள் வார்த்தை வராமல் தவிக்க, சின்னவள் குரல் கொடுத்தாள்.

“ஏய்..., பேசாமல் இங்கே வாடி...” குழந்தையை அருகே இழுத்துக் கொண்டாள் பெற்றவள்.

இவ்வளவு ஆன பிறகும், வாய் திறக்காமல் நின்றிருந்தான் செல்வம். அவன் செய்கையைப் பார்த்த பிரஷாந்துக்கும், ரவிக்கும் பிபி எகிறியது. ‘எப்படி மரமாட்டம் நிக்கறான்..., வாயைத் தொறந்து ஏதாவது சொல்லலாம் தானே’ மனம் காந்தியது பிரஷாந்துக்கு.

“தம்பி, நாங்க என்ன விஷயமா வந்திருக்கோம்னு தெரியுதா?” ராஜன், செல்வத்திடம் கேட்க, அப்பொழுதும் தலையை ஒரு விதமாக அசைத்தானே தவிர, ஒரு வார்த்தை பேசவில்லை.

“தம்பி ரொம்ப கூச்சப்படுது..., நாங்களே சொல்றோம்..., உங்க பையன், எங்க பொண்ணோட பழகியிருக்கார். எங்களுக்கு இந்த அந்தஸ்த்து, பணம், இதிலெல்லாம் நம்பிக்கை இருந்ததில்லை. பணம், இன்னைக்கு எங்ககிட்டே இருக்கு, நாளைக்கே உங்ககிட்டே வந்துடலாம்.

“மனசுதான் முக்கியம், எங்க பொண்ணு ஆசைக்கு எதிரா நாங்க இருக்க விரும்பலை, அதான்..., பேசி கல்யாணத்தை முடிவு பண்ணலாம்னு வந்திருக்கோம்” அவர் உரைக்க, அங்கே ஊசிவிழுந்தால் ஓசை கேட்கும் அமைதி.

“ஐ..., மாமா உனக்கு கல்யாணமா...?” அக்கா குழந்தை குதூகலிக்க, அதன் முதுகில் ஒன்றைப் போட்டு இழுத்துச் சென்றாள் அதன் தாய்.

“வாயை மூடுடி சனியனே..., பெரியவங்க பேசும்போது உனக்கு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு” மேலும் குழந்தையை அவள் அடிக்க, அந்த அடி தங்களுக்கே விழுவதுபோல் உணர்ந்தார்கள்.

“நாங்க கேட்டதுக்கு பதிலே சொல்லலையே…” அந்த அவமானத்தை சகித்துக் கொண்டு, ராஜன் கேட்டார்.

“ஐயா…, இப்படி திடுதிப்புன்னு கேட்டால் எப்படி? இப்போதான் என் மகன் வீடு வைக்கவே ஆரம்பிச்சு இருக்கான். இன்னும் ஒரு வருஷம் போனால் அதை முடிச்சிடுவான். அதுக்குப் பிறகுன்னா கல்யாணத்தை வச்சுக்கலாம்” செல்வத்தின் தாய் உரைக்க, அவர்கள் சொல்வதை ஏற்கத்தான் முடியவில்லை.

“நீங்க சொல்றது எல்லாம் சரிதான்…, ஆனா பொண்ணுக்கு வயசாகிட்டே போகுதே” அவர் இழுக்க, அவர் அதை கண்டுகொள்ளவே இல்லை.

அவர்கள் கார் வந்து நின்ற நேரம் துவங்கி, வீட்டைச் சுற்றி எழும் மனித தலைகளும், இங்கே என்ன நடக்கிறது என ஆராயும் மற்றவர் பார்வையும், வந்திருந்தவர்களுக்கு சங்கடத்தை அளித்தது.

“தம்பி, நீங்க என்ன சொல்றீங்க?” ராஜன் அவனிடமே நேரடியாக கேட்க,

“அவன் சின்னப் பையன், அவனுக்கு என்ன தெரியும்? அதான் நான் சொல்லிட்டேனே” அவர் இடைபுக, ராஜனின் பார்வை அவனிடமே நிலைத்தது.

‘சின்னப் பையனுக்கு காதலிக்க மட்டும் தெரியுமோ…?’ சுள்ளென எழுந்த கோபத்தை பெரியவர்களின் முகத்துக்காக கேட்காமல் விட்டான் பிரஷாந்த்.

செல்வம் இப்படி பிடித்து வைத்த பிள்ளையாராக இருப்பதைப் பார்த்தால், ‘இவன் நிஜமாகவே பல்லவியை விரும்பினானா?’ என்னும் பெரும் வினா எழுந்து அவனை அலைக்கழித்தது.

“அம்மா சொல்லிட்டாங்களே…” செல்வம் மென்று முழுங்க,

“அவங்க சொன்னது இருக்கட்டும், நீங்க சொல்லுங்க…” அவனது பதில் முக்கியம் என்பதுபோல் அசையாமல் இருந்தார்.

“ஒரு வருஷத்தில் வீட்டை முடிச்சுட்டு பிறகு…, பண்ணிக்கறேன்…” தன் தாயைப் பார்த்தவாறே அவன் பதில் உரைக்க,

“உங்க பேச்சை நாங்க நம்பறோம். ஒரு வருஷம் கழிச்சே கல்யாணத்தை வச்சுக்கலாம்” இருக்கையில் இருந்து எழுந்து கொண்டார். ஒரு பேச்சுக்காக என்று கூட, தண்ணீரோ, டீயோ அவர்கள் கொடுக்காததை குறித்துக் கொண்டார்.

‘போகலாம்…’ என்பதுபோல் ராஜன் கண்ணசைக்க, பிரஷாந்தும், ரவியும், செல்வத்தை ஒரு கொலைவெறிப் பார்வை பார்த்தவாறே வெளியேறினார்கள்.

அவர்கள் செல்லவே, செல்வத்தின் தாய், அவனை பிடிபிடியென்று பிடித்துக் கொண்டார். “ஏண்டா…, அவங்க சொல்லிட்டுப் போவதெல்லாம் உண்மையா?” அவர் கேட்க, பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

“எத்தனை நாளா இது நடக்குது?” அந்த கேள்விக்கும் அவன் இறுக்கமாகவே இருக்க, “கேக்குறதுக்கு பதில் சொல்லுடா. படிச்சு முடிக்கிற வரைக்கும், கடன் வாங்கியாவது என்னை படிக்க வை, நான் இந்த குடும்பத்தை தாங்கறேன்னு சொன்ன,

“இப்போ படிப்பும், பணமும் வந்த உடனே, உன் வாழ்க்கையை பாத்துக்கலாம்னு முடிவு பண்ணிட்டே அப்படித்தானே. விட மாட்டேண்டா. இந்த இடம் இன்னும் உன் அப்பா பேர்லதான் இருக்கு, இதை வித்து நாங்க எங்க பாட்டை பாத்துக்கறோம். நீ எப்படியோ ஒழி…” சகட்டு மேனிக்கு பேச அவனால் எதுவும் சொல்ல முடியவில்லை.

இரண்டு மாதங்கள் வீட்டில் இருந்தவன், ஒரு முறை கூட பல்லவியை சந்திக்க முயலவில்லை. ‘வீட்டில் எதுவும் சொல்லாதே என சொன்ன பிறகும், அவள் எப்படிச் சொல்லலாம்...?’ என கோபமாக எண்ணிக் கொண்டான்.

அவளிடம் இப்பொழுது இந்த காதல் வேண்டாம் எனச் சொல்லவும் பயமாக இருந்தது. வீடு தேடி வந்து மாப்பிள்ளை பார்த்துவிட்டு போனவர்கள், தான் முடியாது எனச் சொன்னால் என்ன செய்வார்களோ என்ற பயம் வேறு அவனைப் பிடித்து ஆட்டியது.

பல்லவியிடம் சொல்லிக் கொள்ளாமலேயே விமானம் ஏறினான். அதை உணர்ந்த சுவாமி. “பல்லவி, இன்னுமா நீ அவனை நம்புற?” அவளிடம் கேட்க,

“அவருக்கு என்மேல் கோபம்ப்பா..., அவர் வீடு வைக்க முன்னாடி உங்ககிட்டே விஷயத்தை சொல்ல வேண்டாம்னு சொல்லியிருந்தார், அதைக் கேட்காமல் சொல்லிட்டேன்னு கோபம். வீடு கட்டி முடித்தவுடன் அவரே என்னைத் தேடி வருவார் பாருங்க...” அவள் நம்பிக்கையாக உரைக்க, அவள் நம்பிக்கையை குலைக்க அவர் விரும்பவில்லை.

அவள் அப்படித்தான் எண்ணினாள். தன்மேல் இருக்கும் கோபம் வடித்தவுடன் நிச்சயம் தன்னைக் காண வருவான் என எண்ணினாள்.

பத்மாவோ, பிரஷாந்தை திருமணம் செய்துகொள்ள கட்டாயப்படுத்தத் துவங்கினார். “பிரஷாந்த், அதான் அவளுக்கு கல்யாணம் வேற இடத்திலன்னு முடிவாகிடுச்சே, இன்னும் நீ ஏன் காத்திருக்கணும்? உன் கல்யாணத்தை முடிச்சுடலாம்...”.

“ரெண்டு குடும்பத்துக்கும் ஒரே பொண்ணு, அவளுக்கே இன்னும் கல்யாணம் ஆகலை, அதுக்கு முன்னாடி எனக்கா? சும்மா விளையாடாமல் போங்கம்மா” தன்மையாகவே தன் மறுப்பை வெளியிட்டான்.

“ரவி, என்னடா இவன் இப்படி சொல்றான்?” அவனிடம் கேட்க,

“நானும் வயசுக்கு வந்து பத்து வருஷமாச்சு..., என்னை கண்டுக்க மாட்டேங்கறீங்க, கல்யாணம் இப்போ வேண்டாம்னு சொல்ற அவன் பின்னாடியே தொங்குங்க...” அவன் குறைபட, தன் கையில் இருந்த பாத்திரத்தால் அவன் தலையில் ‘நங்’ என போட்டுவிட்டு சென்றார்.

“ஸ்..., ஆ...” தன் தலையை பரபரவென தேய்த்துக் கொண்டவன், “என்னைக்காவது ஒரு நாளைக்கு எவளையாவது கல்யாணம் பண்ணி இழுத்துட்டு வரப் போறேன் பாருங்க, அப்போ தெரியும்...” அவன் சொல்ல, அவனை கோபமாக முறைத்தவர்,

“கல்யாணம் பண்ண பிறகு எதுக்குடா அவளை இழுத்துட்டு வரணும்? அவளே உன்கூட வருவாளே...” அவர் அதி முக்கியமான சந்தேகத்தை கேட்க, ‘ஞே’ என விழித்தான்.

“நான் உங்களுக்கு தெரியாமல் கல்யாணம் பண்ணுவேன்னு சொல்றேன், அதை கண்டுக்காமல் கேலி பண்றீங்களா?” ஆத்திரமாக எழுந்து அவரிடம் செல்ல, அடக்க மாட்டாமல் சிரித்தார்.

“உனக்கு அப்படி கல்யாணம் நடந்தால்தான் உண்டு...” சிரிப்புக்கு நடுவில் அவர் பேச,

“ச்சே..., வேதனை அவமானம் வெட்கம்..., ஐயஹோ...” அவன் சிவாஜி ஸ்டையிலில் புலம்ப,

“ஏண்டா, புதுசா அவமானப்படுற மாதிரி இவ்வளவு பீல் பண்ற...” அவர் அதற்கும் கேலி பேச, இப்பொழுது பிரஷாந்தின் சிரிப்பு சத்தம் அவர்களைத் தீண்டியது.

நாட்கள் இதே வேகத்தில் கடக்க, செல்வத்தின் வீடு முழுமை பெற்றது. கூடவே, அவன் இந்தியா வரும் நாளும் நெருங்கியது. அதை அறிந்த பிரஷாந்த், விஷயத்தை

சுவாமியிடம் சொல்வதா வேண்டாமா என குழம்பிப் போனான்.

# பகுதி - 8

செல்வம் ஊருக்கு வந்த ஒரு வாரத்தில் அவனது வீட்டின் கிரகப்பிரவேசம் இருக்க, அதை அறிந்த சுவாமி திகைத்துப் போனார். பெரிதாக பத்திரிகை அடித்து விழா எடுக்கவில்லை என்றாலும், அவனது நெருங்கிய சொந்தங்களை அவர்கள் அழைக்க, அவனுக்கு பெண் கொடுப்பவர்கள் என்னும் விதத்தில் அவர்களை அழைப்பான் என்று எதிர் பார்த்தார்.

பிரஷ்ந்தும் அவனது நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டுதான் இருந்தான். அங்கே எதுவோ சரியில்லை என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. ஆனால் அது என்னவென்று அவனுக்குப் புரியவில்லை. புரியாத விஷயத்தை அவன் என்னவென்று ஆராய?

அவனை அழைத்த சுவாமி, “பிரஷாந்த், செல்வம் உன்கிட்டே எதுவும் பேசினானா? நீ அவனைப் போய் பாத்தியா?” என்னதான் இருந்தாலும் அவர் மகளைப் பெற்றவர், அவரது உயரம் எதுவாக இருந்தாலும், மகளது விருப்பத்துக்காக அடி மட்டம் வரைக்கும் இறங்கிப் போக தயாராக இருந்தார்.

“இல்ல மாமா, அவனை என்னன்னு போய் பாக்க? ஏற்கனவே நாம தெளிவா பேசிட்டோம். அவங்கதான் வீடு கட்டி முடித்தவுடன் கல்யாணத்தை வச்சுக்கலாம்னு சொன்னாங்க. இப்போ…, சரி எதுக்கும் அவங்க கிரகப்பிரவேசம் முடிந்தவுடன் போய் பார்க்கலாம்…” தன் உள்ளத்தின் சந்தேகத்தை அவரிடம் வெளிப்படுத்தவில்லை.

அவன் பேச்சை அப்படியே ஏற்றுக் கொண்டவர், பொறுமையை கடைபிடித்தார். மற்றவர்கள் பொறுமையாக இருக்கலாம். ஆனால், அவனோடு வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செல்லப்போகும் அவள் எப்படி பொறுமையாக இருக்க முடியும்.

உடனே அவனைச் சந்திக்க வேண்டும் என்ற வேகம். இருக்கும் நிலையில் அவள் தனியாக எங்கும் செல்ல முடியாது என்பது அவளுக்குத் தெரியும். எனவே பிரசாந்தை அழைத்தவள், “மாமா, எனக்கு அவரைப் போய் பாக்கணும், பிளீஸ் ஹெல்ப் பண்ணுங்க. அப்பா என்னை தனியா எங்கேயும் அனுப்ப மாட்டாங்க..., சோ பிளீஸ்...” அவனிடம் கெஞ்ச, அதைக் கண்கொண்டு காண முடியவில்லை.

அவள் கண்ணால் பார்ப்பதையே நிறைவேற்றி வைக்கும் வீட்டில் பிறந்தவள். இப்பொழுது வாழ்க்கைத் துணையாக ஒருத்தன் வேண்டுமென்று கேட்கிறாள், அதை செய்துகொடுக்க முடியாத நிலையில் இருப்பதை எண்ணி பெரிதும் கலங்கினான்.

“நான் ஏற்பாடு பண்றேன் பல்லவி. நீ அழாதே...” அவளை இழுத்து தன் நெஞ்சோடு சாய்த்துக்கொண்டு ஆறுதல் சொல்ல கைகளும், தேகமும் பரபரக்க, அதைச் செய்ய முடியாமல், அவள் வருத்தத்தை கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்க்கும் நிலையை அடியோடு வெறுத்தான்.

அதேபோல், செல்வத்தின் போக்கை, அதில் இருக்கும் மாறுதலை, உண்மையை அவளிடம் உரைக்க முடியாததை எண்ணி தன்னையே வெறுத்தான்.

செல்வத்தின் வீட்டிலோ, கிரகப்பிரவசத்தோடு சேர்த்து, அவனது திருமண நிச்சயமும் அரங்கேறிக் கொண்டிருந்தது. நெருங்கிய சொந்தங்களுக்கு மட்டுமே அழைப்பு என்பதால், வெளியே அவனது நிச்சய விஷயம் தெரியாமலே போனது.

செல்வம் ஊருக்கு வருகிறான் எனத் தெரிந்த உடனேயே அவனுக்கு பெண் பார்க்கத் துவங்கி விட்டார்கள் அவனைப் பெற்ற தாயும், அக்காவும். ‘அதெப்படி அவன் தங்களை மீறி ஒன்றைச் செய்யலாம் என்ற கோபம் அவர்களுக்கு.

பல்லவியின் சொத்து முழுவதும் செல்வத்துக்கு கிடைக்கும் என்றாலும், தன் மகனை அவர்களுக்கு விட்டுக் கொடுக்க

அவர்கள் தயாராக இருக்கவில்லை. அவன் எப்பொழுதும் தங்கள் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும், தங்கள் சொல்பேச்சை கேட்க வேண்டும் என பிடிவாதமாக நினைத்தார்கள்.

அவனுக்கு பெண் பார்ப்பதாக அவனிடம் உரைக்கவும் இல்லை. அவன் ஊருக்கு வந்த அன்றைக்குத்தான் அவனிடம் உண்மையை உரைக்க, பெற்றவளிடம் எப்பொழுதுமே மறுத்து பேசியிராத அவன் அப்பொழுதும் மறுத்துப் பேசவில்லை.

அவனது அமைதியே அவனது சம்மதத்தை உரைக்க தைரியமாகவே பெண் பார்த்து முடிவு செய்தார்கள். பெண்ணின் பெயர் கயல்விழி, டீச்சராக இருக்கிறாள் என உரைக்க, 'அப்படியா...?' என கேட்டுக் கொண்டவன், புகைப்படத்தில் மட்டுமே அவளைப் பார்த்தான்.

திருத்தமான முகம், குறை என்று சொல்வதற்கு எதுவும் இல்லை. பெண்ணின் தகப்பனார் தேங்காய் வியாபாரி. அவர்கள் கேட்ட வரதட்சணையை கொடுக்க அவர் தயாராக இருந்தார்.

மாப்பிள்ளை வெளிநாட்டில் மருந்து கம்பெனியில் வேலை, கை நிறைய சம்பளம் என்பதே அவருக்கு போதுமானதாக இருந்தது. கயல்விழிக்கு ஒரு தங்கை தேன்மொழி. நிச்சயத்துக்கு பெரிதாக ஆட்கள் வேண்டாம் என செல்வத்தின் வீட்டில் உரைக்க, அவர்களும் அவ்வளவாக ஆட்களை அழைத்து வரவில்லை.

கிரகப்பிரவேசத்தின் அன்றே, செல்வத்தின் வீட்டில் வைத்து நிச்சயம் செய்ய, பத்தே நாட்களில் திருமணம் என முடிவு செய்யப்பட்டது. கயல்விழியும், செல்வமும் அன்றுதான் நேரில் பார்க்கிறார்கள். அதற்கு முன்பாக போட்டோவில் ஒருவர் மற்றவரை பார்த்திருந்தாலும், நேரில் பார்ப்பது முதல்முறை.

கயல்விழி செல்வத்தை ஓர விழியில் கவனிக்க, செல்வம் கொஞ்சம் டென்ஷனில் இருப்பதுபோல் தோன்றியது. ‘கிரகப்பிரவேஷ டென்ஷனாக இருக்கும்’ என தனக்குத் தானே அமாதானம் செய்து கொண்டாள்.

நன்றாக படித்திருக்கிறான், வெளிநாட்டில் வேலை பார்க்கிறான், தன்னிடம் சகஜமாக பேசுவான் என அவள் எதிர்பார்க்க, அவள் பக்கமே அவன் திரும்பவில்லை.

‘எப்படி இருக்கிறாய்? என்னைப் பிடித்திருக்கிறதா?’ சம்ப்ரதாய வார்த்தைகளை கூட அவன் உரைக்காமல் போக, அவளுக்கு அதை எப்படி எடுத்துக்கொள்ளவென்றே தெரியவில்லை. அவனிடம் பேச கொள்ளை ஆசை இருந்தாலும், அவனாகத் துவங்காமல், அவளாகப் பேசவும் நாணம் தடுத்தது.

‘சரி திருமணத்துக்குப் பிறகு என்னிடம் பேசித்தானே ஆகணும். அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்…’ எண்ணியவள் அதன் பிறகு எதுவும் செய்யாமல் அமர்ந்து கொண்டாள். அதோடு பெரியவர்கள் அத்தனைபேர் முன்னிலையில் என்ன பேசவாம்?

நிச்சயதார்த்தம் முடிந்த மறு நிமிடம், சொந்தங்களை கவனிக்கும் சாக்கில் அவன் ஒதுங்கிவிட, தனித்து விடப்பட்டாள் கயல்விழி. “என்னக்கா உன் ஆளு அநியாயத்துக்கு வெக்கப்படுறார்…” தேன்மொழிதான் அவளைச் சீண்டினாள். தன் மனக்குறையை ஒதுக்கிவிட்டு அவளிடம் சிரித்து மழுப்பினாள்.

இன்னும் பத்தே நாட்களில் திருமணம் என்பது வேறு சற்று பதட்டத்தை அதிகரித்தது. செல்வத்தின் பெற்றவர், அக்கா, தங்கை என அனைவரும் அவளிடம் சாதாரணமாக உரையாடினாலும், அந்த வீட்டில் அவளுக்கான முதல் உறவு செல்வம், அவன் பேசாமல் அவளால் திருப்தி அடைய முடியவில்லை.

மதிய உணவை முடித்தவர்கள் கிளம்பிவிட, அப்பொழுது அவர்களை வழியனுப்ப வந்தவன், மறந்தும் அவளைக் காணவில்லை. கயல்விழிக்கு அடிமனதை ஏதோ பிசையும் உணர்வு.

செல்வத்துக்கோ, 'நான் தவறு செய்கிறேனா ? நான் செய்வது சரியா?' அவனை மீறிய தடுமாற்றம், குழப்பம். அந்த மனநிலையாலேயே கயல்விழியிடம் அவனால் சாதாரணமாக உரையாட முடியவில்லை. கூடவே, பல்லவியின் வீட்டில் இருந்து வந்து பிரச்சனை செய்வார்களோ?' என்ற பயம் வேறு அவனைப் பிடித்து ஆட்டியது.

நெருங்கிய சொந்தங்கள் மட்டுமே நிச்சயத்தில் கலந்துகொண்டார்கள் என்பதால், அந்த விஷயம் வெளியே தெரியாமலே போனது.

அந்த நேரத்தில், பிரஷாந்த் செல்வத்தை சந்தித்து, பல்லவி அவனை சந்திக்க விரும்புவதாகச் சொல்ல, "எனக்கு இப்போ கொஞ்சம் வேலை இருக்கு, நான் அவளை பிறகு சந்திக்கிறேன்..." அவன் சொல்ல, செல்வத்தை அடித்து துவம்சம் செய்யும் வேகத்தை எப்படி அடக்கினான் என்றே அவனுக்குத் தெரியவில்லை.

அடுத்த மூன்றே நாட்களில் பத்திரிகை அடித்து ஊருக்குள் விநியோகிக்க, சுவாமி வீட்டினர் அதிர்ந்து போனார்கள். "பிரஷாந்த், இது எப்படி நடந்தது? எப்படி கவனிக்காமல் விட்ட" சுவாமி அவனிடம் சாட,

"மாமா, எல்லாத்தையும் ரொம்ப ரகசியமா செஞ்சிருக்காங்க..., இதை நான் சும்மா விட மாட்டேன்..." எகிறியவன், தன் காரைக் கிளப்ப, ஓடிச்சென்று அவன் காரில் ஏறினாள் பல்லவி.

"பல்லவி, கீழே இறங்கு..., நீ அங்கே போகக் கூடாது..." மல்லிகா அவள் கை பிடித்து இழுக்க, சுவாமி நொறுங்கிபோய் நின்றிருந்தார்.

மகளது கண்களில் வழியும் கண்ணீர், அவளது தவிப்பு அவரால் கண்கொண்டு காண முடியவில்லை. அவரும் காதல் திருமணம் முடித்தவர்தானே. எத்தனையோ தடைகளைத் தாண்டி திருமணம் முடித்ததால் தானே, தன் பிள்ளை காதலித்தால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது என முடிவெடுத்திருந்தார்.

அவள் காதலுக்கு, அவளது காதலனே எதிராக இருக்கையில் அவர் யாரோடு போராட? தெய்வத்தை சபிப்பதை தவிர அவரால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

“இல்லம்மா..., அவர் என் முகத்தைப் பார்த்தால் மறுக்க மாட்டார். என்னை போக விடுங்கம்மா...” அவள் கண்ணீரோடு கெஞ்ச, மகளிடம் முரட்டுத்தனத்தை காட்ட அவரால் முடியவில்லை.

‘ஒரு பெண் இப்படி செய்யக் கூடாது...’ என அவரால் சொல்லவும் முடியவில்லை.

“மல்லிகா அவளை விடு...” ஒரு வேளை, மகள் சொல்வதைப்போல் அவன் மனம் மாறிவிட மாட்டானோ என தந்தையின் மனம் எதிர்பார்த்தது. இப்படி அவனை கட்டாயப்படுத்தி, கார்னர் செய்து இந்த திருமணம் நடந்தே ஆகவேண்டுமா’ என அவருக்குள் இருக்கும் நியாயஸ்தன் குரல்கொடுத்தாலும், ஒரு தந்தையாக அவரால் அதைச் செய்ய முடியவில்லை.

“அத்த, நான் பாத்துக்கறேன்...?” பிரஷாந்த் உரைக்க, அங்கிருந்து நகர்ந்துவிட்டார்.

அடுத்த அரைமணி நேரத்தில் செல்வத்தின் வீட்டின் முன்னால் கார் நிற்க, காம்பவுண்டுக்குள் இறங்கி ஓடினாள் பல்லவி. செல்வம் சரியாக வீட்டுக்குள் இருந்து வெளியே வர, அவளை நிச்சயம் அவன் எதிர்பார்க்கவில்லை என அவன் முகம் காட்டிக் கொடுத்தது.

“செல்வம்..., நீயா இப்படி...? என்னால் நம்பவே முடியலை. அவங்க சொல்வது எல்லாம் பொய் தானே...” ‘ஆம்’ என சொல்லிவிட மாட்டானா? அவள் குரல் எதிர்பார்ப்பில் தோய்ந்திருந்தது.

அவன் முகத்தில் ஒரு எரிச்சலும், அலுப்பும் வெளிப்பட அதைப் பார்த்தவளுக்கு பேரதிர்ச்சியாக இருந்தது.

“உன்னால் எப்படி முடிந்தது? நம் காதல் அவ்வளவுதானா? பேசு செல்வம்...” தன் காதலுக்காக அவனிடம் யாசிக்கும் நிலை, கண்களில் கண்ணீர் கொப்பளித்து, கன்னத்தில் வழிந்தது.

அவனது அமைதி அதைவிட அதிகம் உலுக்க, “என்னால் நீ இல்லாமல் வாழ முடியாது செல்வம். ஏதாவது பேசு..., ரெண்டே வருஷத்தில் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னியே..., திரும்பி என்கிட்டே வந்துடுவேன், என்னோடவே இருப்பேன்னு சொன்னியே..., எல்லாம் பொய்யா...?” அவன் அமைதியாக இருக்கவே அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

அவளது அழுகையும், பேச்சையும் கேட்டு வீட்டைச் சுற்றி ஆட்கள் கூட, அவமானமாக உணர்ந்தான். அவளது அழுகை அதிகரிக்க, பிரஷாந்த் வேகமாக அவர்களை நெருங்கினான்.

“பதில் சொல்லுடா..., பிடிச்சு வச்ச பிள்ளையாராட்டம் நிக்கறியே..., பதில் சொல்லு...” விட்டால் அவனை அங்கேயே அடித்துவிடுவேன் என வேகம் காட்ட, சுற்றி இருந்த ஆட்களில் சிலர் ஓடிவந்து அவனைத் தடுத்தார்கள்.

அப்பொழுதும் செல்வம் ஒரு வார்த்தை பேசவில்லை. “நாலு வருஷம் என்னோட பழகிட்டு, என்னக்கு நம்பிக்கையை கொடுத்துவிட்டு அதைக் கலைக்க உன்னால் எப்படி முடிந்தது...?” பல்லவி அவனிடம் கேள்வி கேட்க, தன் சட்டையில் இருந்து அவள் கரத்தை உருவியவன் அவளை விட்டு விலகி நின்றான்.

“யோவ் என்னை விடுங்கையா..., தப்பு செய்தவன் அவன், அவனை கேள்வி கேட்பதை விட்டு, நியாயம் கேட்க வந்த என்னை தடுக்கறீங்களே, நீங்க எல்லாம் மனுஷங்களா...? டேய், உன்னை நான் சும்மா விட மாட்டேண்டா..., நீ எப்படி கல்யாணம் பண்ணிக்கறன்னு நானும் பாக்கறேன்...” அவர்கள் கையில் திமிறினான் பிரஷாந்த்.

“எப்பா நீ கேக்குறது நியாயம்தான். ஆனா, நிச்சயம் முடிஞ்ச பிறகு இப்படி வந்து பிரச்சனை பண்றியே உனக்கு இது சரியா படுதா?” கூட்டத்தில் ஒரு பெரியவர் கேட்க, அவரை கொலைவெறியில் முறைத்தான்.

“என்னய்யா பொல்லாத நிச்சயம்..., ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே நாங்க வீடு தேடி வந்து பேசிட்டு போனோமே அதுக்கு என்ன சொல்றீங்க?” கத்தினான்.

“என்னப்பா நீ, நீதான் பேசுற, செல்வம் பேசாமல் தானே நிக்கறான். பாத்தா உங்க வீட்டு பொண்ணுதான் அவனை விடாமல் துரத்துன மாதிரி இருக்கு” நரம்பில்லாத நாக்கு எந்த பக்கமும் வளையும் என்பதுபோல் மற்றவன் பேச, அந்த இடத்தையே அழித்துவிடும் வேகம் அவனிடம்.

“போங்கையா நீங்களும் உங்க நியாயமும்...” அனைவரையும் உதறியவன், செல்வத்தின் அருகில் வந்தவன், அவனை கழுத்தோடு சேர்த்து பிடித்து கொத்தாக கைகளில் அள்ளினான்.

“டேய் நாயே..., உனக்கு ரெண்டுநாள் டைம்..., அதுக்கு முன்னாடி உன் பதிலை சொல்லியாகணும் இல்ல..., பொண்ணு கழுத்தில் தாலி கட்ட உன் கை இருக்காது..., பல்லவி வா...” அவனை தரையில் உதறியவன், பல்லவியில் பக்கம் திரும்பினான்.

வெளியே எங்கேயோ சென்றிருந்த செல்வத்தின் தாய் அப்பொழுது அங்கே வர, தரையில் கிடந்த தன் மகனையும், கோபமாக நின்ற பிரஷாந்தையும், கண்ணீர் வடித்துக்

கொண்டிருந்த பல்லவியையும் பார்த்தவர் வெகுண்டு எழுந்தார்.

“ஏண்டா, யார் வீட்டில் வந்து யார் மேலே கை வைச்ச, இவ நல்லவளா இருந்திருந்திருந்தால், என் பிள்ளை ஏண்டா அவ வேண்டாம்னு சொல்றான்? ஒழுங்கா இருக்க பசங்களையும் இவளுகதான் விட மாட்டேங்குறாளுக.

“ச்சீ..., சீ..., இதுக்கு துணை போக மொத்த குடும்பமும் அலையுது. ஏன் எவன்கிட்டேயும் போய் வயித்தில் வாங்கிட்டாளா? அதுக்கு இனிஷியலுக்கு ஒரு ஏமாளியை தேடறீங்களா? முதலிலேயே வீடுதேடி மாப்பிள்ளை பாக்க வரும்போதே நினைத்தேன்..., இப்படி எந்த ஊரிலாவது நடக்குமா...?” இன்னும் காதுகூசும் வார்த்தைகளை அவர் உதிர்க்க, கூனிக் குறுகிப் போனாள்.

பல்லவியின் பார்வை செல்லத்தை துளைக்க, தலை குனிந்து நின்றானே தவிர, தாயை அடக்க எந்த முயற்சியும் அவன் எடுக்கவில்லை.

“இப்போ நீங்க வாயை மூடலை..., வாயை உடைப்பேன்..., எங்க பொண்ணைப் பத்தி பேச உனக்கு என்ன தகுதி இருக்கு...?” அருகே கிடந்த கல்லைத் தூக்கியவன், அதை அப்படியே அவள் முகத்தில் அடித்துவிடும் வேகத்தில் நெருங்கினான்.

“ஏன்..., இவ்வளவு பேசுற நீ அவளை கட்டிக்க வேண்டியது தானே..., நீ அவளை கட்டிக்கிற முறை தானே. அவளைப் பத்தி தெரிஞ்சுதானே வேண்டாம்னு ஒதுங்கி இருக்க. என்பிள்ளை மட்டும் இழிச்ச வாயா? போடா வெளியே...” அவர் அசராமல் நிற்க, அவர் வயதைக் கருதி கை நீட்ட தயங்கினான் பிரஷாந்த்.

“மாமா...” கிட்டத்தட்ட அலறிய பல்லவி மயங்கிச் சரிய, கையில் இருந்த கல்லை தூக்கிப் போட்டவன், ஓடிவந்து அவளைத் தாங்கிக் கொண்டான்.

# பகுதி - 9

மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தாள் பல்லவி. உடம்பு நெருப்பாய் கொதிக்க, ஜன்னியில் அவள் உடல் தூக்கிப் போட்டது. கொடுக்கும் மருந்துகள் அனைத்தும் தோல்வியைத் தழுவ, இரண்டு நாட்களாக கண்விழிக்காமல் கிடக்கும் அவளைப் பார்த்து மொத்த குடும்பமும் கவலையில் ஆழ்ந்தது.

“பிரஷாந்த், அந்த பய கல்யாணம் நடக்கக் கூடாது..., பொண்ணு வீட்டில் போய் பேசுங்க...” சுவாமி கர்ஜிக்க, இரண்டு நாளில், வயதான தோற்றம் அளித்த அவரை இரக்கமாகப் பார்த்தான்.

“மாமா, அதை நான் பாத்துக்கறேன். நீங்க கவலைப் படாதீங்க...” “ரவி, நான் சொன்னதை செஞ்சியா இல்லையா?” தம்பியைச் சாடினான்.

“நீ சொன்னதை நான் செய்யாமல் இருப்பேனா? ஆனா அந்த ஆள் இதையெல்லாம் பெருசாவே எடுக்கலை. ‘இந்த காலத்தில் எவன் காதலிக்காமல் இருக்கான்’னு என்னையே திருப்பி கேக்கறான்...” அடக்கப்பட்ட கோபத்தில் அவன் பொங்க, ஆண்கள் அனைவருக்கும் ரத்தம் கொதித்தது.

என் பொண்ணு இங்கே கண்ணு முழிக்காமல் கிடக்கா, அவனுக்கு கல்யாண கொண்டாட்டமா? முடியாதுடா. ஏதாவது செய்யணும்..., இல்லன்னா நானெல்லாம் ஒரு அப்பனே கிடையாது. அவனை அறுத்துப் போடும் அளவுக்கு ஆத்திரமா இருக்கு, ஆனா மனசாட்சி உறுத்துது” எதுவும் செய்ய இயலாத ஆற்றாமையில் அவர் வெடிக்க, யாருக்கும் எதுவும் செய்ய முடியவில்லை.

“மாமா..., நீங்க கவலைப்படாமல் இருங்க, அதை முடிக்க நாங்களாச்சு” ரவியும், பிரஷாந்தும் உரைக்க, பத்மாவும், மல்லிகாவும் செய்வதறியாமல் கையைப் பிசைந்தார்கள்.

தங்கள் பெண்ணின் நிலை அவர்களுக்கும் வருத்தம்தான். ஆனால், மகன்களின் எதிர்க்காமல் அதைவிட முக்கியமாயிற்றே. இப்பொழுது இயற்கையாகவே செல்வத்துக்கு ஏதாவது நேர்ந்தால் கூட அதற்கு தாங்கள்தான் காரணம் என மக்கள் உரைப்பார்கள்.

அப்படியிருக்கையில், இவர்களை கங்கணம் கட்டிக்கொண்டு இறங்கினால், “பிரஷாந்த் எதைச் செய்வதா இருந்தாலும் பொறுமையா செங்க” அவர்களால் உரைக்கத்தான் முடிந்தது.

“அம்மா, இனிமேல் பொறுமையா, முடியவே முடியாது…” திமிறிக்கொண்டு செல்ல, தெய்வத்தை நாடினார் பெற்றவள்.

பிரஷாந்தும், ரவியும் செல்வத்தை அடித்து துவம்சம் செய்யும் வேகத்தில் அவன் வீட்டுக்குச் செல்ல, அவர்கள் வருவதை தூரத்தில் இருந்தே பார்த்த செல்வம், பின்வாசல் வழியாக வெளியேறி, பக்கத்து வீட்டில் அடைக்க்கலாமானான்.

விரோதியே என்றாலும் அடைக்கலம் என வந்தால் பெண்கள் காட்டிக்கொடுக்க மாட்டார்கள். அப்படி இருக்கையில், உறவினரான அவனை அவர்கள் காட்டிக் கொடுப்பார்களா?

யார் தடுத்தும் நில்லாமல், வீடு முழுவதும் அவர்கள் அலச, செல்வத்தின் தாய், அக்கா, தங்கை என யார் தடுத்தும் நிற்கவில்லை.

“டேய், அவன் தப்பிச்சுட்டாண்டா…, ஆனா பொண்ணு கழுத்தில் அவன்தானே தாலி கட்டுவான் அப்போ இருக்கு…” சூழுரைத்த பிரஷாந்த் வெளியே வருகையில், கயல்விழியின் தந்தை சில ஆட்களோடு அங்கே வந்தார்.

“தம்பி, நான் சண்டை போட வரலை, நியாயத்தை கேக்க வந்தேன். உங்க வீட்டு பொண்ணுக்காக நீங்க பாக்குறது

புரியுது. ஆனா, என் பொண்ணை நீங்க நினைச்சுப் பாக்கணும்…” பிரஷாந்த் அவரை அடிக்கப் பாயவே, வேகமாக பொறுமையாகவே உரைக்க, தன் வேகம் தணிந்தான்.

அதற்காக, பல்லவியின் வலி இல்லாமல் போகுமா? “இப்படி ஒருத்தனுக்கு உங்க பொண்ணை கொடுக்கறீங்களே, இவன் காலம் முழுக்க அவளை கைவிட மாட்டான்னு என்ன நிச்சயம்? நான் அவனை சும்மா விட மாட்டேன்…” உரைத்தவன், ரவியோடு வெளியேறினான்.

மூன்றாம் நாள் பல்லவி கண் விழிக்க, குடும்பத்தினர் நிம்மதி அடைந்தாலும், விடாமல் வழியும் கண்ணீரை எப்படி நிறுத்தவாம்? “அழாதம்மா…” மல்லிகா அவள் அருகில் அமர்ந்து அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

“வீட்டுக்குப் போகலாம்மா…, எனக்கு இங்கே பிடிக்கலை…” தன்னைப் பார்ப்பவர்கள் அனைவரும் இரக்கமாகப் பார்க்கும் உணர்வு. அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

காய்ச்சல் அவளுக்கு குறைந்துவிட்டதால், மருத்துவர் அவளை டிச்சார்ஜ் செய்தார். “அவங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும். சுத்தி உக்காந்து அவங்களை தொல்லை செய்யாதீங்க” அறிவுரையோடு அவர்களை அனுப்பினார்.

பல்லவியால் செல்வத்தின் தாய் பேசிய பேச்சுக்களை ஜீரணிக்கவே முடியவில்லை. காதலிப்பது அவ்வளவு பெரிய பாவமா? காதலுக்காக போராடினால், என் பெண்மையையே களங்கம் சுமத்தி விட்டார்களே. என்னைப் பெற்றவருக்கு எவ்வளவு பெரிய அவமானம். என் அம்மா அங்கே போக வேண்டாம் எனச் சொன்னதையும் மீறி சென்றேனே…’ அவள் மனம் கொஞ்சம் கொஞ்சமாய் அவளை அரித்தது.

அனைத்தையும் கேட்ட செல்வம், மரம்போல் அசையாமல் நின்ற செய்கை, ‘ச்சீ…, இவனையா நான் என் மனதுக்குள்

வைத்து பூஜித்தேன். இவனா, என்னை எல்லா துன்பத்தில் இருந்தும் காப்பான் என எண்ணினேன்?’ எங்கே தோற்றுப் போனேன்?’ தன்னையே கேட்டுக் கொண்டாள்.

அவன் ஏமாற்றியதை விட, தான் ஏமாந்ததைத்தான் அவளால் தாங்க முடியவில்லை. ‘ஒரு வருடம் அலைபேசியில் கூட தொடர்பு கொள்ளாமல் அவன் இருந்தபொழுதே தெளிந்திருக்க வேண்டுமோ? நான்தான் அடி முட்டாளாக இருந்து விட்டேனா?’

‘அவன் என்னை ஜஸ்ட் ஒரு பொழுது போக்காகவா எண்ணினான்? அவன் குணம் தெரியாமல் இத்தனை வருடங்கள் எப்படி ஏமாந்தேன்?’ கேள்விகள் படையெடுத்தாலும், அவனை மறக்க முடியாமல் தவிக்கும் மனதை என்ன செய்ய? வாய்விட்டு அழ முடியாத துயரம். உள்ளுக்குள் மறுகித் தவித்தாள்.

இதற்குமேல் தான் அழுதால், தன்னைப் பெற்றவர்கள் நொறுங்கிப் போவார்கள் என்பது புத்திக்குத் தெரிகிறது. ஆனால், இந்த மனதுக்குத் தெரியவில்லையே…’ மனதுக்குள் அரற்றினாள்.

இன்னும் இரண்டே நாளில் செல்வத்துக்கு கல்யாணம். இன்னுமே அவனைக் கையில் கிடைக்காமல் பிரஷாந்தும், ரவியும் விடாமல் தேடிக்கொண்டு அலைந்தார்கள். அதை உணர்ந்த கயல்விழியின் தந்தை அவர்களிடம் எவ்வளவோ வாதாடிப் பார்த்தும் அவரால், அவர்கள் கோபத்தை தணிக்க முடியவில்லை.

இறுதியாக பல்லவியை சந்திப்பது என முடிவெடுத்தவர், அவர்கள் வீட்டைத் தேடி வந்தார். பிரஷாந்த் அவரை வீட்டுக்குள் விடவே முடியாது என நிற்க, அவரோ, ஒரே ஒரு முறை பல்லவியை பார்த்துவிட்டுப் போய்விடுகிறேன் என போராட, வேறு வழியின்றி நகர்ந்தான்.

சுவாமி மனைவியைப் பார்க்க, மல்லிகா மகளை அறையில் இருந்து வெளியே அழைத்துவர, அவள் ஹாலுக்கு

வந்தவுடன், நெடுஞ்சாண்கிடையாக அவள் காலில் விழுந்தார் கயல்விழியின் தந்தை பொன்னம்பலம்.

# பகுதி - 10

அவரிடமிருந்து இப்படி ஒரு செய்கையை அங்கிருந்த யாருமே எதிர்பார்க்கவில்லை. அவளிடம் ஏதாவது சமாதானம் பேசுவார், செல்வத்தை மறந்துவிடச் சொல்லி கெஞ்சுவார், அவனை மன்னித்துவிடச்சொல்லி மன்றாடுவார் என எதிர்பார்த்தால், இப்படி ஒரு செய்கை, அனைவரும் ஸ்தம்பித்தார்கள்.

“ஐயா...” பல்லவி அவர் எதிரில் இருந்து பதறி விலக, “பொன்னம்பலம், முதல்ல எந்திரிங்க...” சுவாமி அவரை நெருங்கும் முன்பு, பிரஷாந்த் ஒரே தூக்கில் அவரைத் தூக்கி நிறுத்தினான்.

பல்லவி பெரும் குரலெடுத்து அழ, மல்லிகா அவளை தோள் சாய்த்துக் கொண்டார்.

“என்ன பொன்னம்பலம் இப்படி பண்ணிட்டீங்க...?” சுவாமியால் ஏற்கவே முடியவில்லை. என்னதான் இருந்தாலும் வயதில் பெரியவர், தன் மகளின் காலில் விழுந்தால் அதை எப்படி அவரால் ஏற்க முடியும்.

“தப்பில்லையா..., உங்க பொண்ணோட மன கஷ்டத்துக்கு நானும் ஒரு விதத்தில் காரணம் அதான்...” அவரிடம் உரைத்தவர், மீண்டுமாக பல்லவியின் பக்கம் நகர, பிரஷாந்த் அவருக்கு குறுக்காக வந்து நின்றான்.

“இல்ல தம்பி, பாப்பா கிட்டே ஒரு வார்த்தை பேசிட்டு போய்டறேன்” அவர் கை கூப்ப, அவர் கையை இறக்கியவன், கலங்கிய தன் கண்ணை மறைத்து விலகி நின்றான்.

“அம்மாடி..., நான் செய்யிறது சரியா தப்பான்னு எனக்குத் தெரியலை. ஆனா, ஏற்கனவே ஒரு முறை இதே மாதிரி பத்திரிகை எல்லாம் அடிச்ச பிறகு, என் பொண்ணோட

கல்யாணம் நின்னு போச்சு. இப்போ மறுபடியும் அதே மாதிரி...” தன் கண்ணீரை துடைத்தவர்,

“இப்போ ஊரு முழுக்க பத்திரிகை கொடுத்துட்டேன். மறுபடியும் அவ கல்யாணம் நின்னு போனால் அவ தாங்க மாட்டா. வேற எவனும் அவளை கட்டவும் வர மாட்டான். என்னால் அதை தாங்க முடியாதும்மா. தயவு செய்து செல்வத்தை மறந்துடு.

“என் பொண்ணுக்கு வாழ்க்கை பிச்சை கேட்டு உன் முன்னாடி நான் நிக்கறேன். அவன் உயிரும் நீ சொல்லப்போற ஒத்தை வார்த்தையில் இருக்குத்தா. தயவு செய்து அவனை சபிச்சுடாதே..., என் பொண்ணோட வாழ்க்கை உன் கையில் இருக்கு, தயவு கட்டும்மா...” தன் தோளில் கிடந்த துண்டை அவர் கைகளில் விரிக்க முயல, அதைத் தடுத்தாள்.

“என்னைப் பொறுத்த வரைக்கும், செல்வம் என்பவன் நாலு நாளைக்கு முன்னாடியே செத்துட்டான். இனிமேல் அவனாகவே வந்தாலும் எனக்கு அவன் வேண்டாம். இனிமேல் யாரும் அவன் கிட்டே வர மாட்டாங்க. நீங்க தைரியமா போங்க...” உரைத்தவள், அறைக்குள் புகுந்து கதவை அடைத்துக் கொண்டாள்.

அழுகை, அழுகை அப்படி ஒரு அழுகை. ஏன் அழுகிறோம், எதற்காக அழுகிறோம் எதுவும் தெரியவில்லை. அவன் வேண்டாம் என்று முடிவெடுத்த பிறகும் இப்படி வலிக்கிறதே. இந்த வலி குறையவே செய்யாதா?

தன் அழுகை வெளியே கேட்டுவிடக் கூடாதே என, வாய் பொத்தி, தேம்பினாள். இனிமேல் செல்வம் என்பவன் தன் வாழ்வில் இல்லை என்பதை பிடிவாதமாக தனக்குத் தானே அறிவுறுத்தியவாறே, அழுது கரைந்தாள்.

வெளியே..., “பொன்னம்பலம், அதான் என் பொண்ணே சொல்லிட்டாளே, இனிமேல் அவனை நாங்க தொடலை. நீங்க நிம்மதியா போங்க...” சுவாமி சொல்ல,

அனைவருக்கும் பெரிய கும்பிடாக போட்டுவிட்டு கிளம்பினார்.

அவர் வெளியே செல்லவே, ரவி உள்ளே வர, “டேய், அந்த ஆள் எதுக்குடா இங்கே வந்துட்டு போறார்...?” பிரஷாந்திடம் கேட்க, “பொண்ணுக்கு வாழ்க்கை பிச்சை கேட்டுட்டு போறார்...” உரைத்தவன், நடந்ததை விளக்கினான்.

“ஓ..., அவன் பொண்ணுதான் அவனுக்கு பிரச்சனையா...?” பல்லைக் கடிக்க,

“ரவி, எதுவும் வேண்டாம்..., பல்லவியே எல்லாத்தையும் முடிச்சுட்டா, இத்தோட விடுங்க” சுவாமி சொல்ல, அண்ணனும், தம்பியும் ஒருவரை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

மல்லிகாவுக்கோ மனதே சரியில்லை. இருபத்தைந்து வயதில் மகளுக்கு திருமணம் ஆகவில்லை என்றால், வாழ்நாள் முழுவதும் அவளுக்கு திருமணம் என்ற ஒன்றே நடக்காது என்பதும், அவளுக்கு உயிரே போகும் அளவுக்கு மிகப்பெரும் கண்டம் இருக்கிறது என்பதையும் எண்ணி எண்ணி மறுகிப் போனார்.

இருக்கும் சூழ்நிலையில் மகளது திருமணத்தைப் பற்றிய பேச்சை கூட வீட்டில் எடுக்க முடியும் என்று தோன்றவில்லை. அவருக்கு இருக்கும் ஒரே ஆறுதலும் ஆதரவும் பத்மாவின் வீடு தானே அங்கே சென்றார்.

விஷயங்களைச் சொல்லி அழுது புலம்ப, பத்மா தன் மகனைத்தான் பார்த்தார். ‘என்ன செய்யப் போகிறாய்?’ என அவரது பார்வை அவனிடம் கேள்வி கேட்டது.

ஒரு முடிவுக்கு வந்தவன், “ஏன் அத்த, உனக்கு சொல்லாமல் உன் பொண்ணு கழுத்தில் தாலி கட்டினால் என்னை வெறுத்துடுவீங்களா?” அவன் கேட்க,

“பிரஷாந்த்...” சந்தோஷத்திலும், நம்ப முடியாத திகைப்பிலும் அழைத்தார்.

“அம்மா..., நீங்க என்ன சொல்றீங்க...?” தாயிடம் கேட்க, “எத்தனை பவுனில் தாலி வேணும்?” பத்மா இப்படித்தான் கேட்டார்.

“நீங்கதாம்மா என் அம்மா...” தாயை அணைத்துக் கொண்டான். அதே நேரம் ரவி, “யம்மோவ்..., உன் பெரிய பையனுக்கு மட்டும்தான் சப்போட் பண்ணுவியா? சின்ன பையனுக்கு அந்த சப்போட் உண்டா?” இடையில் புகுந்து கேட்க,

“எலேய்..., உனக்கு எப்போ கேலி பேசணும்ணே தெரியாதா? போடா அங்கிட்டு” அவன் தலையில் குட்ட, பிரஷாந்த் அவனைப் பார்த்த பார்வையில் ஒரு முடிவு தெரிந்தது. இருவரின் பார்வையும் பல ரகசியம் பேசிக் கொண்டன.

அதே நேரம், இப்படி ஒரு வலியோடு வாழ முடியாது என தன் வாழ்வை முடித்துக்கொள்ள முயன்றாள் பல்லவி. செல்வம் திருமணம் முடித்து தன் முன்னால் அவனது மனைவியோடு உலாவ, அதைக் காணும் தைரியம் அவளுக்கு சுத்தமாக இல்லை.

பிரஷாந்த் முடிவெடுத்த பிறகு பத்மா அமைதியாக இருக்கவில்லை. உடனடியாக அவன் கேட்ட மாதிரி தாலி வாங்கி, பூஜையறையில் வைத்து கொடுக்க, அதை தன் கைகளில் வாங்கியவன், அதை தன்னோடு வைத்துக் கொண்டான்.

மறுநாள் நாள் நன்றாக இல்லையே என பத்மாவுக்கு சிறு வருத்தம் இருந்தாலும், அதை தனக்குள் மறைத்தவர், தெய்வத்தை வேண்டிவிட்டு, “பிரஷாந்த், எல்லாம் சரியா வரும் தானே...” பதைப்பாகவே கேட்டார்.

“எனக்கு பல்லவி மேலே நம்பிக்கை இருக்கும்மா...” உரைத்தவன், இரவு உணவை உண்ண அமர்ந்தான். உடல்

அங்கே இருந்தாலும், மனம் பல்லவியையே சுற்றி வந்தது.

ஏதோ அசம்பாவிதமாக நடக்கப் போவதுபோல்..., அடிமனதை பிசையும் விதமாக..., அவஸ்த்தையாக உணர்ந்தான். ‘ரவி இருந்தால் அவனிடம் சொல்லலாம். அவன் வேறு வெளியே போயிருக்கானே...’ உண்ண முடியாமல் தவித்தான்.

அவன் உணவைப் பிசைந்தவாறு இருக்க, “பிரஷாந்த், சாப்பிடுப்பா, சாப்பிடாமல் என்ன யோசனை?” அவனைக் கலைத்தார் பத்மா.

“சாப்பிடுறேம்மா...” உரைத்தவன் உணவில் கை வைக்க, தன் அறைக்கதவை தாழிட்ட பல்லவி, தன் வாழ்க்கையை முடித்துக்கொள்ள முயன்றாள்.

தன் மனதைக் கொல்லும் அந்த வலியில் இருந்து விடுபடுவது மட்டுமே அவளது எண்ணமாக இருந்தது. அந்த நேரம், அவள் பெற்றவர்கள் பற்றியோ, அவர்களுக்கு தன்னை விட்டால் யாரும் இல்லை என்பதைப் பற்றியோ சிந்திக்கவே இல்லை.

தற்கொலை எண்ணத்தில் இருப்பவர்கள், அந்த நொடி யாரோடாவது பேசிவிட்டால், அந்த நொடியைக் கடந்துவிட்டால், நிச்சயம் தற்கொலை செய்துகொள்ளவே மாட்டார்கள். ஆனால் அவள் யாரிடமும் தன் மனநிலையை பகிர மறுத்தாளே. அப்படியிருக்கையில் யார் என்ன செய்ய முடியும்?

தன் துப்பட்டாவால் ஃபேனில் முடிச்சு போட்டவள், மறு முனையை தன் கழுத்தில் சுற்றிக் கொண்டாள். ஒரு நிமிடம் கடந்திருந்தால் என்ன நேர்ந்திருக்குமோ? ஆனால், அவளது அறைக்கதவு படபடவென தட்டப்பட, “பல்லவி..., பல்லவி...” பிரஷாந்தின் குரல் அறைக்கு வெளியே சிறு பதட்டமாக ஒலித்தது.

“என்னப்பா...? ஏன்...? பல்லவி தூங்கறேன்னு சொல்லிட்டுதான் போனா?” மல்லிகா உரைக்க,

“தூங்குறவ ஏன் கதவை தாழ் போட்டிருக்கா...?” கேட்டவன் மீண்டுமாக கதவைத் தட்ட, பல்லவியால் தான் செய்ய நினைத்ததை செய்ய முடியவில்லை.

“பல்லவி..., பல்லவி...” இப்பொழுது மல்லிகா, சுவாமி அனைவரும் சேர்ந்துகொள்ள, வேகமாக கீழே இறங்கினாள்.

“பல்லவி, இப்போ கதவைத் தொறக்கலன்னா உடைச்சுட்டு உள்ளே வருவேன்” அவன் கிட்டத்தட்ட கதவை இடித்துக் கொண்டுதான் இருந்தான்.

அதற்குமேல் தாங்காமல், உத்தரத்தில் தொங்கும் ஷாலை அவிழ்க்கவும் நேரமின்றி, முதல் வேலையாக கதவைத் திறந்தாள். உள்ளே அவர்கள் கண்ட காட்சியில் இடியே விழுந்த உணர்வில் நிலை குலைந்து போனார்கள்.

“அம்மாடி..., என்ன இது...?” மகளை இழுத்து அணைத்துக் கொண்டு கதறிவிட்டார் மல்லிகா. ஒரு நிமிடம் பிரஷாந்த் தாமதமாக வந்திருந்தால், இல்லையென்றால் அவன் வராமல் போயிருந்தால், அவர்களால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

சுவாமி அப்படியே தோய்ந்து தரையில் அமர்ந்துவிட்டார். அவளை இப்படி ஒரு நிலையில் பார்க்கவா இத்தனை வருடங்கள் செல்லமாக வளர்த்தார்? தன் தலையிலேயே அடித்துக் கொண்டவர், வாய்விட்டே கதறிவிட்டார்.

தந்தை வாய்விட்டே அழவே, “அப்பா..., என்னை மன்னிச்சிடுங்கப்பா. தெரியாமல் முட்டாள்த்தனமா இப்படி ஒரு முடிவை எடுத்துட்டேன்” அவர் அருகே அமர்ந்தவள், அவரது காலை கட்டிக்கொள்ள, தன் நடுங்கும் கரத்தால் அவள் தலை வருடினார்.

அவரால் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. நிகழவிருந்த விபரீதம் கண்முன் விரிய, அவரால் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவே முடியவில்லை.

பிரஷாந்தின் நிலையோ அவர்களைவிட மோசமாகத்தான் இருந்தது எனச் சொல்லலாம். அவனது உறுதியையும் மீறி தேகம் மொத்தமும் நடுங்கியது. தாங்கள் அனைவரும் எண்ணி வைத்திருந்ததென்ன..., இங்கே அவள் எடுத்த முடிவென்ன..., அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

முழுதாக ஒரு நிமிடம் எடுத்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டவன், அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தவனாக, ஒற்றைக் கையால் அவளைத் தூக்கி நிறுத்தியவன், “உனக்காக நாங்க இத்தனைபேர் இருப்பது உனக்கு தெரியவே இல்லல்ல? இருபத்தஞ்சு வருஷம் உன்னோட இருக்கும் எங்களை விட, அஞ்சு வருஷம் உனக்கு தெரிஞ்சவன் பெருசா போயிட்டானா?” கேட்டவனது குரல் கரகரத்தது.

“அப்படியில்லை மாமா...” அவள் அழ,

“உன்னை அப்படியெல்லாம் நான் விட மாட்டேன்...” உரைத்தவன், அவள் என்னவென்று உணரும் முன்பே, தன் பாக்கெட்டில் இருந்த தாலியை எடுத்தவன், மல்லிகாவும், சுவாமியும் அதிர்ந்து நோக்கும்பொழுதே, அவள் கழுத்தில் கட்டி, முடிச்சிட்டான்.

“மாமா என்ன பண்ற...?” அவள் தெளிந்து அவனைத் தடுக்கும் முன்பே அனைத்தும் முடிந்திருந்தது. அவள் கரம் பற்றி இழுத்துச் சென்றவன், பூஜையறையில் அவளை நிறுத்தி, அங்கே இருந்த குங்குமத்தை கையில் எடுத்து, அவள் நெற்றியிலும் வகிட்டிலும் வைத்தான்.

மல்லிகாவும், சுவாமியும் அவர்கள் பின்னால் வந்திருக்க, அவள் கரம் பற்றி அவர்கள் காலில் விழுந்தவன், “என் பொண்டாட்டியை இனிமேல் நான் பாத்துக்கறேன் மாமா...” உரைத்தவன், அவர்கள் வீட்டை விட்டு வெளியேறினான்.

# பகுதி - 11

இரவு உணவை முடித்த பிரஷாந்த், ‘மனசே சரியில்லை, அத்தை வீட்டுக்கு போய் பாத்துட்டு வர்றேன்’ எனச் சொல்லிவிட்டு போனவன், வருகையில், பல்லவியின் கழுத்தில் தாலி கட்டி அழைத்துவர, ஒரு நிமிடம் என்ன செய்வது என்றே தெரியாமல் தடுமாறிப் போனார்.

“ஏய் என்ன பராக்கு பாத்துட்டு இருக்க..., போ..., போய் ஆரத்தி கரைச்சு எடுத்துட்டு வா...” ராஜன் விரட்ட, அதன் பிறகே தெளிந்தவர், நொடியில் அவர் சொன்னதைச் செய்தார்.

அதை வேலை செய்யும் பெண்ணிடம் முற்றத்தில் ஊற்ற கொடுத்தவர், “வலதுகாலை எடுத்துவச்சு உள்ளே வாம்மா...” அவர் அழைக்க,

“அத்த..., மாமா..., இப்படி...” தன் தாலியை கைகளில் எடுத்துக் காட்டியவள், பாய்ந்து சென்று அவரைக் கட்டிக் கொண்டாள். அவர் தோள் சாய்ந்து அழ, “அழாதடி தங்கம்..., இனிமேல் உனக்கு எல்லாம் நல்லதாவே நடக்கும்...” உரைத்தவரின் கண்களிலும் கண்ணீர் தடம்.

அவர்கள் அழுவதைப் பார்த்த ராஜன், “இப்போ என்ன நடந்து போச்சுன்னு புள்ளையோட சேந்து அழுதுட்டு இருக்க...? உள்ளே போய் பால் காய்ச்சி கொடு..., குடிச்சுட்டு படுக்கட்டும். எதுவா இருந்தாலும் காலையில் பேசிக்கலாம்...” அதட்டல் போட, வேகமாக கண்களைத் துடைத்துக் கொண்டார்.

“பிரஷாந்த், பல்லவியை உள்ளே அழைச்சுட்டு போ..., நான் வர்றேன்...” யாரும் எதையும் கேட்கவோ, ஆராயவோ முயலவில்லை.

திகைத்து நின்ற பல்லவியை கைபிடித்து அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றவன், படுக்கையில் அவளை அமர வைத்தான். தானும் அவள் அருகில் அமர்ந்தவன், எதுவும் பேசவில்லை.

பத்மா பாலை எடுத்துக்கொண்டு அவன் அறைக்கு விரைய, “பத்மா, அதில் ஒரு அரை தூக்க மாத்திரை போட்டு எடுத்துட்டு போ…, புள்ளை நிம்மதியா தூங்கட்டும்” உரைக்க, அவர் சொன்னவாறே செய்தார்.

பிரஷாந்த்தின் அறைக்கதவு திறந்தே இருக்க, “முதல்ல இதைக் குடி…” அங்கேயே நின்று அவள் பாலைக் குடித்த பிறகுதான் அங்கிருந்து வெளியேறினார்.

தாய் செல்லவே, அவன் அறைக்கதவை தாழிட, “ஏன் மாமா இப்படிப் பண்ணீங்க? நான் உங்களுக்கு தகுதியே இல்லாதவ…” அவள் அழ,

“முதல்ல இப்படி பேசுவதை நிறுத்து. இனிமேல் நான் உன் புருஷன் அவ்வளவுதான். வேற எதையும் இப்போ யோசிக்காதே தூங்கு. இனிமேல் உன்னை தனியா நான் விடவே மாட்டேன்…” அவன் குரல் இறுக உரைக்க, சில நிமிடங்களுக்கு முன்பு இருந்த மனநிலை இப்பொழுது அடியோடு மாறியிருந்தது.

இன்னுமே அதிர்ச்சியில் இருந்தாள். ‘ஒரு வேளை தூங்கி எழுந்தால் எல்லாம் சரியாகத் தோன்றுமோ? நான் தூக்கத்தில் கனவு காண்கிறேனோ?’ தன்னையே கேட்டுக் கொண்டவள், அமைதியாக படுக்க, உடை மாற்றியவன், தானும் அவள் அருகே படுத்துக் கொண்டான்.

பால் குடித்ததில், உறக்கம் கண்களைச் சுழற்ற, “மாமா…, இது கனவுதானே?” தன் அருகே படுத்திருப்பவன், நிஜமா கனவா என புரியாத விதத்தில் கேட்டாள்.

“உனக்கு கனவு மாதிரியா இருக்கு…?” கேட்டவன் அவள் நெற்றியில் அழுத்தமாக இதழ் பதிக்க, “தப்பு மாமா…” அதை

உணர்ந்தவள், அரை உறக்கத்தில் முனக, “புருஷன் பொண்டாட்டியை கிஸ் பண்றது தப்பே இல்லை. நீ தூங்கு...” அவள் கரத்தை இறுக பற்றிக் கொண்டான்.

அதற்குமேல் எதையும் யோசிக்க முடியாமல் அவள் உறக்கத்துக்குச் செல்ல, அவள் நன்றாக உறங்கிவிட்டாள் என்பதை உறுதி செய்தவன் எழுந்து வெளியே வந்தான். அதே நேரம், மல்லிகாவும், சுவாமியும் அவன் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

“பிரஷாந்த்...” அவன் அருகில் விரைந்த சுவாமி, அவன் கரத்தை பற்றிக் கொள்ள, அவர் கரத்தை தானும் அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

“நீ செய்தது..., இப்போ செத்தா கூட நான் நிம்மதியா போவேன்” அவர் நெகிழ்ந்துபோய் உரைக்க,

“என்ன பேச்சு மாமா இது? உன்னை தாத்தாவாக்குறதுக்கு முன்னாடி எங்கேயும் அனுப்புறதா இல்லை...” அவரை அழைத்து வந்தவன், சோபாவில் அமர்த்தினான்.

அதன் பிறகே எங்கே இருந்த ராஜனைப் பார்த்தவர், “மச்சான்..., பிரஷாந்த்..., அவன் செய்ததில்...” பல்லவியின் விஷயம் அனைவருக்கும் தெரியும் என்பதால், அவரால் முழுதாக பேசக் கூட முடியவில்லை. ‘இப்படி ஒரு பெண்ணை, என் மகன் தலையில் கட்டி விட்டாயே’ என கோபம் கொள்வாரோ என அஞ்சினார்.

“மச்சான்..., அந்த பய வீட்டுக்கு போயிட்டு வந்ததுக்குப் பிறகு எனக்கே நம்ம பொண்ணை அங்கே கொடுக்க மனசில்லை. ஆனா, நம்ம பொண்ணு சங்கடப்படக்கூடாது, வருத்தப்படக் கூடாது என்பதால் தான் பேசாமல் இருந்தேன்.

“வேற வீட்டுக்கு அனுப்பினாலும், அவங்க நம்ம பொண்ணை ஒரு வார்த்தை சொல்லிட்டா நமக்கும் தாங்காது, நம்ம பொண்ணும் தாங்காது. இப்போ நம்ம

வீட்டுக்கு தானே வந்திருக்கா..., நாங்க பாத்துக்கறோம். ஆனா, பய ஏன் திடுதிப்புன்னு இப்படி செஞ்சான்னுதான் புரியலை" குழப்பமாக தன் தாடையை தடவிக் கொண்டார்.

அவர் பதில் சொல்லும் முன்பே, "அப்பா, அவளை கட்டிக்கறேன்னு கேட்டா இப்போ இருக்க நிலையில் அவளும் ஒத்துக்க மாட்டா, மாமாவும் சங்கடமா பீல் பண்ணுவாங்க, அதான்..." அவள் தற்கொலைக்கு முயன்றதை ஏனோ சொல்ல மனம் வரவில்லை.

விஷயம் தெரிந்தால் அவர்களும் வருந்துவார்களே என்பதால், அதை மறைத்து விட்டான்.

"நல்ல காரியம் பண்ண..., சரி இந்த ரவி பயலை சாயங்காலத்தில் இருந்து ஆளையே காணோம். மேம்பாலம் கட்ற இடத்துக்கு போய் பாக்க சொல்லி போன் போட்டா அதையும் எடுக்கலை..." அவனிடம் கேட்க,

"எங்கேயாவது வெளியே போயிருப்பான், வந்துடுவான்..." அத்தோடு முடித்துக் கொண்டான்.

மல்லிகாவும், பத்மாவும் எதையும் பேசிக்கொள்ளவில்லை. அமைதியாகவே அமர்ந்திருந்தார்கள். நாளைக்கு நடக்கும் என நினைத்திருந்த திருமணம், திடுமென நடந்துவிட்ட விந்தை, அதை எண்ணியவாறே அமர்ந்திருந்தார் பத்மா.

"மச்சான்..., பிரஷாந்த் தாலி கட்டிட்டாலும், நம்ம உறவுக்கெல்லாம் விஷயத்தை சொல்லியே ஆகணும். ஒரு நல்ல நாள் பாத்து பெருசா ஒரு வரவேற்பு வச்சுட்டா என்ன?" ராஜன் கேட்க, சுவாமிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

அவர் மல்லிகாவைப் பார்க்க, "கண்டிப்பா செய்யணும் அண்ணே. எதுக்கும் நம்ம பிரஷாந்த் கிட்டேயும் ஒரு வார்த்தை கேட்டுக்கங்க..." அவர் சொல்ல,

“அத்த..., நீங்க எல்லாம் என்ன சொல்றீங்களோ அதுதான். பிரம்மாதமா பண்ணிடுவோம்” தங்கள் திருமணத்தை உலகிற்கு நிச்சயம் அறிவிக்க வேண்டும் என முடிவெடுத்தான். அதுவும் எவன் அவளை வேண்டாம் எனச் சொன்னானோ, அவன் முன்னால் அவள் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வேகம் அதிகரித்தது.

இப்பொழுது உறக்கத்தில் இருப்பவள், காலையில் என்ன செய்வாள் என்பது அவனுக்குத் தெரியவில்லை. நிச்சயம் எந்த தவறான முடிவையும் எடுக்க மாட்டாள் என்பது அவனது அசைக்க முடியாத நம்பிக்கை.

“சரி பிரஷாந்த், நாங்க காலையில் வர்றோம்...” அவர்கள் கிளம்பினார்கள்.

“மாமா, நடந்தா வந்தீங்க...? இருங்க நான் காரை எடுத்துட்டு வர்றேன்” அவன் எழ,

“மூணு தெரு நடக்க மாட்டோமா? வயசான காலத்தில் நடக்குறது நல்லதுதான், இன்னைக்கு நிம்மதியா தூங்குவோம்...” உரைத்தவர் செல்ல, அவர்களைப் பார்த்தவாறே நின்றிருந்தான். ‘எத்தனை வருடம் நிம்மதியான உறக்கம் இல்லாமல் தவித்திருப்பார்’ அவனால் உணர முடிந்தது.

அவர்கள் செல்லவே, ராஜன் உறங்கச் செல்ல, அவன் அருகே வந்த பத்மா, “பிரஷாந்த், உனக்கு நான் சொல்லத் தேவை இல்லை, ஆனாலும் சொல்றேன்..., அவளை கவனமா பாத்துக்க...” அவர் உரைக்க, தோளோடு அணைத்தவன், “நீங்க கவலையே படாதீங்க..., நான் பாத்துக்கறேன்...” அவரை அனுப்பியவன் தன் அறைக்குத் திரும்பினான்.

“இந்த சின்னவன் எங்க போய் தொலைஞ்சானோ தெரியலை. சாப்பிடவும் வரக் காணோம்” தன் போக்கில் புலம்பியவர், கதவைப் பூட்டிவிட்டு படுக்கப் போனார். சில நாள், தன் நண்பர்களைப் பார்க்கப் போய்விட்டு அவன்

தாமதமாக வருவது வழக்கம்தான் எனவே உறங்கப் போனார்.

பல்லவி நிச்சலனமாக குழந்தைபோல் உறங்க, அவளுக்கு போர்வையை போர்த்தியவன், அவள் இடக்கரத்தை பற்றியவாறு படுத்துக் கொண்டான்.

‘ரவி போன காரியம் காயா பழமா தெரியலையே…’ எண்ணியவன் உறங்கிப் போனான்.

காலையில் கண் விழித்த பல்லவிக்கு ஒரு நொடி தான் எங்கே இருக்கிறோம் என்பதே புரியவில்லை. அரை உறக்கம் முழுதாக பறந்து போக, வேகமாக எழுந்து அமர்ந்தாள். அப்பொழுது எதிலோ இறுக்கமாக இருந்த தன் இடக்கரத்தை பட்டென உருவ, அதில் விழித்தான் பிரஷாந்த்.

“குட் மார்னிங் பல்லவி…” அவன் உரைக்க, அப்பொழுதுதான் அவனையும், அந்த அறையையும் மாறி மாறிப் பார்த்தவள், தன் கழுத்தில் தொங்கிய திருமாங்கல்யமும் பார்வையில் விழ, அடுக்கடுக்காக முன்தினம் நடந்த நிகழ்வுகள் அனைத்தும் நினைவுக்கு வந்தது.

“மாமா…” அழைத்தவளுக்கு சட்டென கண்கள் கலங்க, ‘தனக்கு திருமணம் முடிந்துவிட்டது என்ற உண்மை புரிய, அதை ஏற்க முடியாமல் கலங்கிப் போனாள்.

“ஏன் மாமா இப்படிப் பண்ண? அத்த, மாமா எல்லாம் என்ன நினைத்திருப்பாங்க. என்னைப்போய்…, உனக்கென்ன தலையெழுத்தா? உனக்கு ஏத்த நல்ல பொண்ணுங்க எத்தனையோ கிடைப்பாங்க, அதையெல்லாம் விட்டு…”, அவள் புலம்ப,

“எனக்கு நீ போதும்…” இடை வெட்டினான் அவன்.

அவள் அதிர்ந்து விழிக்க, “வேற என்ன சொன்ன..., அத்தை மாமா என்ன நினைப்பாங்கன்னு கேட்டல்ல..., எழுந்து வெளியே போய் பார், உனக்கே புரியும்...” அவன் சொல்ல, அவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“நல்ல பொண்ணா..., ஏன் உனக்கென்ன குறைச்சல்? உன்னைவிட நல்ல பொண்ணு எனக்கு யார் கிடைப்பா?” அவன் திருப்பிக் கேட்க, புரியாமல் பேசுகிறானே என்று இருந்தது.

“என்னை கட்டிக்கிட்டு உனக்கு என்ன சந்தோசம் கிடைக்கும் மாமா? என்னால்..., எனக்கு...” அதற்குமேல் பேச முடியாமல் அழுகை பொங்கியது. இப்பொழுது செல்வம் என்ற ஒருவன் அவளுக்கு கடந்த காலம்தான், ஆனால், அவன் ஏற்படுத்திச்  சென்ற காயம் வலுவாக, பச்சை புண்ணாக இருக்கையில் அவளால் எப்படி பிரஷாந்தை ஏற்க முடியும்?

“பல்லவி..., என்னைப் பார்...” அவன் அழைக்க, தன் கண்ணீரை நிறுத்தியவள், அவனைப் பார்க்க மறுத்தாள்.

“பார்ன்னு சொன்னேன்...” அவன் அழுத்தமாக உரைக்க, மறுக்க வழியின்றி அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

தன் கரத்தை அகலமாக விரித்தவன், “வா...” அழைத்தான்.

ஒரு நொடி அதிர்ச்சியில் விழி விரிந்தாலும், அவன்மேல் இருந்த நம்பிக்கையில் படுக்கையில் கொஞ்சமாக நகர்ந்து அவன் கரத்துக்குள் புகுந்து அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

தன் கரத்தால் அவளை மென்மையாக வளைத்தவன், “பயமா இல்ல...” அவளிடம் கேட்க,

“என் மாமாகிட்டே எனக்கு என்ன பயம்? ஆனா..., உன்ன இப்படி சுமைதாங்கியாவே வச்சுக்குவேன் மாமா..., என்னால் உனக்கு எந்த சந்தோஷமும் கிடைக்காது...” அவன் நெஞ்சில் விழுந்து கதறினாள்.

அவள் பிறந்தது முதல் அவன் கையில் தவழ்ந்தது, அவன் கை பிடித்து நடந்தது, அவன் மூலம் சைக்கிள் கற்றுக் கொண்டது, பள்ளி சென்றது, சேர்ந்து விளையாடியது என அவள் நாட்கள் அனைத்தும் அவனோடு தானே கழிந்தது அப்படி இருக்கையில் இந்த அணைப்பில் ஆறுதல் கொண்டாளே தவிர, வேறு எதுவும் உணர முடியவில்லை.

“இப்போ உனக்கு சுமைதாங்கியா இருக்கத்தான் எனக்கு புடிச்சிருக்கு பல்லவி” ‘எனக்கு நம்பிக்கை இருக்கு, இந்த சுமைதாங்கி என்னைக்காவது ஒரு நாள் உன்னிடம் இளைப்பாறும்...’ முன்னதை சத்தமாகவும் பின்னதை தனக்குள்ளும் சொல்லிக் கொண்டான்.

“எழுந்து குளிச்சுட்டு வெளியே போ..., அத்த மாமா எல்லாம் உன்னைப் பாக்க வருவாங்க. இப்படி அழு மூஞ்சியா அவங்க முன்னாடி இருக்கக் கூடாது. பழசு எல்லாம் நேத்து ராத்திரியோட போச்சு போதுமா..., போ...” அவளை விலக்கினான்.

அவன் சொன்னவாறு குளிக்கச் சென்றவள் திரும்பி வருகையில் அவளுக்குத் தேவையான உடை புடவை வடிவில் அவளை வரவேற்றது. தன் வாழ்க்கை இழுத்துச் செல்லும் திக்கில் பயணிக்கத் தயாரானாள் பல்லவி.

# பகுதி - 12

இன்று செல்வத்துக்கு திருமணம். அதை நினைத்தாலே பல்லவியின் நெஞ்சம் பற்றி எரிந்தது. ஆயிரம்தான் இருந்தாலும், அவள் வாழ்க்கை இனிமேல் பிரஷாந்தோடு பிணைக்கப்பட்டு விட்டாலும், தன்னை ஏமாற்றியவன், அதைப் பற்றிய சிறு குற்றவுணர்வும் இல்லாமல், வாழ்க்கையின் அடுத்த கட்டம் செல்வதை நினைத்தால் நெஞ்சு பொறுக்கவில்லை.

காலையில் எழுந்தது முதல் அவள் முகத்தில் கவிழ்ந்திருக்கும் இருள், அவள் மனதின் அலைப்புறுதலை எடுத்துக் காட்ட, அவளை விட்டு அகலாமல் இருந்தான் பிரஷாந்த்.

அறையை விட்டு வெளியே செல்ல மறுக்கும் அவள் மனநிலை புரிந்தவனாக, அவள் கரத்தை அழுத்தமாக பற்றியவன், “பல்லவி ரிலாக்ஸ்...” இதைத்தவிர என்ன சொல்லி அவளை ஆறுதல் படுத்தவென்று அவனுக்குத் தெரியவில்லை.

பிரஷாந்த் கோபமாக பேசினாலாவது பரவாயில்லை, அவனது ஆறுதல் இன்னும் வருத்தம் கொள்ள வைக்க, “மாமா, எனக்கு..., அவன் கிடைக்கலையேன்னு எல்லாம் கோபம் இல்லை..., இது...” எங்கே அவன் தன்னை தவறாக எண்ணிவிடுவானோ என்று பயமாக வேறு இருந்தது.

“பல்லவி..., உன்னிடம் எனக்கு நம்பிக்கை இல்லை என்றால்தான் இந்த விளக்கமெல்லாம் கொடுக்கணும். அதை விட்டுட்டு, பிரச்னைக்கு வெளியே இருக்கும் எனக்கே அவனை கொலை செய்யிற வெறி இருக்கும்போது, பிரச்சனைக்குள் இருந்த உனக்கு எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியாதா...?” அவன் கேட்க, அவன் புரிதலில் மனம் நனைந்தாள்.

“ஒரு பொண்ணோட கண்ணீருக்கு விலையே இல்லையா மாமா? கடவுள் எல்லாம் இருப்பது சும்மாவா...?” அவள் ஆற்றாமையாக புலம்ப,

“அப்போ நான் கிடைத்தது...?” அவன் கேட்க, சட்டென அவன் தோள் சாய்ந்தவள் அவன் கழுத்தை குழந்தைபோல் கட்டிக் கொண்டாள்.

“கடவுள் இருக்கார் மாமா..., இல்லன்னா எனக்கு இப்படி ஒரு வாழ்க்கை கிடைத்திருக்குமா?” உடனே ஒத்துக்கொள்ள, அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

அங்கே திருமண வீட்டிலோ, ஒரே கொண்டாட்டமாக இருந்தது. காலையில் பத்தரைக்கு முகூர்த்தம் என்பதால், சரியாக பத்துமணிக்கு செல்வம் குடும்பத்தினர் பெண்வீடு செல்ல, அங்கே அனைத்து ஏற்பாடுகளும் தடபுடலாக நடந்தது.

ஐயர் மந்திரம் ஓத, ஹோமகுண்டத்தின் முன்னர் அமர்ந்திருந்த செல்வம், அவர் சொல்லும் மந்திரங்களை ஒவ்வொன்றாக சொல்லிக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் சந்தோசம் நிரம்பி வழிந்தது. ஒரு சிறு குற்றவுணர்வோ, தயக்கமோ எதுவும் இருக்கவில்லை.

நல்ல நேரம் நெருங்கவே, “முகூர்த்த நேரம் நெருங்கிடுச்சு, பொண்ணை அழைச்சுட்டு வாங்கோ...” அவர் குரல் கொடுக்க, கயல்விழியை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

தான் இருந்த இடத்தில் இருந்து அவளை நிமிர்ந்து பார்த்தவன் இமைக்க மறந்தான் என்றே சொல்லலாம். மாம்பழ நிறத்தில் பட்டுடுத்தி, சிவப்புக்கல் நகைகளில் தேவதையாகவே ஜொலித்தாள். புகைப்படத்தில் சாதாரணமாகத் தெரிந்தவள், இன்று தேவதையாக தெரியும் விந்தை அவனுக்கு புரியவில்லை.

நிச்சியத்தின் பொழுது அவளை ஒரு நொடி கூட அவளை நிமிர்ந்து பார்க்கவில்லையே. எனவே அப்பொழுது அவள் அழகு அவனுக்குத் தெரியவில்லை.

அடிமேல் அடிவைத்து நடந்து, அவன் அருகில் வந்து அமர, அப்பொழுது கூட தன் பார்வையை அவள்மேல் இருந்து திருப்பவில்லை. "தம்பி, மந்திரத்தை சொல்லுங்கோ..." ஐயர் குரல் கொடுத்த பிறகே கலைந்தான். சற்று அசடு வழிந்தவன், அவள் தன்னைத் திரும்பி பார்க்க மாட்டாளா என ஏங்கினான்.

திருமாங்கல்யம் அனைவரின் ஆசீர்வாதத்துக்குச் செல்ல, அது வந்தவுடன், தாலியை அவன் கையில் கொடுத்தவர், "மாங்கல்ய தானம் பண்ணுங்கோ, கெட்டிமேளம், கெட்டிமேளம்..." ஐயர் சொல்லவே, மாங்கல்யத்தை கயல்விழியின் கழுத்தில் கட்டப்போன நொடி, இருக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.

அட்சதை தூவிய கரங்கள் அனைத்தும் அந்தரத்தில் நிற்க, "எனக்கு இந்த கல்யாணத்தில் விருப்பம் இல்லை..." எழுந்து நின்றவள் தெளிவாய் உரைக்க, ஒருநொடி அமைதியில் திளைத்த இடம், மறு நொடி சலசலப்பில் நிறைந்தது.

"கயல்..., என்ன இது...? முதல்ல மணமேடையில் உக்கார்..." பொன்னம்பலம் குரல் கொடுக்க,

"இல்லப்பா, என்னால் முடியாது..." உறுதியாக உரைத்தாள்.

"ஏய்..., பொட்டச்சி உனக்கு அவ்வளவு திமிரா? என் மகனை நீ வேண்டாம்னு சொல்றியா? செல்வம்..., அவளுக்கே அவ்வளவு இருக்குன்னா, உனக்கு என்னடா...? எந்திரிடா மேலே..." அவன் தாய் உரைக்க, மேடையில் இருந்து எழுந்து நின்றான்.

"கயல்..., உன் வாழ்க்கை..., சம்பந்தியம்மா ஒரு நிமிஷம், கொஞ்சம் பொறுமையா இருங்க. அவ சின்னப்பொண்ணு,

எடுத்துச் சொன்னால் புரிஞ்சுப்பா” அவர்களிடம் அவர் கெஞ்சத் துவங்க,

“அப்பா, நீங்க எதுக்கு அவங்க கிட்டே கெஞ்சறீங்க? எனக்கு ஒருத்தனோட வாழ்க்கையில்தான் பங்கு வேணுமே தவிர, அவன் பாவத்தில் இல்லை..., ஒரு பொண்ணோட வாழ்க்கையை, கனவை அழிச்சிட்டு கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல் இங்கே வந்திருக்கார், இந்த வாழ்க்கை போயிடுச்சேன்னு நீங்க இவங்க கிட்டே கெஞ்சறீங்க, விடுங்கப்பா...” தலை நிமிர்ந்து உரைக்க, அவளுக்கு எப்படி உண்மை தெரியும் என உறைந்து போனார்.

“இதுக்கு மேலே இந்த கல்யாணம் நடக்காது. வாடா போகலாம்..., ஏற்கனவே ஒரு கல்யாணம் நின்னு போனவ, இப்போ இந்த கல்யாணமும் நின்னால், எவன் இவளை கட்டிப்பான்? ” செல்வத்தின் தாய் உரைக்க,

“நான் கட்டிப்பேன்...” அங்கே பட்டு வேஷ்டி சட்டையில் பிரசன்னமானான் ரவி.

‘யார் இவன்...?’ என சிலரும், “அட, இவன் நம்ம காண்ட்ராக்டர் பையன் இல்ல” என சிலரும் முனக, செல்வம் தலை குனிந்து நின்றான். அவனது தாய் எதையோ பேசப் போக, அவர் கையைப் பிடித்து தடுத்தவன், “என் மானம் இதுக்கு மேலே போக வேண்டாம்...” அடிக்குரலில் உரைக்க, அவரால் பேச முடியவில்லை.

அங்கிருந்து அவர்கள் வெளியேற, அவர்களது சொந்தங்கள் அனைத்தும் பின்னால் சென்றது.

“என்னமாமனாரே..., உங்க பொண்ணை எனக்குக் கொடுக்க உங்களுக்கு சம்மதம் தானே...” அவன் கேட்க, பொன்னம்பலத்துக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“டீச்சர்..., என்னை கல்யாணம் பண்ணிக்க உங்களுக்கு சம்மதமா?” கேட்க, “எனக்கு சம்மதம்...” அவள் உரைக்கவே,

“எனக்கு இது போதும்..., மாமா..., உங்க பொண்ணு கல்யாணத்தை கண் குளிர பாருங்க...” உரைத்தவன், தன் பின்னால் பார்க்க, ஒருவன் மலர் மாலையை கொண்டுவந்து கொடுக்கவே, அதை தன் கழுத்தில் போட்டவன், மணமேடையில் அமர்ந்தான்.

அடுத்த நிமிடம், திருமாங்கல்யத்தை அவள் கழுத்தில் கட்டி, அவளை தன்னவளாக ஆக்கிக் கொண்டான். பெரியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கியவன், அடுத்த சம்ப்ரதாயமாக பால் பழம் உண்ண, அவன் என்னவோ கூலாகத்தான் இருந்தான்.

ஆனால், பொன்னம்பலமும், அவரது மனைவியும் மட்டுமே வெகு டென்ஷனாக இருந்தார்கள். தங்களது மகளது திருமணம் நடந்துவிட்டதில் அவர்களுக்கு பெரும் நிம்மதிதான். ஆனால், ராஜனிடம் யார் பேசுவது, அவர் என்ன சொல்வார் என்பதில் பெரும் பயம்.

“உங்க வீட்ல என்னை ஏத்துப்பாங்க தானே...?” கயல்விழி அவன் காதைக் கடிக்க, அவளைப் பார்த்து அழகாய் புன்னகைத்தான்.

‘சிரிச்சே மயக்குறானே...’ மனதுக்குள் எண்ணியவள், பார்வையை திருப்பிக் கொண்டாள். அவள் தடுமாற்றம் உணர்ந்தவனின் மனதுக்குள் பெரும் உல்லாசம். கூடவே, அவளை தான் சந்தித்து பேசிய நொடிகள் அவன் நினைவில் உலா போனது.

தன் மகளுக்கு வாழ்க்கை வேண்டி பொன்னம்பலம் வேண்டிவிட்டு சென்ற பிறகு, சட்டென பிரஷாந்துக்கு ஒரு யோசனை வர, கூடவே ரவியும் அதே விஷயத்தை நினைத்திருக்க, “பிரஷாந்த், நான் அந்த பொண்ணை சந்திச்சு பேசறேன்..., அந்த செல்வத்துக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணமே நடக்க கூடாது...” உரைத்தவன்

சென்று நின்றது பொன்னம்பலத்தின் வீடு இருக்கும் தெருதான்.

அவர்கள் வீட்டுக்கு எதிரில் இருந்த டீக்கடையில் அமர்ந்து அவர்கள் வீட்டை நோட்டமிட, ‘அந்த மனுஷனுக்கு பொறந்த பொண்ணு எப்படி இருக்கும்னு தெரியலையே..., அவசரப்பட்டுட்டோமோ...?’ எண்ணியவாறே அவன் இருக்க, குளித்து முடித்துவிட்டு, மொட்டை மாடியில் துணியை உலர வைக்க வந்தாள் கயல்விழி.

அவளைப் பார்த்தவன் அசந்துவிட்டான் என்றே சொல்லலாம். ‘அந்த நீர்யானைக்கு இப்படி ஒரு பொண்ணா...?’ வாயில் வைத்திருந்த பழத்தை உண்ண மறந்தான் என்றே சொல்லலாம்.

சட்டென, ‘இதுதான் அவன் பொண்ணா...?’ சந்தேகம் எழ, யாரிடம் கேட்பது என்றே தெரியவில்லை.

அந்த நேரம், “கயல்..., கல்யாணப்பொண்ணு இப்படி வெயில்ல நிக்கறியே, உள்ளே போ, நான் காய வைக்கறேன்...” அவர்களது உறவுக்கார பெண்ணொருத்தி மாடியில் வந்து உரைக்க, தன் சந்தேகம் தெளிந்தான்.

‘இப்போ பொண்ணு யார்ன்னு தெரிஞ்சுடுச்சு..., எப்படி பேசுறது?’ அவன் யோசனையில் மூழ்கினான்.

நாள் முழுவதும் அவர்கள் வீட்டை சுற்றி வந்தாலும், அவள் வெளியே வரும் வழியைக் காணோம். இன்னும் நாட்கள் இருந்திருந்தால், இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம் என நினைத்திருப்பான். ஆனால், இன்றைக்கு விட்டால், இனிமேல் முடியாது எனத் தோன்ற, அங்கேயே சுற்றினான்.

அன்று இரவில் அவர்கள் வீட்டில் விளக்குகள் அனைத்தும் நிறுத்தப்பட, ‘அவள் அறை எதுவென தெரிந்தாலாவது ஏதாவது செய்யலாம். இப்பொழுது அதற்கும் வழியில்லையே...’ அவன் செய்வதறியாமல் நிற்கும் நேரம்,

மாடிக் கதவைத் திறந்துகொண்டு யாரோ வருவது புரிய, தன் பார்வையை கூர்மையாக்கினான்.

அது கயல்விழி என்பது புரிய, அடுத்த நொடி எதையும் யோசிக்காமல், அவர்கள் வீட்டு காம்பவுண்டை ஒரே தாவாக தாவியவன், பின்னால் ஓடிய படிகளில் ஓசை எழுப்பாதவாறு பாய்ந்து ஏறினான்.

என்னதான் அவன் ஓசை படாமல் ஏறினாலும், யாரோ வருவதை உணர்ந்து கொண்டவள், “யார் அது…?” அவள் கேட்க, திடுமென அவள் முன்னால் வந்து நின்றான்.

அடுத்த நொடி, அவள் கத்தை பார்க்கவே, பட்டென தாவி அவள் வாயை தன் கையால் மூடியவன், “தயவு செய்து கத்திடாதே…, நான் ஒரு விஷயம் உன்கிட்டே பேசணும், சொல்லிட்டு போய்டறேன்…, பிளீஸ்…” அந்த நிலவொளியில் அவன் கண்களில் கயமை இல்லை என்பதை உணர்ந்தவள், அவன் கையை விலக்கினாள்.

“நீங்க யார்…? என்கிட்டே என்ன பேசணும்?” அவனை எங்கேயோ பார்த்த நினைவு இருக்கிறது, ஆனால் யாரென்று சட்டென அவளால் அடையாளம் காண முடியவில்லை.

“உன்னை கட்டிக்கப்போற செல்வம் ஒரு பொண்ணை ஏமாற்றிவிட்டு, உன்னை கல்யாணம் செஞ்சுக்க ஒத்துகிட்டு இருக்கான். அந்த விஷயம் உனக்குத் தெரியுமா?” அவன் நேரடியாக விஷயத்துக்கு வர, தான் கேட்டதை அவளால் நம்பவே முடியவில்லை.

“நீங்க சொல்றதை நான் எப்படி நம்புறது?” அதையே அவள் கேட்க,

“அந்த பொண்ணு வேற யாருமில்லை, என் அத்தை பொண்ணுதான். இந்த உண்மை உன் அப்பாவுக்கும் தெரியும். அங்கே பெரிய பிரச்சனையாக, அவ காலில் விழுந்து இந்த கல்யாணம் நடந்தே ஆகணும்னு

கேட்டுகிட்டார். ஏன் அதையெல்லாம் உங்க அப்பா சொல்லலையோ?” இவ்வளவு இரவில் அவளைத் தேடி வந்து சொல்கிறான், நம்ப மறுக்கிறாளே என அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

அவன் அவ்வாறு சொல்லவே, தன் தந்தை அப்படி செய்ததற்கான காரணம் அவளுக்குப் புரிய, நெஞ்சம் விம்மியது. ஒருமுறை திருமணம் நின்றபொழுது அவள் பட்ட துன்பம், சொந்தங்களின் அனுதாபம், பேச்சு..., புரணி அப்பப்பா..., எவ்வளவு எவ்வளவு.

அவள் தவறே செய்யாதபொழுதும் தண்டனையை அனுபவித்த கொடுமை. அனைத்தும் மேலும் ஒரு முறையா? அனுபவிக்க தெம்பிருக்கிறதா? தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

அதே நேரம், “கயல்..., துணி எடுத்துட்டு வர்றேன்னு போயிட்டு இவ்வளவு நேரமா சீக்கிரம் வா...” அவள் தாயின் குரல் கேட்க,

“அம்மா, கொஞ்ச நேரத்தில் வர்றேம்மா...” உரைத்தவள் அவன் முகம் பார்த்தாள்.

“என்னால் என்ன செய்ய முடியும்னு நினைக்கறீங்க? இப்போ நான் என்ன செய்யணும்?” அவனிடம் கேட்க, தான் சொல்ல வந்ததை எப்படிச் சொல்லவென்றே அவனுக்குத் தெரியவில்லை.

“ஒரு பொண்ணை ஏமாத்தியவன் உங்களுக்கு அவசியமா?” அவளிடம் கேட்க, அவளுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

“உங்க அத்தை பொண்ணுக்குன்னு சொன்ன உடனே வரிஞ்சுகட்டிகிட்டு வந்துட்டீங்க, நான் ஊரான் வீட்டு பொண்ணு தானே, எப்படிப் போனால் என்ன அதானே...?” ஒரு திருமணம் தடை படுவதற்குப் பின்னால் இருக்கும் வலி, வேதனை அவளை இவ்வாறு பேசத் தூண்டியது.

“எனக்குப் புரியுது…?” அவன் இழுக்க,

“என்ன புரியுது? உங்களுக்கு எதுவும் புரியாது. சரி, இந்த கல்யாணம் நடக்காது போதுமா…, நீங்க போகலாம்…” அவள் குரல் தழுதழுத்தது.

தான் தேடி வந்ததற்கு இது போதாதே…, எண்ணியவன், அவள் வருத்தம் கண்டு தயங்கினான். “ஏங்க…, அவனை அவ்வளவு புடிச்சிருக்கா?”.

“லூசு மாதிரி பேசாதீங்க…” வெடித்தவள், “கழுத்தில் தாலி ஏறும் வரைக்கும் யார் முகத்தையும் மனசில் பதிய வைக்கிறதா இல்லை” அவனுக்கு வேண்டிய பதிலையும் தன்னை அறியாமல் கொடுத்தாள்.

“அப்போ என் முகத்தைப் பாருங்க…?” அவன் பட்டென சொல்ல,

‘இவன் என்ன லூசா’ என்பதுபோல் பார்த்தாள். அவள் பார்வைக்கான பொருள் புரியாமல், “ஏங்க…, நீங்க பாக்குற அளவுக்கு இல்லையா? இல்லையே தினமும் இந்த முகத்தை கண்ணாடியில் பாக்குறேனே…, கொஞ்சமாவது சகிச்சுக்குற அளவுக்குத்தான் இருக்கு…, நீங்க பாக்குறதைப் பாத்தா…, என்னமோ அசிங்கத்தை பாக்குற மாதிரி பாக்கறீங்க” உரைத்தவன், கண்களை உருட்டி, தன் முகத்தை அவனே காண முயல, அவன் குரங்கு செட்டையில் பக்கென சிரித்துவிட்டாள்.

“உங்களுக்கு எதில் விளையாடுறதுன்னே இல்லையா…, போங்க…” நிலைமை சற்று இலகுவானதுபோல் உணர்ந்தாள்.

“நிஜமாவே என்னைப் பிடிக்கலையா…?” தன்னைத் தாண்டிச் செல்லப் போனவளின் கை பிடித்து தடுத்தான்.

“முதல்ல கையை விடுங்க…” அவள் உரைக்க, பட்டென அவள் கரத்தை விடுவித்தான்.

“உங்க அத்தைப் பொண்ணுக்கு வேண்டி என்கிட்டே ஒரு விஷயத்தை செய்யச் சொன்னீங்க அதுக்கு நான் ஒத்துகிட்டேன். அத்தோட நம்ம டீல் முடிஞ்சு போச்சு, உங்க அனுதாபம் எனக்கு தேவையில்லை” சற்று கோபமாகவே உரைத்தாள்.

“நிஜமாவே உன்னை எனக்கு புடிச்சிருக்கு..., நான் உன் அளவுக்கு படிக்கலை. பிஎஸ்சி மேத்ஸ் தான் என் குவாலிபிகேஷன்..., ஒரு வேளை அது தடுக்குதுன்னா வேண்டாம்...” அவன் குரலில் இருந்த உறுதியில் தடுமாறிப் போனாள்.

அதை உணர்ந்தவன், அவள் அருகில் மெதுவாக அடியெடுத்து வைத்து நெருங்கி நின்றான். அவள் விழி விரிய அவனைப் பார்க்க, அழகாய் புன்னகைத்தவன், “இப்போ சொல்லு..., என்னை கல்யாணம் பண்ணிக்கறியா?”.

“நீ..., நீங்க நிஜமாவா கேக்கறீங்க?” அவளால் நம்ப முடியவில்லை.

“நீங்க யார் என்னன்னே தெரியாமல்...” அவள் இழுக்க, “காண்ட்ராக்டர் ராஜன் தெரியுமா? அவரோட ரெண்டாவது மகன்..., என் அப்பாவோட தொழிலை இப்போ நான்தான் பாத்துக்கறேன். என்னைப்பற்றி சொல்ல அவ்வளவுதான்” அவன் சொல்ல, அவனை எங்கேயோ பார்த்திருக்கிறோமே என்ற வினாவிற்கு விடை கிடைத்தது.

“இப்போ சொல்லு...” பதில் தெரியாமல் இங்கிருந்து போக மாட்டேன் என்பதுபோல் நின்றான்.

“எங்க அப்பா, அம்மா, உங்க அப்பா அம்மா...” அவள் அப்பொழுதும் தயங்க,

“எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன். என்னை கல்யாணம் பண்ணிக்கறியா இல்லையா? அதுதான் கேள்வி”.

“எனக்கு பயமா இருக்கு..., இது சரி வருமா?”.

“ச்சை..., இதுக்கு உன்னை தூக்கிட்டு போயே கல்யாணம் பண்ணியிருக்கலாம் போல, முடியலை..., டீச்சர்ன்னாலும் இப்படியா? கேள்வி கேட்டே கொல்ற?” அவன் புலம்ப, அவள் முகத்தில் ஒரு அழகான புன்னகை.

“உனக்கு கேள்வி கேக்க மட்டும்தான் தெரியுமா? பதில் சொல்லத் தெரியாதா?” அவன் கேட்க,

“பதில் தெரியாமல் விட மாட்டீங்க. எல்லாம் நல்லபடியா முடிந்தால் சரி” மறைமுகமாக தன் சம்மதத்தை தெரிவித்தவள் அங்கிருந்து செல்ல, நிறைவாகவே அங்கிருந்து அகன்றான்.

இருவரும் அதை நினைத்தவாறே நின்றிருக்க, கல்யாண வீட்டில் கூட்டம் சற்று குறையவே, அவனிடம் வந்தார் பொன்னம்பலம்.

“மாப்ள..., உங்க வீட்டுக்கு போகணும்...” அவர் தயங்கி தடுமாற, “போகலாமே, அங்கே எல்லாம் என் அண்ணா பாத்துப்பான் போகலாம்” அங்கிருந்து கிளம்பினார்கள். அவன் சொல்லிவிட்டாலும், பெண்ணைப் பெற்றவர்களுக்கு மனதுக்குள் சிறு பயம் எழவே செய்தது.

அவர்கள் வீட்டுக்கு வந்து சேர, பத்மா ஆரத்தியோடு தயாராக இருந்தார். அதைப் பார்த்த அனைவருக்கும், மனதில் நிம்மதி எழுந்தது மட்டும் உண்மை.

# பகுதி - 13

பிரஷாந்தின் வீட்டில், ரவியும், கயல்விழியும் மணமக்களாக நுழைய, பூஜையறையில் விளக்கேற்றினாள். பால் பழம் கொடுக்கும் வைபவம் முடிய, பேச்சுவார்த்தையை யார் துவங்குவது என்ற தயக்கம், தடுமாற்றம் அங்கே நிலவியது.

“சின்னவனே…, எப்படியோ நீ சொன்ன மாதிரியே கல்யாணம் பண்ணி பொண்டாட்டியை கூட்டி வந்துட்ட. அதெப்படிடா அண்ணனும் தம்பியும் சொல்லிவச்சு எங்களை கல்யாணத்துக்கு கூப்பிடவே இல்லை” மனதுக்குள் சிறு வருத்தம் இருந்தாலும், அதை பெரிதாக அவர் வெளிக்காட்டவில்லை.

“ஐயா…, இது…, எப்படி சொல்லன்னு தெரியலை…” பொன்னம்பலம் தடுமாற, ராஜன்…, “என் மகன் செய்ததில் எனக்கு சந்தோஷம்தான்…” அவர் அத்தோடு முடித்துக் கொள்ள, மேலும் அவர்கள் வரவேற்பு பற்றி பேசிவிட்டு, மகளை அங்கே விட்டு கிளம்பினார்கள்.

அன்று இரவு ரவிக்கு சாந்திமுகூர்த்தத்துக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்க, அறைக்குள் ஒருவித ஆர்வமும், எதிபார்ப்பும் ஒருங்கே சேர காத்திருந்தான். கயல்விழி அறைக்குள் வர, பால் சொம்பை அங்கே இருந்த மேஜைமேல் வைத்தவள் தயங்கி நின்றாள்.

அவள் அறைக்குள் வந்தது முதல், அவள் அடியெடுத்து வைத்து நடந்தது, பால் சொம்பை வைத்தது, தயங்கி நிற்பது என அனைத்தையும் பார்த்தவாறு பேசாமல் இருந்தான்.

‘என்ன இவர் பேசாமல் இருக்கார்?’ எண்ணியவள் தயங்கி அவன் முகம் காண,

“வந்த உடனே கால்ல எல்லாம் விழ மாட்டியா? அதையெல்லாம் சொல்லிக் கொடுக்கலையா?” அவன்

கேட்க, போலியாக அவனை முறைத்தாள்.

“விழலன்னா என்ன செய்வீங்களாம்…” கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக் கொண்டாள். முதல்நாள் அவனை சந்தித்தது முதல், காலையில் இந்த வீட்டில் இருந்து, சற்று முன்பு வரைக்கும் அவனது குறும்பு, பேச்சு, சிரிப்பு என அனைத்தையும் கவனித்துக் கொண்டுதானே இருக்கிறாள். எனவே அவன் சீரியசாக கேட்கிறான் என அவளால் எண்ண முடியவில்லை. எனவே அவ்வாறு உரைத்தாள்.

“என்னை விழச் சொல்லாத வரைக்கும் சந்தோசம்…” அவன் தோளைக் குலுக்க, மெல்லியதாய் புன்னகைத்தாள்.

“இங்கே வா…, வந்து உக்கார்…” அவன் அழைக்க, அடிமேல் அடிவைத்து அவனை நெருங்கி அமர்ந்தாள்.

சிறு அமைதிக்குப் பிறகு “இப்போ இங்கே வீட்டில் இருக்கும் சிச்சுவேஷன் உனக்கு தெரியாது…” எனத் துவங்கியவன், பல்லவியின் காதல், வீட்டின் சூழல், பிரஷாந்தின் திருமணம் என அனைத்தையும் உரைத்தவன், “என் அண்ணனோட வாழ்க்கை இப்படி இருக்கும்போது, நான் மட்டும் சந்தோஷமா இருப்பது எனக்கு சரியா படலை.

“அது மட்டும் இல்லை…, என்னை புரிஞ்சுக்க உனக்கும் டைம் வேணும், சோ…, நமக்குள் தாம்பத்யம் இப்போதைக்கு வேண்டாம்னு நான் நினைக்கறேன். இல்ல…, உனக்கு நம்ம வாழ்க்கை இன்னைக்கே துவங்கணும்னா…” அவன் அவளைப் பார்த்து கண்ணாடிக்க, அருகே இருந்த தலையணையை எடுத்து அவன்மேல் வீசினாள்.

“ஏய்…, புருஷனை அடிக்கிற…?” அவள் கை பிடித்து தடுக்க, அவனை முறைத்தாள்.

அவள் கையை விடாமல், “எனக்கு ஒரு பொண்ணை இறுக்கமா கட்டிக்கணும்னு ரொம்ப ஆசை…, அதை மட்டும் பண்ணிக்கவா…?” அவள் கையை எடுத்து தன் நெஞ்சில்

வைத்துக் கொள்ள, அவள் முகம் குங்குமமாய் சிவந்து போனது.

கொண்டவன், உரிமையுள்ளவன், அணைக்க அனுமதி கேட்டால் அவள் என்ன சொல்வதாம்? அவள் அமைதி தைரியமளிக்க, அவளை நெருங்கி அமர்ந்தவன், அவள் தோள்தொட்டு திருப்பி, தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டான்.

சற்று நேரம் விலகாமலே இருந்தவன், “கயல், உனக்கு ஏதாவது தோணுதா?” அவள் காதில் கிசுகிசுப்பாய் வினவ, “எ…என்ன…?” திணறினாள்.

“இல்ல…, சினிமாவில் எல்லாம் இப்படி கட்டிகிட்டாலே என்னவோ மின்சாரம் பாயும், கிக்கா இருக்கும்னு சொல்வாங்க…, எனக்கு அப்படி எதுவுமே தோணலை, அதான்…, உனக்காவது அப்படி இருக்கான்னு கேட்டேன்” அவன் உரைக்க, வேகமாக அவனை விட்டு விலகினாள்.

“நல்ல ஆராய்ச்சி…” முகத்தை திருப்பிக் கொண்டாள். இதழோரம் துடிக்கும் சிரிப்பை அடக்க மிகுந்த சிரமப்பட்டாள். ஆனால் அவனோ, “ஒரு வேளை முத்தம் கொடுத்தால் அப்படி இருக்குமோ…” அவள் முதுகின் பக்கம் சாய்ந்தவன், அவள் இடையில் கரத்தை தவழவிட்டான்.

“இ…ப்…போ எதுவும் வேண்டாம்னு சொன்னீங்க…” அவன் கரத்தின் இறுக்கம் அதிகரிக்க, அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையில் வாசம் பிடித்தான்.

அவளுக்குள் தடதடவென எதுவோ புரளும் உணர்வு. ‘கையை நகர்த்திவிடுவானோ?’ இதயம் படபடக்க, “கேட்டேனே…” அவள் காதில் இதழ் உரச வினவினான்.

“என்ன…?” அவள் மூளை வேலை நிறுத்தம் செய்திருக்க, எதை அவள் நினைக்கவாம்?

இப்பொழுது அவன் இதழ்கள் அழுத்தமாக அவள் கன்னத்தில் பதிய, அவன் செல்கள் அனைத்தும் சூடாகும் உணர்வு. “இது ஒர்க்கவுட் ஆகுது” கிசுகிசுப்பாக உரைக்க, ‘அனுபவிக்காமல் ஆராய்ச்சி பண்ணுதுபார் லூசு’ அவள் அப்படித்தான் எண்ணினாள்.

“இதுக்கு மேலே போனால், உன் கற்புக்கு நான் கேரண்டி இல்லை..., படுத்துக்கோ” அவன் விலக, “பால்...” அவனுக்கு நினைவூட்டினாள்.

“நான் என்ன குழந்தையா பால் குடிக்க..., இருந்தாலும் நீ கொடுத்தால் ஓகே தான்...” அதற்கும் பேச, அவன் கேலியை ரசித்தவாறே பால் எடுத்து வந்து கொடுக்க, பாதி குடித்துவிட்டு, மீதியை அவளுக்கு கொடுத்தான்.

அன்றைய இரவு இனிமையாகவே கழிந்தது. இங்கே இப்படியென்றால், பிரஷாந்தின் அறையில், “ரவி மாமா எனக்காகவா இப்படி பண்ணான்? இதைத் தெரிஞ்சும் நீங்க எப்படி ஒத்துகிட்டீங்க?” அவனைப் பிடித்து உலுக்கினாள்.

“பல்லவி, அவன் அவளை பிடிச்சுதான் கல்யாணம் பண்ணிகிட்டான்” அவளுக்கு புரிய வைக்க முயன்று கொண்டிருந்தான்.

“உங்க கல்யாணத்தையே பாக்க முடியலன்னு அத்த வருத்தப்பட்டாங்க, இப்போ என்னால், ரவி மாமாவும்..., எல்லாம் என்னால் தானே” விசும்பினாள்.

“ஹையோ..., இதை நீ விடவே மாட்டியா? யாருக்கு யார்ன்னு கடவுள் முடிவு செய்வது. அதை மனுஷங்க மாத்த முடியாது புரிஞ்சுக்கோ. அதான் ரிஷப்ஷன் பெருசா எடுக்குறதா இருக்காங்களே..., எல்லாம் சரியா போய்டும்” அவளைத் தேற்றினான்.

“நீங்க என்ன சொன்னாலும் என்னால் தாங்கிக்கவே முடியலை” புலம்பியவளை, ஆயிரம் சமாதானம் சொல்லி உறங்க வைத்தான்.

அடுத்து வந்த ஒரு நல்ல நாளில் இரு திருமண ரிஷப்ஷனையும் ஊரே அசரும் விதத்தில் நடத்த, அதையெல்லாம் காண முடியாமல், தன் விடுமுறையை கேன்சல் செய்துவிட்டு வெளிநாடு சென்றான் செல்வம். அதன் பிறகு அவனைப் பற்றிய பேச்சே இல்லாமல் போனது.

பல்லவி ஒரு உற்சாகம் இல்லாமல் இருப்பதைப் பார்த்த பத்மா, “பிரஷாந்த், பல்லவியை ஏதாச்சும் வெளியூர் கூட்டி போயேன்...” அப்படியாவது அவர்கள் வாழ்க்கை நேராகிவிடாதா என்ற எதிர்பார்ப்பு அவரிடம்.

ரவிக்கு அங்கே ஒரு வேலையை அவசரமாக முடித்துக் கொடுக்க வேண்டி இருந்ததால், வெளியூர் பயணத்தை ஒரு மாதம் ஒற்றி வைத்தான். ஆனால், பிரஷாந்தும், பல்லவியும் பெரியவர்களின் நிம்மதிக்காக மூன்றுநாள் பயணமாக சிம்லா கிளம்பிச் சென்றார்கள்.

அங்கே சென்றும் பல்லவியால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. பிரஷாந்தை காக்க வைக்கிறோமே..., தன்னால் அவன் வாழ்க்கை பாழாகிறதே என்பதே அவளுக்கு பெரும் கவலையாக இருந்தது.

அதை எண்ணி, அதையே சொல்லி அவள் அழ, “பல்லவி, நான் சந்தோஷமாத்தான் இருக்கேன். என்னைப் பற்றி கவலைப்படுவதை விட்டு, வந்த இடத்தை என்ஜாய் பண்ணு...” அவன் சொல்ல, அதைப் பின்பற்ற முயன்றாள்.

ஆனால், சுற்றிப்பார்க்க செல்லும் இடங்களில், இளம் ஜோடிகளின் நெருக்கம், அவர்களின் எதிர்பாராத இதழ் பரிமாற்றங்கள்..., அவர்களது அன்னியோன்னியம், அனைத்தையும் பார்க்கும் நேரம், ‘மாமாவுக்கும் இப்படி இருக்க ஆசை இருக்கும் தானே...’ தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

இப்பொழுது அவள் மனதில் செல்வம் அடியோடு இல்லைதான். ஆனால், பிரஷாந்தோடு முழு மனதோடு

கலந்துவிட முடியுமா என்பதும் அவளுக்குத் தெரியவில்லை. அவன் பார்வை மாற்றத்தை விதைத்திருந்தாலாவது தெளிந்திருப்பாளோ என்னவோ..., ஆனால், அவன் என்ன நினைக்கிறான் என்றே தெரியாமல் இருக்கையில் அவள் என்ன நினைக்க?

அவள் வாழ்க்கை இதுதான் என்பதில் தெளிவாக இருந்தாள். அவனோடு இருப்பதோ, ஒற்றை அறையை பகிர்வதோ அவளுக்கு எந்தவிதமான சங்கடத்தையும் அவளுக்கு அளிக்கவில்லை. ஆனால், அவனது நெருக்கம், அதை இயல்பாக ஏற்க முடியுமா என்று அவளுக்குத் தெரியவில்லை.

தன்னைப்பற்றியே விடாமல் அவள் சிந்திப்பதை அறியாமல், “பல்லவி, சாப்பிடாமல் என்ன யோசனை? சாப்பாடு பிடிக்கலையா? இன்னைக்கு ஒரு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ, நாளைக்கு ஊருக்கு போய்டலாம்” அவன் உரைக்க, அவன் கரிசனையில் நெஞ்சம் நனைந்தது.

கூடவே..., இந்த மூன்று நாளை அவன் எந்த எதிர்பார்ப்போடு நினைத்திருப்பான்? என்ன எண்ணியிருப்பான்? ஏமாற்றமாக உணர்வானோ? அவன் அப்படியில்லை என மனம் உரைத்தாலும், ஒரு மனைவியாக அவளால் சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

தனக்காக, தன் மனநிலைக்காக அவன் எவ்வளவோ பார்த்து பார்த்து செய்ய, அவனுக்காக தான் எதுவுமே செய்யாததுபோல் இருந்தது. இரண்டு நாட்கள் பொறுமையாக இருக்க முடிந்தவளுக்கு, மூன்றாம்நாள் அது முடியவில்லை.

‘ஏதாவது செய்ய வேண்டும்...’ முடிவெடுத்தாள்.

இரவு உணவை முடித்துக் கொண்டு அறைக்கு வந்தவர்கள் படுக்கையில் விழ, “மாமா...” தயக்கமாக அவள் அழைக்க, வேகமாக அவள் பக்கம் திரும்பிப் படுத்தான்.

நினைக்கையில் வெகு சாதாரணமாக தோன்றிய விஷயம், அவனிடம் உரைக்கப் போகையில் பூதாகரமாக எழுந்து மிரட்டியது. அவள் கண்களில் தெரிந்த கலக்கத்தையும், அலைப்புறுதலையும் பார்த்தவன், அவளாகவே சொல்லட்டும் என அமைதியாக இருந்தான்.

ஆழமாக மூச்செடுத்தவள், “நீங்க வேண்ணா ஏதாவது பண்ணிக்கோங்க மாமா...” மனதுக்குள் திக்கித் திணறினாலும், சொல்ல வந்ததை வேகமாக, அவன் கண்ணைப் பார்த்து சொல்லி முடித்தாள்.

# பகுதி - 14

தங்கள் தேனிலவு முடித்து ஊருக்கு வந்த பிரஷாந்த் தன் வழக்கமான ஓட்டத்தில் கலந்துவிட்டான். அவன் முகத்தில் புதிதாக ஒரு பிரகாசம். தன் வாழ்க்கை சீராகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்ற சந்தோசம் கொடுத்த ஒளி அது.

தேனிலவின் இறுதி நாளில், பல்லவி தன்னிடம் சொன்ன அந்த விஷயம். அது வெறும் சாதாரண வார்த்தையாக, அந்த நேர உந்துதலாக அவனால் எண்ண முடியவில்லை.

ஒருபெண் முழுதாக தன்னை ஒருவனுக்கு கொடுக்க முன்வருகிறாள் என்றால், நிச்சயம் அவள் மனதில் அவன் இருக்க வேண்டும். இல்லாமல் அது சாத்தியமே இல்லை என அவன் நம்பினான்.

அவள் உரைத்தவுடன், அவளை காற்று கூட புக முடியாமல் இறுக அணைத்துக் கொள்ள அவனுக்கும் ஆசைதான். ஆனால், தான் அப்பொழுது அதைச் செய்தால், அதை எதிர்பார்த்தே அவளை அங்கே அழைத்து வந்ததாக முடிவாகிவிடும் என்பதால், முயன்று தன்னை கட்டுப்படுத்தினான்.

“ஏதாவது பண்றதா...? இங்கேயா...? நம்ம வாழ்க்கை நம்ம வீட்டில் துவங்கணும். இப்படி எங்கேயோ இல்லை. தேவையில்லாமல் மனசை குழப்பிக்காமல், நிம்மதியா தூங்கு. வாழ்க்கை நமக்கு முன்னால் விரிந்து கிடக்கு, அதை அதன் போக்கில் வாழலாம். பிடிவாதமா எதையும் செய்ய வேண்டாம் சரியா...?” அவள் தோளை தட்டிக்கொடுத்து உறங்க வைத்தான்.

மூத்தவர்கள் இருவரும் ஒருவித தெளிவோடு இருந்தால், ரவி ஒருவித குழப்பத்தில் இருந்தான் என்றே சொல்லலாம். என்னவோ பெரிய மனிதனாக, அண்ணன் வாழ்க்கையை துவங்கிய பிறகு நாம் சேரலாம் என சொல்லிவிட்டானே

தவிர, அவனால் அவ்வாறு பேசாமல் இருக்க முடியவில்லை.

எதுவும் இல்லையென்றால் பரவாயில்லை..., பசித்தவன் முன்னால் விருந்தை பரிமாறிவிட்டு, நீ உண்ணக்கூடாது எனச் சொன்னால் என்ன மனநிலையில் இருப்பானோ, அப்படி ஒரு மனநிலையில் இருந்தான் ரவி.

கயல்விழியிடம் பேசுகையில் ஏதோ வீராப்பாக பேசிவிட்டான், அதை இப்பொழுது மாற்றிப் பேசவும் தயக்கம் விடவில்லை. இப்பொழுது அவளோடு ஒரே அறையில், அவளது நெருக்கம், அவளது வாசனை, தினமும் ஏதாவதொரு சாக்கிட்டு அவளை முத்தமிடும் தருணங்கள், திணறி திண்டாடிப் போனான்.

படுக்கையறையில் அவளை நெருங்க முடியாத தவிப்பு, வீட்டுக்குள் வெளிப்படத் துவங்கியது. அன்றைக்கு அப்படித்தான், அவள் கிச்சனுக்குள் தனியாக இருப்பதைப் பார்த்தவன், அவள் பின்னால் இருந்து அணைத்து, அவள் மேனியில் கரங்களை அலையவிட, “ஹையோ..., கிச்சன்ல வச்சு என்ன பண்றீங்க..., யாராவது வரப் போறாங்க...” அவன் கைகளை தடுத்தவாறே அடிக்குரலில் அவனை கண்டித்தாள்.

எதேச்சையாக அங்கே பத்மா வர, பதறி விலகினார்கள். அவன் அசடு வழிந்தவாறே வெளியேற, அவரிடம் சிக்கிக் கொண்டது என்னவோ கயல்விழிதான்.

“அத்த..., அது..., அவர் தண்ணி..., இல்ல...” எதையோ சொல்லி சமாளிக்க முயல, “அம்மாடி, உன் வயசைத் தாண்டி வந்தவதான் நானும்..., விடு, வேலையைப் பார்...” அவர் சாதாரணமாக உரைத்துவிட்டார். ஆனால், அவரை நேர்கொண்டு பார்க்க முடியாமல் அவள்தான் இரண்டு நாட்கள் திண்டாடிப் போனாள்.

அத்தோடு முடிந்ததா..., அவள் அங்கே இங்கே நடக்கையில் சட்டென அவளை தாவி அணைத்துக் கொள்வதும், பட்டென

முத்தமிடுவதும் என சீண்ட, பல முறை பல்லவியின் பார்வையிலேயே விழுந்தார்கள்.

அவர்களைப் பார்த்து பொறாமை எழுவதை விட, ரவிக்கு அண்ணன்தானே பிரஷாந்த், அவனுக்கும் அவன் மனைவியோடு இப்படி இருக்க ஆசை இருக்கும் தானே என்றுதான் தோன்றியது. மனதளவில் அவன் மனைவியாக மாற தான் ஆசைப்படுகிறோம் என்பதை அவள் உணரவே இல்லை.

அன்றும் அப்படித்தான்..., காலையில் பிரஷாந்த் அலுவலகத்துக்கு கிளம்பிக் கொண்டிருக்க, அவனுக்குத் தேவையானதை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். “எல்லாம் எடுத்து வச்சுட்டேன்..., மறக்காமல் லஞ்ச் பாக்ஸை எடுத்துக்கோங்க...” உரைத்தவள், தங்கள் அறைக்கதவை திறந்துகொண்டு வெளியே செல்ல முயன்றாள்.

பிரஷாந்தின் நேர் எதிர் அறைதான் ரவியுடையது. அவனது அறைக்கதவு திறந்திருக்க, எதேச்சையாக அவளது பார்வை அங்கே செல்ல, அங்கே அவள் கண்டது, இமை மூடி, இதழ் முத்தத்தில் மூழ்கியிருந்த அந்த இளம் ஜோடியைத்தான்.

சட்டென கதவைச் சாத்தியவள், அதிரும் மனதோடு அப்படியே நின்றுவிட்டாள். அவள் செய்கையைப் பார்த்தவன், வெளியே என்ன நடக்கும் என்பதை யூகித்துக் கொண்டவன், “அடேய்..., டோரை குளோஸ் பண்ணிட்டு என்ன வேண்ணா பண்ணித் தொலைடா...” அறைக்குள் இருந்து கத்த, சட்டென கலைந்தார்கள்.

“சின்னப்பய., கொஞ்சம் கூட விவஸ்தையே இல்லை..., நீ போ..., இப்போ எந்த தடையும் இருக்காது...” அவன் சொல்ல, அவளுக்குத்தான் அங்கிருந்து நகரவே முடியவில்லை.

அவள் கண்கள் அவனிடம் எதையோ சொல்ல முடியாமல் தவிக்க, அவளை நெருங்கியவன், “அன்னைக்கு கேட்டதை, இன்னைக்கு செஞ்சுக்கவா?” அவன் கேட்க, அவள் விழி வியப்பில் விரிந்தது.

அவளை நெருங்கி, இடையோடு சேர்த்து அணைத்தவன், அவள் கண்களைப் பார்த்தவாறே, அவள் முகம் நோக்கி குனிந்தான். எத்தனையோ முறை அவளை அணைத்திருக்கிறான்தான், ஆனால் இது வித்தியாசமாக இருந்ததை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

அவள் விழிகள் தாமாக மூடிக்கொள்ள, அவளை இன்னும் அருகே இழுத்து, தன் இதழ்களை அவள் இதழோடு ஆழப் புதைத்தான். தொட்டுவிட்டு விலகிவிட எண்ணியவன், அது முடியாமல், அவள் இதழ்களைச் சுவைக்கும் வேகம் எழ, மென்மையாக அவள் கீழுதட்டை உள்வாங்கிக் கொண்டான்.

இதழ் தீண்டி விலகிவிடுவான் என்றுதான் அவளும் எண்ணினாள், ஆனால் இது..., இதழ்களுக்குள் கதகதப்பாய் ஒரு உணர்வு. தேகத்தில் இருக்கும் முடிகள் அனைத்தும் சிலிர்த்துக் கொள்ள, அவள் கரங்கள் தாமாக உயர்ந்து அவன் சிகை கோதியது.

அவளது ஒத்துழைப்பு இன்னும் அவன் வேகத்தை அதிகரிக்க, அவள் இதழ்களை ஒரு வேகத்தில் சுவைத்தான். அவள் இதழ்களுக்குள் அவன் நடத்திய ஆராய்ச்சியில் அவள் வாய் உலர்ந்து போனது என்றே சொல்லலாம்.

“மாமா...” மெல்லியதாக அவள் முனக, மெதுவாக அவளை விட்டு விலகினான்.

அவன் முகம் பார்க்கத் தயங்கியவள், கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடியே போனாள். உல்லாசமாக சிரித்தவன், தானும் வேலைக்குச் சென்றான்.

செல்வத்தின் வீட்டிலோ, தன் மகன் அவமானப்பட்டு வெளிநாடு சென்றதை எண்ணி மனம் புழுங்கினார் அவனது தாய். பெரிய இடத்தை எதிர்க்கத் துணிவில்லாமல் அவர்களைப் பற்றி தவறாகப் பேசத் துவங்கினார்.

அதைக் கேள்விப்பட்ட பிரஷாந்த், ரவி இருவரும் கொதித்துப் போனார்கள். “டேய்..., நாம வேண்டாம்..., வேண்டாம்னு ஒதுங்கிப் போனாலும் அந்த பொம்பளை நம்மளை ரொம்ப சீண்டிப் பாக்குதுடா. அது வாயை அடச்சே ஆகணும்.

“அன்னைக்கு கோவில்ல வச்சு கயலைப் பாத்த அந்த பொம்பள, “என் பையனை வேண்டாம்னு சொன்ன நீ நல்லாவே இருக்க மாட்டன்னு சாபம் விட்டிருக்குடா..., அதைக் கேட்ட உடனே அங்கே போய் உண்டு இல்லைன்னு பண்ணட்டும்னு பார்த்தேன்...,

“எல்லாம் பெரியவங்களுக்காகத்தான் வேண்டாம்னு விட்டுட்டு வந்தேன். இதுக்குமேலே பொறுமையா இருந்தால், நாமல்லாம் மீசை வச்சதுக்கே அர்த்தம் கிடையாது..., ஏதாவது செய்யணும்...” பொங்கினான்.

“என்னது, கயல்விழி கிட்டே அந்த லேடி இப்படி சொல்லுச்சா? இதை ஏண்டா அன்னைக்கே என்கிட்டே சொல்லலை. போனா போகட்டும்னு பொறுமையா இருந்தால், நம்மளையே ஏறி மிதிக்கப் பாக்குதா? இதை நான் சும்மா விட மாட்டேண்டா...” தீவிரமாக எதையோ சிந்தித்தான்.

“என்னடா செய்யப் போற...? எதுவா இருந்தாலும் பாத்து செய். செஞ்சது நாமதான்னு தெரிஞ்சது..., அது ஊரையே கூட்டிடும்...” எச்சரித்தான்.

“செஞ்சது நாமன்னு தெரிஞ்சால் தானே..., கடவுள் பாத்துப்பான்னு பொறுமையா இருந்தால், அதை பயம்னு எடுத்துக்குதா. இனிமேல் கடவுளை நம்பினால் வேலைக்கு ஆகாது..., நானே இறங்கறேன். நீ போ...” அவனை அனுப்பியவன், வேகமாக தன் அலைபேசியை எடுத்து சில எங்களை அழுத்தி பேசினான்.

“உனக்கு இனிமேல் விடிவே கிடையாதுடா...” வாய்விட்டே புலம்பியவன், அங்கிருந்து வரப்போகும் செய்திக்காக

காத்திருக்கத் துவங்கினான்.

சரியாக ஏழாம்நாள்..., அவன் எதிர்பார்த்த அந்த விஷயம் அவனைத் தேடி வர, வேகமாக வெளியே வந்து தன் வீட்டு டிவியை ஆன் செய்தவன், “பல்லவி, அம்மா, ரவி, எல்லோரும் இங்கே வாங்க. ரவி, உன் பொண்டாட்டியையும் கூட்டி வாடா” அவன் குரல் உயர்த்தி அழைக்கவே அனைவரும் அங்கே கூடினார்கள்.

“என்ன மாமா...?” “என்னடா...?” “ஏண்டா கூப்ட்ட...?” ஒவ்வொருவரும் ஒன்றைக் கேட்டவாறே அங்கே வர, அவர்களிடம் டிவியைக் காட்டினான்.

“அதில் என்னடா இருக்கு...?” பத்மா புரியாமல் கேட்க, டிவியில் பிளாஷ் நியூஸ் என கீழே ஓடிய செய்தியைப் பார்த்த மற்றவர்கள் நம்ப முடியாத அதிர்ச்சியில் நின்றார்கள்.

“அம்மா..., அவ இப்போ சொல்லுவா பார்...” அவன் உரைத்த மறு நிமிடம், பெக்ரினில் சட்டத்துக்கு புறம்பாக டிரக்ஸ் வைத்திருந்த இந்தியாவைச் சேர்ந்த பி.ஃபார்ம் பட்டதாரி கைது...” செய்தி வாசிப்பவள் செய்தியை வாசித்து முடிக்க, வாய் பிளந்தார்.

“என்னடா இது...? அந்தப்பய இப்படியெல்லாமா செய்வான்? படுபாவி நல்லவன்னு நினைச்சேனே...” அவர் வாய்விட்டே புலம்ப, மற்ற அனைவரின் பார்வையும் அவனிடமே நிலைத்தது.

‘எனக்கு எதுவுமே தெரியாது...?’ என பெண்களிடம் பார்வையால் உரைத்தவன், ரவியைப் பார்த்து கண்ணைச் சிமிட்டினான். எப்படி இதைச் சாதித்தான் எனத் தெரியாமல் வியந்து போனான்.

மற்றவர்கள் அனைவரும் உள்ளே செல்ல, “எப்படிடா...?” அவனிடம் கேட்க, “உன் அண்ணன் கோல்ட்ஸ்டோரேஜ் வைத்திருப்பதிலும் ஒரு பலன் இருக்குடா...” உரைத்தவன்,

“வெளிநாட்டிலும் பணத்துக்கு மயங்கும் ஆட்கள் இருக்கத்தான் செய்யிறாங்க. ஜஸ்ட் பத்தாயிரம் டாலர்..., விஷயத்தை பக்காவா முடிச்சுட்டு, போலீசுக்கும் தகவல் கொடுத்துட்டான்.

“இந்த கேசில் இருந்து அவன் ஆயுசுக்கும் வெளியே வர முடியாது. அப்படியே வந்தாலும், உன் பேரப்பிள்ளையை பாக்க அவன் வர வாய்ப்பு இருக்கு. இதை நான் எப்பவோ செய்ய நினைத்தேன். ஆனா அப்போ மனசு வரலை.

“இப்போ இதுக்குமேலே அவனை விட்டு வைக்கக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன் அதான்..., இனிமேல் அந்த லேடி வீட்டை விட்டு வெளியே வரும்...? வாய்ப்பே இல்லை. வெளியே வந்தாலே, போதைப்பொருள் கடத்திதான் உன் மவன் இதையெல்லாம் சம்பாதிச்சானான்னு கேட்டே அதை சாகடிச்சுட மாட்டாங்க...” குரல் இறுக அவன் கேட்க, அவனுக்கு எதிரியாக தான் இல்லை என நினைத்து சந்தோஷப் பட்டான் ரவி.

# பகுதி - 15

பிரஷாந்தின் வேலையில் அவனுக்கு உதவியாக இருக்கத் துவங்கினாள் பல்லவி. அவனது கோல்ட் ஸ்டோரேஜுக்கு வரும் மருந்து வகைகளில் லீகல் மருந்துகள் எவை, எதை வைக்கலாம், எதை வைக்கக் கூடாது என பார்த்துச் சொல்வது அவளது வேலைதான்.

நாட்கள் அப்படியே கடக்க, அவர்கள் வாழ்க்கையில் வாழ்க்கையில் மெல்லிய மாற்றத்தை உணரத் துவங்கி இருந்தார்கள். தன் மன உளைச்சல்களில் இருந்து சற்று அல்ல, பெருமளவில் மீண்டுவிட்டாள். அதற்கு முழு முதல் காரணம் பிரஷாந்த் எனச் சொன்னால் மிகையில்லை.

அவனுக்குத் துணை நின்றவர்கள் அவனது குடும்பத்தார். மல்லிகாவுக்கு பல்லவியின் வாழ்க்கை ஒரு பாதுகாப்பான கைகளில் தஞ்சம் புகுந்திருப்பதில் பெரும் நிம்மதிதான். ஆனால், அந்த வாழ்க்கையை காப்பாற்றாமல் போய்விடுவாளோ என்றக் கவலை அவரை பெரிதும் வாட்டியது.

பிரஷாந்த் பொறுமைசாலி என்றாலும், அவள்மேல் உயிரையே வைத்திருப்பவன் என்றாலும், ஒரே மாதிரியான ஓட்டமும், வாழ்க்கையும் சீக்கிரமே போர் அடித்துவிடும் என்பது அவர் அனுபவத்தில் உணர்ந்த உண்மை ஆயிற்றே.

உலக அழகியே என்றாலும் மனைவியின் முகத்தையே வெறுமே பார்த்தவாறு ஒரு மனிதனால் எப்படி இருக்க முடியும்? அழகான புரிதலான தாம்பத்யமும், அதன் பலனான குழந்தைச் செல்வமும் இல்லாமல் அவர்கள் வாழ்க்கை முழுமையடையாதே.

பத்மா எவ்வளவுதான் நல்லவராக இருந்தாலும், அதைப் பயன்படுத்திக்கொண்டு அவரை ஏய்ப்பது எப்படி நியாயமாகும். தன் மகனின் வாழ்க்கை முழுமையடைய

வேண்டும், அவன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என அந்த தாயுள்ளம் எதிர்பார்க்காதா என்ன?

தன் வீட்டில் ஒரு மழலையின் காலடித்தடம் பதிய வேண்டும் என அவர் எதிர்பார்ப்பதை எப்படி தவறென சொல்ல முடியும்? இவ்வளவு நாள் பொறுமையாக இருந்துவிட்டார்..., இனிமேலும் அவர் பொறுமையாகவும் இருக்கலாம், ஆனால், அவர் பொறுமையை இழக்கும் நாள் வந்துவிடக் கூடாது என்பதே அவரது கவலை.

சில நாட்களாக அவர் மனம் இதையே அசைபோட, அங்கே வந்தாள் பல்லவி. அவளைப் பார்த்தவர், “பல்லவி, வாம்மா..., மூணு தெரு தள்ளிதான் இருக்கன்னு பேரு..., இந்த அம்மாவைப் பாக்க வர இப்போதான் நேரம் கிடைத்ததா?” அலுத்துக் கொண்டவர், அவளை வரவேற்றார்.

“அவருக்கு வேலையில் கொஞ்சம் ஹெல்ப் பண்றேம்மா..., அதான் வர நேரமே கிடைக்கலை. ஏன் நீங்க வர வேண்டியதுதானே” கேட்டவள் வீட்டுக்குள் நுழைந்தாள்.

“நீ சொல்றது நல்லா இருக்கு, பொண்ணு கொடுத்திருக்கும் வீட்டுக்கு அடிக்கடி வர முடியுமா?” அவர் கேட்க, இடுப்பில் கை வைத்தவாறு முறைத்தாள்.

“அம்மா, நீங்க பேசுறது உங்களுக்கே நியாயமா இருக்கா? இதுக்கு முன்னாடி நீங்க அத்தை வீட்டுக்கு வந்ததே இல்லையா? இப்போ மட்டும் என்ன புதுக் கதை...” கோபமாகவே கேட்டாள்.

“பொண்ணு அங்கே புத்தியா பிழைக்கறான்னா வரலாம். அவளே அங்கே விருந்தாளி மாதிரி தங்கியிருக்கா..., அப்போ நான் எப்படி வரது?” நாசூக்காக அவள் வாழும் முறையை சுட்டிக் காட்ட, சட்டென அமைதியானாள்.

“பேசுடி..., இவ்வளவு நேரம் என்னவோ கேட்டியே..., நான் பதிலுக்கு ஒரு வார்த்தை பேசுனதும் அமைதி ஆயிட்ட?”

“நீயே இப்படிக் கேட்டால் நான் என்னம்மா செய்யட்டும்?”

“உன் அம்மா கேட்டதையே உன்னால் தாங்கிக்க முடியலையே. கொஞ்ச நாளில், இதையே உன் அத்தை கேட்டா...?”

“அம்மா...?”

“உன் அம்மாதாண்டி..., இதுதான் உன் வாழ்க்கை என்பது உனக்குப் புரியுதா? இன்னும் எத்தனை நாள் இப்படியே தாமரை இலை தண்ணீ மாதிரி இருக்கப் போற? உன்னை கட்டிகிட்ட உன் புருஷனுக்கு கொஞ்சமாவது நீ நியாயம் செய்யறியா?”

“ஒரு மாசமா ரெண்டு மாசமா? முழுசா ஆறு மாசம் ஓடிப் போய்டுச்சு. ஏதோ இன்னைக்கு மாறுவ, நாளைக்கு மாறுவன்னு பாத்தா..., ஒரேடியா இப்படியே இருக்க. இன்னைக்கு வரைக்கும் அந்த வீட்டில் உன்னை குறையா ஒரு பார்வை பாத்திருப்பாங்களா? பேசியிருப்பாங்களா?

“அதை கொஞ்சமாவது நினைச்சுப் பாக்கணும்டி. அப்படி என்னடி பொல்லாத காதல்? முதல்ல நீ பண்ணதுக்குப் பேர் காதலா? தகுதியானவன் மேலே வைக்கும் பாசத்துக்குதான் மதிப்பு கொடுக்கணும். அதை விட்டு...”

“போதும்மா..., நான் எவனையும் நினைக்கலை...” வெடித்தாள்.

“பிறகு ஏண்டி வாழாமல் இருக்க?” அந்த கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. ஒரு வாரத்துக்கு முன்னர் நடந்த சம்பவம் மனதில் எழுந்து அவளை புரட்டிப் போட்டது.

இப்பொழுது இவ்வளவு தெளிவாக தைரியமாக என் மனதில் யாரும் இல்லை என சொல்லிவிட்டாள். ஆனால், அன்று ஒருநாள் இரவில் தன்னை மீறி அவளை பிரஷாந்த் நெருங்கியிருக்க, அவன் முத்தத்தை அனுமதிக்க முடிந்த

அவளால், அவன் தொடுகையை சட்டென ஏற்க முடியவில்லை.

“இப்போ வேண்டாம் மாமா...?” தன்னை மீறி அவள் உரைத்திருக்க, அவள் அதை ஏன் சொன்னாள்? எதற்காகச் சொன்னாள் என்பது இந்த நொடி வரைக்கும் அவளுக்குப் புரியவில்லை.

அவன் என்னவோ அதையும் கண்டுகொள்ளாமல் அவளோடு சாதாரணமாக உரையாடுகிறான்தான். ஆனால் அவளுக்குத்தான் குற்ற உணர்வாகப் போயிற்று.

“பதில் சொல்லுடி..., கேட்டது காதில் விழுதா இல்லையா?” அவளைப் பிடித்து உலுக்கினார்.

“அம்மா..., எனக்கு..., எப்படி...?” முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள். இத்தனை வருடங்கள் ஒருவனை மனதில் சுமந்துவிட்டு, அவன் தன் நேசத்துக்கு தகுதியில்லாதவன் என்பது வேறு விஷயம், ஆனால், அது ஒன்றுமே இல்லை என உதறிவிட்டு, தூய்மையான அவனது நேசத்தை ஏற்க அவளுக்கு பெரும் தயக்கமாக இருந்தது.

பிரஷாந்த் தன்னை இரக்கப்பட்டுதான் திருமணம் செய்துகொண்டான் என எண்ணினாள். அந்த இரக்கத்துக்கு பரிசாக தன்னைக் கொடுத்து அந்த கடனை அடிப்பதுபோல்..., அந்த உணர்வே அவமானமாக இருந்தது.

தாங்கள் இணைவதற்கு முன்னால் அவனிடம் பேச வேண்டும்..., மனம் விட்டு பேச வேண்டும் என அவள் தவிக்க, அதை எப்படித் துவங்குவது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

“புருஷன் கூட வாழ ஏண்டி அவ்வளவு தயக்கம்? உன் வாழ்க்கையை நீ காப்பாத்திக்கணும். உன் புருஷன் கூட சேராமல் இனிமேல் இந்த அம்மா வீட்டுக்கு வராதே போ...” மகள் அப்படியாவது பிரஷாந்தோடு வாழ்ந்துவிட மாட்டாளா என்ற ஏக்கத்தில் பேசினார்.

அந்த நிமிடம், பிரஷாந்த் அவள்மேல் கொண்டிருக்கும் நேசத்தை சொல்லியிருந்தால் அவள் தெளிந்திருப்பாளோ என்னவோ..., அதை அந்த நேரம் அவளிடம் உரைக்க சுத்தமாக மறந்து போனார்.

தாய் அப்படிப் பேசியது அவளுக்கு வருத்தம்தான் என்றாலும், "நீங்க ஏன் இப்படி பேசறீங்கன்னு எனக்குப் புரியுதும்மா. எனக்கு உங்க மேலே கோபமெல்லாம் வரலை. ஆனா, நீங்க சொன்ன பிறகு, இனிமேல் இங்கே வர மாட்டேன்..." கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறே அங்கிருந்து வெளியேறினாள்.

அன்று மனைவியை அழைத்த ராஜன், "பத்மா..., அந்த சின்னப் பயலை முதல்ல எங்கிட்டாவது ஒரு வாரம் பத்து நாள்ன்னு அனுப்பி வை" சற்று கோபமாக உரைக்க, புரியாமல் விழித்தார்.

"என்னங்க..., என்ன திடீர்ன்னு...? ஏதோ அவசர வேலை, அதை முடிக்காமல் எங்கேயும் அனுப்ப முடியாது..., அப்படி அனுப்பினால் வேலை பாதிக்கும்னு அன்னைக்கு நீங்கதான் சொன்னீங்க?" அவர் நொடித்துக் கொள்ள,

"எவடி இவ..., புரியாமல் பேசிகிட்டு. முதல்ல நான் சொன்னதைச் செய்" தன் நெற்றியிலே பத்மா அறியாதவாறு அடித்துக் கொண்டார். அன்று காலையில் அவர் கண்ட காட்சியை நினைத்து, மீண்டுமாக அடித்துக் கொண்டார்.

காலையில் பிரஷாந்த் வேலைக்குச் சென்ற பிறகு பல்லவி தாய் வீட்டுக்குச் சென்றிருக்க, பத்மா மார்க்கெட்டுக்குச் சென்று மீன் வாங்கி வருவதாகச் சொல்லிச் சென்றார்.

வீட்டில் இருந்த ராஜனுக்கு தண்ணீர் தாகமெடுக்க, தண்ணீர் குடிக்க வேண்டி கிச்சனுக்குச் செல்ல, அங்கே தன் மனைவியோடு முத்த யுத்தத்தில் ஈடுபட்டிருந்தான் ரவி.

அவன் சேட்டை பொறுக்காத கயல்விழி, “ஹையோ..., என்னங்க..., நீங்க இப்படியே பண்றீங்க. பண்றதெல்லாம் பண்ணிட்டு நீங்க என்னவோ கூலா இருக்கீங்க. என்னால் வீட்டில் யார் முகத்திலும் முழிக்கவே முடியலை” அவள் சொல்லச் சொல்ல, அப்பொழுதும் அவள் கன்னம், கழுத்து என அவன் இதழ்கள் பயணிக்க அவன் சேட்டையை தாங்க முடியவில்லை.

ஆயிரம் இருந்தாலும், அவன் தன் கணவன் என்பதால் அவளால் ஒரு அளவுக்குமேல் கடினமாகவும் பேச முடியவில்லை. பிரிந்து இருக்கலாம் எனச் சொன்னவனும் அவன்தான். இப்பொழுது இரவுகளில் விலகியிருக்க முடியாமல் தவிப்பவனும் அவன்தான்.

தன்னைப் பிரிந்திருக்கும் ஏக்கமே, இப்படி வெளிப்படுகிறது என்பது புரியாத அளவுக்கு அவள் என்ன குழந்தையா? இப்பொழுது ‘ரூமுக்கு போகலாம் வா’ என அழைத்தால் அவள் செல்லத் தயார்தான். அவனுக்குக் கொடுக்காமல் யாருக்காக தன் கற்பை பாதுகாக்கிறாளாம்?

ஆனால் அதைச் செய்யாமல், அவளை உரிமையாய் அழைத்துச் செல்லவும் முடியாமல், தன் வேகத்துக்கு வடிகாலாய் அவன் முத்தமிட, “நம்ம வீட்டில் ஏது எலி...? கீச் கீச்சுன்னு சத்தம் கொடுக்குது?” வாய்விட்டே புலம்பியவாறு அவர் கிச்சனுக்கு வர,

ரவியை ஒரே உதறில் உதறித் தள்ளியவள், அவர் இப்பொழுது கிச்சனுக்குள் வந்தால் என்ன நினைப்பார்’ என்ற உணர்வில் கண் கலங்கிவிட்டாள்.

“ஏய்..., எதுக்கு இப்போ அழற...? நீ என் போண்டாடிடி...” ஆண்மகன் அவனுக்கு ஒரு பெண்ணின் நுண்ணிய உணர்வு புரியவில்லை.

அவனை கொலைவெறியில் முறைத்தவள், “இப்போ மாமா இங்கே வந்தாங்க..., நான் இங்கே இருக்கவே மாட்டேன்...,

என் அம்மா வீட்டுக்கு போய்டுவேன்..., திரும்பி வரவும் மாட்டேன்...” முதல் முறையாக தன் கோபத்தை காட்டினாள்.

திகைத்துப் போனான் ரவி. அவளை அழாதே என செய்கையால் உரைத்தவன், “அப்பா..., என்னப்பா...?” கேட்டவாறு கிச்சன் வாசலில் வந்து நின்றான்.

“ஒண்ணும் இல்லடா...” உரைத்தவர், அப்படியே திரும்பி நடந்துவிட்டார். அவர்கள் இருவரின் நிழல் உருவம் வாசலில் விழுந்து, அதை அவர் கவனித்து விட்டதை அவர்கள் அறியவே இல்லை.

‘இந்த பயலுக்கு வீட்ல ரூம் இருக்குறதே தெரியாது போல...’ மனதுக்குள் எண்ணியவாறே அங்கிருந்து நடந்தார். இதை எப்படி மனைவியிடம் சொல்ல முடியும்? எனவே மறைமுகமாக அவனை வெளியூர் அனுப்பச் சொன்னார்.

கணவன் ஏன் இப்படிச் சொல்கிறார் என பத்மாவால் யூகிக்க முடிந்தது. ‘இந்த சின்ன பய என்ன செஞ்சு வச்சான்னு தெரியலையே. அன்னைக்கே நான் சொன்னேன்...’ அவராலும் மனதுக்குள்தான் நினைக்க முடிந்தது.

இன்னும் விளையாட்டுப் பிள்ளையாகவே இருக்கும் அவனை என்ன செய்வது என்றே அவருக்குத் தெரியவில்லை. ‘இன்னைக்கு வரட்டும்?’ எண்ணியவர் அவனுக்காக காத்திருக்கத் துவங்கினார்.

ஆனால் அவன் அப்பொழுது அவன் அறைக்குள், மனைவியிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான். “கயல்..., இனிமேல் இப்படி பண்ண மாட்டேன். நீ அழாதே...” அவள் கோபத்தை கூட தாங்கிக் கொள்ளலாம், இந்த அழுகையை தாங்கவே முடியாமல் தவித்தான்.

“என்னைத் தொடாதீங்க..., நான் என் அம்மா வீட்டுக்கே போறேன்” அவள் சொன்னதையே திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். ராஜன் மட்டும் தங்களை அப்படி ஒரு

நிலையில் பார்த்திருந்தால்?' என்னும் நினைப்பே அவளுக்கு கொடுமையாக இருந்தது.

“எங்க அப்பாவும் என் வயசை தாண்டி வந்தவர்தான்..., எதுவும் நினைக்க மாட்டார்...” அவள் கோபம் உணர்ந்து அவன் நியாயம் பேச, அவனது குறும்புத்தனம் இப்பொழுது அவளுக்கு எரிச்சலையே அளித்தது.

“வாயை மூடுங்க...” அவள் கத்த, இதற்கு முன்னர் அவள் சொன்ன அந்த வார்த்தைக்கும், இப்பொழுது அவள் உரைக்கும் இந்த வார்த்தைக்கும் இருக்கும் மலையளவு வித்தியாசத்தை உணர்ந்து திகைத்துப் போனான்.

# பகுதி - 16

கயல்விழி, ரவியிடம் பேசுவதையே நிறுத்திவிட்டாள் என்றே சொல்லலாம். முன்பு அறைக்கு வெளியே அவளை நிழல்போல் தொடர்பவன், பார்வையால் கூட தொடர பயந்தான்.

அதற்குக் காரணம்..., ‘இனிமேல் இன்னொரு முறை என்னை தொட்டீங்க, நான் அம்மா வீட்டுக்கு போய்டுவேன்’ என அவள் சொன்ன வார்த்தை, அதை வெறும் வார்த்தையாக அவனால் நினைக்க முடியவில்லை.

அந்த நேரத்தில்தான், பத்மா அவனை வெளியூர் செல்லச் சொல்ல, “நீ வேற ஏம்மா வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சற...? போம்மா...” அவன் சொன்ன விதத்தில், அதைக் கேட்டுக் கொண்டிருந்த கயல்விழிக்கே சிரிப்புவர, சட்டென அதை மறைத்துக் கொண்டாள்.

“ஏண்டா..., உன்னை என்ன சண்டைக்கா போகச் சொன்னேன்? வெளியூர் தானே போகச் சொன்னேன்” பத்மா விளங்காமல் கேட்க,

“யம்மாவ்..., உன் காலில் வேண்ணா விழறேன்..., என்னை உட்டுடு..., நானே பாத்துக்கறேன்” பரிதாபமாக கெஞ்ச, ‘இந்த பயலுக்கு என்ன ஆச்சு?’ எண்ணியவாறே அங்கிருந்து அகன்றார்.

கயல்விழியோ தன் சிரிப்பை மறைத்துக் கொள்ள, அங்கிருந்து அகன்றாள். அடுத்த ஒரு வாரத்தில், ரவி ஆளே மாறிப் போனான் என்றுதான் சொல்ல வேண்டும். எப்பொழுதும், சிரிப்பும், கேலியும், கிண்டலுமாக இருப்பவன், எல்லோரிடமும் கோபப்பட்டான்.

அந்த வீட்டிலேயே கலகலப்பாக இருப்பவன் கோபம் காட்ட, வீடே களையிழந்ததுபோல் ஆனது. ஏதோ கணவன் மனைவிக்குள் சிறு சண்டை, சரியாகப் போய்விடும் என

அனைவரும் நினைக்க, அது சரியாகும் நிலையைக் காணோம்.

“பிரஷாந்த், சின்னவன் ஆளே மாறிட்டாண்டா..., என்ன சொன்னாலும் கோவப்படுறான், நீ என்னன்னு கேக்கக் கூடாதா?” அவனிடம் சொல்லி வருத்தப்பட்டார்.

“அம்மா, அவன் குடும்ப விஷயத்தில் எல்லாம் நான் தலையிட முடியாது. அது நல்லாவும் இருக்காது. நீங்க பேசாமல் இருங்க, கொஞ்ச நாளில் சரியா போய்டும். நான் நாளைக்கு மும்பை கிளம்பறேன், ஒரு மாசம் கழிச்சுதான் வருவேன்.

“அது வரைக்கும் பல்லவியை பாத்துக்கோங்க. அத்த அவளை என்ன சொன்னாங்கன்னு தெரியலை, அங்கே வேற போக மாட்டேங்கறா. அத்தைட்ட கேட்டால் அவங்களும் ஒண்ணுமில்லன்னு மழுப்பறாங்க, இவ வாயையே தொறக்க மாட்டேங்கறா?

“எனக்கு என்ன செய்யன்னே தெரியலை. எனக்கு இருக்குற பிரச்சனை போதாதுன்னு, நீங்க வேற ரவி பிரச்னையை கொண்டு வர்றீங்க” வீட்டில் இருந்து வெளியே ஒரு மாதம் இருக்க வேண்டுமே என்ற கவலையில் அவனும் பேச, யாருக்கு யார் ஆறுதல் சொல்லவென்றே தெரியவில்லை.

ஏற்கனவே பல்லவி விஷயத்தில் ஒரு முறை ஏமாந்தது வேறு அவனுக்கு அடி மனதில் பெரும் தவிப்பாக இருந்தது. கூடவே, வெளியூர், அதுவும் ஒரு மாதம் அவளைக் காணாமல், அவளோடு இருக்காமல் இருப்பதை நினைத்தால், அதைவிட வருத்தமாக இருந்தது.

அன்று இரவில்..., அறைக்கு வந்தவளிடம், “காலையில் எட்டு மணிக்கு எனக்கு ப்ளைட்..., காலையில் அஞ்சு மணிக்கு கிளம்பினால்தான் சரியா இருக்கும். ஒரு மாசம் உடம்பை பாத்துக்கோ, சாப்பிடாமல் இருக்காதே. எதையும்

யோசிக்காதே...” அவன் ஒவ்வொன்றாக உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

“ஏதாவது பேசு...” அவன் கேட்க,

“சீக்கிரம் வந்துடுங்க..., நீங்க இல்லாமல், இங்கே நான் தனியா...” அவளுக்கு எப்படி தன் உணர்வை வெளிப்படுத்த என்று தெரியவில்லை.

“அதென்ன தனியா? அதான் எல்லோரும் இருக்காங்களே” அவன் அவளை ஊடுருவ,

“யார் இருந்தாலும், நீங்க இருக்குற மாதிரி இருக்குமா...?” அவள் பட்டென கேட்க, அவனுக்குள் பனிச் சாரல்.

அதை மறைத்தவன், “சரி படுத்துக்கோ..., காலையில் சீக்கிரம் வேற எழணும்” உரைத்தவன் தானும் படுத்துக் கொண்டான்.

இருவரும் படுத்துவிட்டாலும், உறக்கம் என்பது மருந்துக்கும் அவர்களை நெருங்கவில்லை. ‘இன்னும் ஒரு மாதம் அவளை பார்க்க முடியாதே’ என அவன் உறங்க முடியாமல் புரள, அதே நினைவில்தான் அவளும் விழித்துக் கிடந்தாள்.

எவ்வளவு நேரமோ தெரியாது..., நள்ளிரவிலும் அவன் புரண்டு படுப்பது தெரிய, “தூங்கலையா மாமா...?” அவள் கேட்க,

“பல்லவி..., ஒரு அஞ்சு நிமிஷம் என்னை சகிச்சுக்க முடியுமா? என்னால்..., எனக்கு...” தடுமாறியவன், அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். கூடவே, அவள் முகம் முழுக்க முத்தமிட்டவன், அவள் எலும்புகள் நொறுங்கும் அளவுக்கு இறுக அணைத்தான்.

‘என்ன சகிப்பது...? எதை...?’ அவள் சிந்திக்கும் பொழுதே, அவனது ஆக்கிரமிப்பு அதிகரிக்க, ‘மாமா இதையா சொல்றாங்க...?’ அவன் அணைப்பை சிந்திக்க,

அவள்மேல் அழுத்தமாக புதைந்தவன், அவள் இதழ்களை கவ்விக் கொண்டான். கூடவே தன் கரங்களை அவள் மேனியில் அலையவிட்டவன், ஆடைக்கு மேலாக அவளை உணரத் துவங்கினான். அவன் கரத்தின் அழுத்தம் அதிகரிக்க, அவள் மூளை வேலை நிறுத்தம் செய்தது.

அவள் தேகம் அவன் கரத்தில் நெகிழ, அதை உணர்ந்தவனுக்கு அவளை முழுதாக ஆண்டுவிடும் வேகம். "பவி..." பிதற்றியவனின் இதழ்கள் அவள் மேனியில் பயணிக்கத் துவங்க, பற்களால் மெல்லியதாக காயம் செய்தான். அவன் செய்கைகள் அவளை மிதக்க வைக்க, தானும் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

கூடவே அவனது 'பவி' என்னும் அழைப்பு..., இதுவரை யாரும் அவளை அப்படி அழைத்தது இல்லை. முதல் முறையாக செல்லமாக அழைக்கிறான்..., அது அவளுக்கு மேலும் போதையூட்ட, "மாமா..." மெல்லியதாக அழைத்தவள், குழைந்தாள்.

"இன்னும் ஒரு மாசம்டி..., எப்படி உன்னை விட்டு இருப்பேன்...?" கேட்டவன் அவள் மேனியின்மேல் போராட, 'தன்னை ஆண்டுவிட மாட்டானா?' என தவித்துதான் போனாள்.

"பவி..." தான் உணரும் விஷயங்கள், முழுதாக அதை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற வேகம், அது முடியாத தவிப்பு..., தனக்குள் போராடினான். அந்த நிலையிலும், முழுதாக அவளை ஆண்டுவிட முனையவில்லை.

ஒரு கட்டத்தில் இதற்குமேல் சென்றால், தன்னால் அவளைவிட்டு விலக முடியாது என்பது புரிய, பட்டென அவனை விட்டு விலகியவன், அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினான். வான்வெளியில் இறக்கை இல்லாமல் பறந்து கொண்டிருந்தவள், படார் என தரையில் வீழ்ந்ததுபோல் உணர்ந்தாள்.

‘ஏன் இப்படி...? மாமா ஏன் விலகினாங்க...?’ தன்னையே கேட்டுக் கொண்டவளுக்கு, அப்பொழுதுதான், அவன் ‘ஐந்து நிமிடம் என்னை சகித்துக் கொள்வாயா?’ எனக் கேட்டது நினைவுக்கு வர, குப்புற விழுந்து அழுதாள்.

‘அப்படின்னா இவ்வளவு நேரம் அவங்களை சகிச்சுட்டு இருந்தேன்னு நினைச்சாங்களா?’ அந்த நினைவே கொடுமையாக இருந்தது.

அவன் வந்தவுடன் அதைப் பற்றி கேட்டுவிடும் முடிவில் இருக்க, அவன் அறைக்குத் திரும்பவே இல்லை. வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்றவன், தன்னை நிலை நிறுத்திக் கொள்ள போராடினான்.

அவளை அவளுக்கே உணர்த்த விரும்பியவன், தானே அதில் மூழ்கிப் போன உணர்வு. அவள் மனதில் தான் இருக்கிறோம், ஆனால் அதை உணர மறுக்கிறாளே என்ற வருத்தம் அவனுக்கு இருக்க, அவளுக்கு தான் ஸ்பெஷலானவன் என தெரிவிக்க வேண்டியே அப்படி நடந்து கொண்டான்.

தனது ஒரு மாத பிரிவு அதை அவளுக்கு உணர்த்தும் என்றாலும், ஒரு கணவனுக்கான நெருக்கம், அருகாமை அது கொடுக்கும் உணர்வு தனிதானே. அவள் அப்பொழுதே சிந்திக்கட்டும் என எண்ணியவன், மாடியில் இருக்கும் சிறு அறையிலேயே படுத்துக் கொண்டான்.

காலையில் எழுந்தவன், ஹாலில் இருந்த பாத்ரூமில் குளித்து தயார் ஆனவன் அதன் பிறகு தன் பயணப்பை, லேப்டாப் பேகை எடுக்க வேண்டி அறைக்குச் சென்றான்.

அந்த நேரத்திலும் உறங்காமல் விழித்திருந்தவள், “ஏன் மாமா அப்படிப் பண்ணீங்க...?” அவன் விலகியதை சுட்டிக்காட்டி அவள் கேட்க, அது புரிந்தாலும், “சாரி..., நான் அப்படி செய்திருக்க கூடாதுதான்...” உரைத்தவன் தன் பொருட்களை எடுத்துக் கொண்டான்.

“மாமா..., நான்...” தான் எதைக் கேட்டால், அவன் எதைப் புரிந்து கொள்கிறான் என தவித்துப் போனாள்.

அவள் மேலே பேசப் போகையில், “எனக்கு டைம் ஆச்சு...” உரைத்தவன் வெளியே வர, அவனை ஏர்ப்போர்ட் அழைத்துச் செல்ல ரவி தயாராக இருந்தான்.

அவன் முன்னால் எதையும் பேச முடியாமல் அமைதியானவள், “போய் சேர்ந்துட்டு போன் பண்ணுங்க” அவளால் அதைத்தான் உரைக்க முடிந்தது.

“மெஸ்சேஜ் பண்றேன்...” பேசக்கூட முடியாது என்பதை அவன் மறைமுகமாக உரைக்க, கையைப் பிசைந்தாள். ‘உங்களை நான் ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்...? நீங்க என் கணவன்..., உங்களுக்கு என்மேல் இல்லாத உரிமையா...?’ இன்னும் என்னென்னவோ சொல்ல அவளுக்கும் ஆசைதான்.

ஆனால், பேசவே வாய்ப்பளிக்காமல் செல்லும் அவனிடம் என்ன சொல்லவாம்? அவன் சென்றுவிட்டான்..., மும்பை சென்று சேர்ந்த தகவலையும் கொடுத்துவிட்டான். அவள்தான் அவன் இல்லாத வீட்டில் இருக்க முடியாமல் திணறிப் போனாள்.

மூன்றுவேளை உணவு உண்கையில், ஒவ்வொரு வேளையும் எவ்வளவு வேலை இருந்தாலும் தனக்காக, தன்னை சாப்பிட வைக்க வேண்டும் என்பதற்காக அவன் தன்னோடு உணவு உண்டது நினைவுக்கு வந்து இம்சித்தது.

இரவு உறங்குகையில், தன் கை பற்றியவாறு உறங்கும் பிரஷாந்த், காலையின் தான் விழித்த மறு நிமிடம் தானும் எழுந்து கொள்ளும் பிரஷாந்த், தன்னை தனிமையில் எதையும் சிந்திக்க விடக் கூடாது என்பதற்காக தனக்கு அலுவலக வேலையை கொடுக்கும் பிரஷாந்த்..., நின்றால் அவன் நடந்தால் அவன்..., அவன் மட்டுமே நினைவில் நின்றான்.

தன்னை அறியாமலே அவனைச் சார்ந்து எப்படி இருந்திருக்கிறோம் என்பது அந்த தனிமை அவளுக்கு உணர்த்தியது. இறுதியாக அந்த இரவில், அவன் அறிமுகப்படுத்திய உணர்வுகள், தன் உணர்வுகளை அடக்க முடியாமல் திணறிய அவன் நிலை, அவன் கை தீண்டிய இடங்கள் இன்னும் தகிக்கும் உணர்வு.

ஒரு வாரமே முடியவில்லை, அதற்கு முன்பாகவே அவன் அருகே வேண்டும் என அவள் திணற, மும்பையில் வெளிநாட்டு ஆட்களுக்கு பிடித்த விதத்தில் அலுவலகம், இன்ன பிற விஷயங்களை செய்து கொடுப்பது என வேலையில் மூழ்கி இருந்தான்.

அவள் அவளை உணர வேண்டும், உணர்ந்து தெளிய வேண்டும் என்பதற்காக அவளுக்கு அழைப்பதை முழுதாக தவிர்த்தான்.

ரவியின் ஆர்ப்பாட்டம் அதிகரிக்க, பத்மாவால் அதற்குமேல் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவனிடம் பேச முயன்றாலே முகத்தை திருப்பிக்கொண்டு செல்ல, கயல்விழியிடம் பேச முடிவெடுத்தார்.

கயல்விழி தன் அறையில் இருக்க, அவளைத் தேடி அறைக்கே வந்தார் பத்மா. அவரைப் பார்த்தவள், “அத்த..., ஏதாவது வேணுமா? ஒரு குரல் கொடுத்திருந்தால் நானே வந்திருப்பேனே...” கேட்டவள் படுக்கையில் எழுந்து அமர்ந்தாள்.

அவள் அருகே தயக்கமாக அமர்ந்தவர், “அம்மாடி..., இந்த காலத்து புள்ளைங்களுக்கு அட்வைஸ் பண்ணா பிடிக்காதுன்னு தெரியும். ஆனாலும் சொல்லாமல் இருக்க முடியலை...” சற்று நிறுத்தி அவள் முகம் பார்க்க, அமைதியாக தலை குனிந்தாள்.

அவர் பேச வந்திருப்பது என்ன விஷயமாக இருக்கும் என அவளுக்குத் தெரியாதா என்ன? அவள் அமைதியே அவருக்கு போதுமானதாக இருக்க, “அம்மாடி, இந்த வீட்டில்

ரவியோட அப்பா பேசுவது என்பதே அபூர்வம்தான். இப்போ மட்டும் இல்லை, அப்போவே அவர் அப்படித்தான்.

“பிரஷாந்த்..., தேவைக்கு பேசுவான், எல்லாத்தையும் எடுத்து செய்வான்..., சின்ன வயசிலேயே ரொம்ப பொறுப்பா இருப்பான். அதே நேரம் சின்னவன் இருக்கானே..., அஞ்சு வயசு வரைக்கும் என் இடுப்பை விட்டு இறங்குனதே கிடையாது.

“சரியான வீட்டுக் கோழின்னு சொல்லலாம். என் தனிமையை போக்கிக்க அவன்கிட்டேதான் நான் பேசிட்டே இருப்பேன். இந்த வீட்டில் அவனுக்கு செல்லமும் ஜாஸ்த்தி. எதையுமே சீரியஸா எடுத்துக்கவே மாட்டான். படிப்பை முடிச்ச உடனே, அவங்க அப்பாகூட வேலைக்கு போறேன்னு நின்னான்.

“அதுக்கு அவங்க அப்பா சொன்ன ஒரே வார்த்தை, உன் விளையாட்டுத்தனைத்தை எல்லாம் வீட்டோட விட்டுட்டு வர்றதா இருந்தால் வா..., இல்லன்னா வராதே என்பதுதான். அவன் வீட்டுக்குள்ள தான் இப்படி விளையாட்டா, பேசிட்டு இருப்பான்.

“வெளியே சரியான முரடுன்னு சொல்லக் கேள்வி. சில நேரம் அவங்க அப்பாவே வீட்டுக்கு வந்து, பய நல்லா வேலை வாங்கறான்னு பாராட்டுவார்.

“அவன் இந்த வீட்டுக்குள் என்ன செய்தாலும், அதை நாங்க எல்லாம் சின்னப்பையன் சேட்டையாதான் கணக்கில் எடுத்துப்போம். கல்யாணத்துக்குப் பிறகும் அவன் அப்படியேதான் இருந்தான்...” அவள் கரத்தை பற்றியவர், அவளை கனிவாய் பார்க்க, ‘புரிந்தது...’ என தலை அசைத்தாள்.

“சில நேரம் இன்னும் விளையாட்டு பிள்ளையா இருக்கானே..., எப்போ விவரம் வரும்னு நானே நினைச்சிருக்கேன். ஆனா இப்போ..., உங்களுக்குள் என்ன

பிரச்சனை, என்ன ஏதுன்னு நான் கேக்கவே போறதில்லை, அது எனக்கு அவசியமும் இல்லை.

“ஆனா..., அவன் கொஞ்ச நாளா சரியாவே இல்லை. பொறுப்பா இருக்கணும்னு நினைச்ச நானே, அவன் விளையாட்டு பிள்ளையாவே இருந்துட்டால் பரவாயில்லைன்னு நினைக்க ஆரம்பிச்சுட்டேன். உன் புருஷன் நாசூக்க இருக்கணும் என நீ நினைப்பதில் தப்பில்லை.

“அதை நான் குத்தம் சொல்லவும் இல்லை. ஆனா..., அவனை நீதான் இனிமேல் பாத்துக்கணும். ஒரு அம்மாவால் எப்பவும் அம்மாவா மட்டும்தான் இருக்க முடியும். ஒரு மனைவியால், அம்மாவாகவும் மாற முடியும், மனைவியாகவும் இருக்க முடியும்.

“நான் சொல்ல வர்றது உனக்குப் புரியுதா? இந்த சூழலை விட்டு வெளியே போய் மனசு விட்டு பேசுங்க. வாழ்க்கையை வாழ வேண்டிய வயசில் தொலைக்கக் கூடாதும்மா..., பாத்துக்க...” அவர் உரைக்க,

“இனிமேல் இப்படி நடக்காது அத்த...” அவள் உரைக்க, நிம்மதி அடைந்தார். தன் வாழ்க்கையை நேராக்க முடிவெடுத்தாள் கயல்விழி.

# பகுதி - 17

அன்று வேலை முடித்து ரவி வீட்டுக்கு வர, அவன் கையில் தண்ணீர் சொம்பை கொடுபோய் கொடுக்க, ஆச்சரியமானவன், “கோவம் போயிடுச்சா?” ஆச்சரியமாக கேட்டான்.

அவன் கண்களில் வந்த விபரீத ஒளியே அவன் எதையோ செய்யப் போகிறான் என்பதை உணர்த்த, வேகமாக அங்கிருந்து அகன்றாள். “அதானே..., மலை இறங்கிட்டாளோன்னு ஒரு நிமிஷம் சந்தோஷப் பட்டுட்டேன்” வாய்விட்டே புலம்பியவன் குளிக்கச் சென்றான்.

அவனுக்கு சோப், டவ்வல் என எடுத்து வந்து கொடுக்க, “என்ன பிளான் பண்றான்னே தெரியலையே...” தாடையைத் தடவியவன், அப்படியே நின்றுவிட,

“குளிக்கலையா...? முதல்ல குளிச்சுட்டு வாங்க...” அவனைக் கலைத்தாள்.

“ஏய்..., இப்போ எதுக்கு இப்படில்லாம் பண்றன்னு சொல்லு. பிறகு நான் கையைப் புடிச்சேன்..., முத்தம் கொடுத்தேன்னு கண்ணைக் கசக்குவ...” அவனுக்கு மறைத்து எல்லாம் எதுவும் பேசத் தெரியாதே, எனவே நேராகவே கேட்டான்.

“நான் என்னவோ இந்த ரூமுக்குள்ளே என்னைத் தொடக் கூடாதுன்னு சொன்ன மாதிரியில்ல சொல்றீங்க...” கேட்டவள், அவன் என்னவென புரிந்துகொள்ளும் முன்பே அறையை விட்டு வெளியேறியிருந்தாள்.

“ஏய்..., கயல்...” அவன் குரல் கொடுத்ததை கண்டுகொள்ளவே இல்லை.

இரவு உணவை உண்ண வந்தவனுக்கு, அமைதியாக இருப்பதே பெரும் பாடாக இருந்தது. இதுவே பழைய

ரவியாக இருந்திருந்தால், இந்நேரம் எதைப்பற்றியும் கவலைப்படாமல் என்னென்னவோ செய்திருப்பான். ஆனால் இப்பொழுது..., உணவு உண்ணக் கூட பொறுமையின்றி பரபரத்தான்.

அவள் உணவை உண்ட மறு நிமிடம் அவளை இழுத்துக் கொண்டு அறைக்குத் திரும்ப, "ஹையோ..., எல்லாத்தையும் ஒதுக்கி வச்சுட்டு வர்றேன்" அவள் சொன்னதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அறைக்கு வந்து கதவை தாழ் போட்டவன், "என்னவோ சொல்லிட்டு போன...?" கதவில் அவளைச் சாய்த்தவன், அவள் தோளை அழுத்தமாக பற்றினான்.

"ஸ்..., முரடு..., வலிக்குது..." அவன் தோளை அழுத்தமாகப் பற்றியது அவளுக்கு நிஜமாகவே வலிக்கத்தான் செய்தது.

"இதுக்கேவா...?" ஒரு மாதிரி குரலில் வினவியவன், "ம்ஹும்..., நான் சொன்னது எல்லாத்தையும் இப்போவே வாபஸ் வாங்கிக்கறேன். இதுக்கு மேலே என்னால் பொறுமையா இருக்க முடியாது..." உரைத்தவன், முரட்டுத்தனமாக அவள் இதழைப் பற்றினான்.

வலித்தாலும் அவன் செய்கைக்கு தன் இதழைக் கொடுத்தவாறு அசையாமல் நின்றாள். தன் வேகம் சற்று தணிந்தவன், அலேக்காக அவளைத் தூக்கிச் சென்று படுக்கையில் விட்டவன், வேகம் காட்ட, "ஹையோ, ஏன் இவ்வளவு அவசரம்...?" அவன் பொறுமையற்ற செய்கை அவளை இப்படித்தான் கேட்கத் தூண்டியது.

"சொல்ல முடியாது போடி..." உரைத்தவன், வேகம் கூட்ட, அவன் அதிரடியில் திணறிப் போனாள்.

"நான் என்ன ஓடியா போகப் போறேன்..., மெதுவா..." அவனை தன்னோடு இழுத்து அணைத்தவள், அவன் காதுக்குள் முனகினாள்.

“எங்கே போ பார்ப்போம்...” சவால் விட்டவன், அவளுக்கு நெருக்கமாக மாற, அவன் நெருக்கம் ஏற்படுத்திய தகிப்பில் திணறினாள்.

“முரடா...” அவனைச் சொன்ன இதழ்கள் அவனிடம் தண்டனையை பெற்றுக்கொள்ள, அந்த இரவை முடியா இரவாக்கினான்.

“இதுக்கு மேலே என்னால் முடியாது..., போங்க...” அவள் கெஞ்ச அதன் பிறகே அவளை விட்டு விலகினான்.

விலகியவன், “அதுக்குள்ளே டயட் ஆகிட்ட...” அவளைச் சீண்ட, அவன் வெற்று நெஞ்சில் குத்தியவள், “போடா...” செல்லமாக உரைக்க, அவளை தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

காலையில் கண் விழித்தவன், அவளைச் சீண்ட, “ஹையோ..., என்னால் எழவே முடியலை, உடம்பெல்லாம் வலிக்குது போங்க...” அரை உறக்கத்தில் புலம்ப, “சரி நீ தூங்கு..., எனக்கு நேரமாச்சு..., நான் கிளம்பறேன்” அவன் சொல்ல, ‘மணி பத்தா ஆகிவிட்டது?’ பதறி எழுந்தாள்.

அவள் குளிக்கச் செல்லவே, காலை உணவு சாப்பிடப் போக, “கயலை எங்கேடா காலையில் இருந்தே ஆளைக் காணோம்?” பத்மா கேட்க,

“அவளுக்கு உடம்பெல்லாம் வலிக்குதாம்..., தூக்கம் வேற வருதாம்..., தூங்கறா” அவன் சொல்ல, அவன் தலையில் நங்கென ஒரு குட்டு விழுந்தது. “ஸ்...ஆ..., யம்மாவ்...” அவன் எதிரில் பார்க்க அவரது பார்வையோ, அவனுக்கு பின்னல் நின்ற கயலிடம் செல்ல, தானும் அங்கே பார்த்தவன் திகைத்தான்.

பத்மா அங்கிருந்து அகன்றிருக்க, “நான் இப்போ உன்னை எதுவுமே பண்ணலியே, பிறகு ஏன்...?” அவன் தலையைத் தடவியவாறே கேட்க, “பேசாமல் சாப்ட்டு கிளம்புங்க...,

உங்களை வச்சுகிட்டு...” அவள் கிச்சனுக்குச் செல்ல, அவளை நெட்டி முறித்தார் பத்மா.

அப்பொழுது அங்கே பல்லவி வர, “அண்ணி..., அண்ணா போன் பண்ணானா?” அவன் கேட்க, அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

“இந்த பயலுகளே இப்படித்தான் அண்ணி..., உங்களை லவ் பண்றப்போ எல்லாம், தினமும் ஒரு நேரமாவது உங்களை பாக்கணும்னு உங்க வீட்டையே சுத்தி வந்தான். ஆறு வருஷமா லவ் பண்றான். அவ்வளவு ஏன்..., வியாதி வந்தால் கூட பல்வலிதான் வரணும்னு சொல்ற அளவுக்கு கிறுக்கா இருந்தான்.

“இப்போ நீங்களே பொண்டாட்டியா வந்த உடனே எப்படி முறுக்கிட்டு அலையிறான் பாத்தீங்களா? அவன் வந்தால் அவன்கிட்டே பேசாதீங்க, நல்ல சுத்தல்ல விடுங்க. ஏதாவது டிப்ஸ் வேணும்னா கயல் கிட்டே கேளுங்க..., அதில் எல்லாம் அவ கை தேர்ந்தவ...” அவன் உரைக்க,

“அங்கே என்ன சத்தம்...?” உள்ளே இருந்து குரல் கொடுத்தாள்.

“சும்மா பேசிகிட்டு இருக்கேம்மா...” பவ்யமாக குரல் கொடுக்க, அங்கே இருந்த அனைவருமே சிரித்துவிட்டார்கள்.

ஆனால் பல்லவிதான் உறைந்து போயிருந்தாள். பிரஷாந்த் தன்னை விரும்பினான் என்பதை அறிந்ததே அதிர்வென்றால்..., ஆறு வருடம்..., அவள் கல்லூரியில் சேரும் முன்பேவா?’ அவளால் நம்பவே முடியவில்லை.

“ரவி..., என்ன சொல்ற...?” அவள் அதிர்வாக வினவ,

“அவன் அதையே உங்ககிட்டே சொல்லலையா..., சரியா போச்சு. உங்க கல்யாணம் நடந்த உடனேயே

சொல்லியிருப்பான்னு நினைச்சேன்” சாதாரணமாக கேட்டவன் உணவை முடித்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

அவன் சென்ற மறு நிமிடம், தன் அறைக்குச் சென்றவள், உடனே பிரஷாந்துக்கு அழைத்தாள். வேலையின் நடுவில் அவள் அழைப்பை பார்த்தவன், ‘ஏதும் அவசரமோ…’, என எண்ணியவன், உடனே அழைப்பை ஏற்றான்.

“பல்லவி…, என்னம்மா…? அங்கே எல்லாரும் நல்லா இருக்கீங்கல்ல?” முதலில் அதைத்தான் கேட்டான்.

“மாமா, ஏன் என்கிட்டே சொல்லலை…, ஏன் சொல்லலை…?” கிட்டத்தட்ட கத்தியவள், போனில் கதறினாள்.

“என்னம்மா…, என்ன கேக்கற? எனக்குப் புரியலை…” பதறினான். அவளது அழுகை, கேள்வி…, அவன் என்னவென்று நினைக்கவாம்?

“நீ என்…னை ல…வ் ப…ப…ண்ணன்னு ஏ…ஏ…ன் சொல்லலை…” அவளால் வார்த்தைகளை சாதாரணமாக உரைக்க முடியவில்லை.

“பவி…, உனக்கு யார் சொன்னா…?” நிச்சயம் அவனைப் பற்றவளோ, அவளைப் பெற்றவளோ சொல்லியிருக்க மாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். எனவே கேட்டான்.

“பவி…, பவி… இப்போ சொல்ற…, அப்போவே ஏண்டா சொல்லலை…, அதை விடு, யார் சொன்னா என்ன? நீ என்னை லவ் பண்ணியா…?” அவளது அழுகை அதிகரிக்க, பல நூறு மயில்களுக்கு அப்பால் இருப்பவனுக்கு எப்படி இருக்கும்?

தான் பதில் சொல்லும் வரைக்கும் அவள் விடப் போவதில்லை என்பதை உணர்ந்தவன், “ஆமா…, லவ் பண்ணேன்…, பண்றேன்…, பண்ணுவேன்… போதுமா?” உடனே அவள் முன்னால் வந்து குதிக்கும் வேகம் அவனிடம்.

“நீ என்ன செய்வியோ தெரியாது. இன்னும் கொஞ்ச நேரத்தில் என் முன்னாடி நீ இருக்கணும் அவ்வளவுதான்” உரைத்தவள் போனை வைத்துவிட்டாள்.

‘அதெப்படி முடியும்...?’ எண்ணினாலும், பல்லவி அழைத்துவிட்ட பிறகு அவனால் அங்கே இருக்க முடியுமா என்ன? அடுத்து இருந்த விமானத்தைப் பிடித்து அவன் வந்து சேர்கையில் இரவாகி இருந்தது.

அவன் வரவே, “பிரஷாந்த்..., காலையில் ரூமுக்குள்ளே போனவள், வெளியே வரவே இல்லை. சாப்பிட கூட வரலை...” அவனை எதிர்கொண்டார் பத்மா.

“அம்மா, அதான் நான் வந்துட்டேன் இல்ல..., நான் பாத்துக்கறேன். நீங்க போய் தூங்குங்க...” உரைத்தவன், தன் அறைக்கு விரைந்தான்.

“பவி..., பவி கதவைத் திற...” அவன் குரல் கொடுக்க, அடுத்த நிமிடம் கதவைத் திறந்தவள், அவன் நெஞ்சில் வந்து விழுந்தாள்.

“மாமா...” அழைத்தவள், அவனை சரமாரியாக அடித்தாள். அவள் அடிகளை வாங்கிக் கொண்டவன், அதை தடுக்க கூட முயலவில்லை.

“ஏன் அப்போவே சொல்லலை..., சொல்லியிருந்தால் நான் இப்படி ஏமாந்திருக்க மாட்டேன் தானே..., எல்லாம் உன்னால்தான்..., இப்போ கூட நீயா சொல்லலை..., யாரோ ஒருத்தர் சொல்லி, நீ என்னை லவ் பண்ணது எனக்குத் தெரிஞ்சிருக்கு...” ஒரு கட்டத்தில் சோர்ந்துபோய் அவன் நெஞ்சிலே சாய்ந்து கொண்டாள்.

“எனக்கு இப்படியெல்லாம் ஆகும்னு தெரியாதேம்மா..., என் லவ்வை சொல்லத்தான் அன்னைக்கு உன்னை வெளியே கூட்டிப் போனேன். அப்போதான்...” வார்த்தைகளை முழுதாக முடிக்க வில்லை.

“என்னை அன்னைக்குதான் நீ பாத்தியா? உன்கூடவே தானே இருந்தேன், அப்போ எல்லாம் ஏன் சொல்லலை” அவன் முன்பே தன் காதலைச் சொல்லியிருந்தால், தனக்கு இப்படி ஒரு நிலை வந்தே இருக்காது என எண்ணினாள்.

“சாரி..., சாரி..., நீ என்னைவிட்டு எங்கேயும் போய்ட மாட்டன்னு நினைச்சுட்டேன், அதான் சொல்லலை..., என் அம்மா, அத்தை எல்லாருக்கும் விஷயம் தெரிஞ்சப்போ எவ்வளவு சந்தோஷப் பட்டாங்க தெரியுமா? ஆனா, உன் விஷயம் தெரிந்த பிறகு, யாரும் உன்கிட்டே எதுவும் சொல்லக் கூடாதுன்னு நான் அவங்ககிட்டே சத்தியம் வாங்கிட்டேன்.

“எந்த காலத்திலும் அது உனக்குத் தெரிந்து, உன் மனசுக்கு சின்ன கஷ்டம் கூட வந்துடக் கூடாதுன்னு நினைத்தேன்...” அவன் சொல்ல, அவன் காதலை எண்ணி வியந்தாள்.

அவனை இறுக அணைத்துக் கொள்ள, சற்று நேரம் அவள் அணைப்பில் கட்டுண்டு நின்றான். சற்று நேரம் செல்ல, அவள் காலைமுதல் பட்டினியாக இருக்கிறாள் என்பது நினைவிற்கு வர, அவளை விலக்க முயன்றான்.

அதை உணர்ந்தவள், அவனை விட்டு விலகாமல், இன்னும் அவன் நெஞ்சில் புதைய, “உனக்கு பசிக்கும்..., வா சாப்பிடலாம்...” அவளை அழைத்தான்.

“இல்ல..., எனக்கு உன்னோட சேர்ந்து வாழணும் மாமா..., இப்போவே..., வாழணும். உன்னை சகிச்சுக்க முடியுமான்னு கேட்டல்ல? எதுக்கு சகிச்சுக்கணும்? நீ என் மாமா..., எப்பவுமே எனக்கு நீ ஸ்பெஷல் தான்” அவனை விட்டு விலக மறுத்தாள்.

அதற்குமேல் அவனால் அமைதியாக இருக்க முடியுமா என்ன? கணவனாக உரு மாற..., ஒரு அழகான தாம்பத்யம் மலர்ந்தது அங்கே. அவர்கள் கூடிக் கழித்தபின், “உனக்கு என்மேல் கோபமே இல்லையா மாமா?” அவனிடம் கேட்க,

“நீ உன் வாழ்க்கையை முடிச்சுக்க பாத்தப்போ எனக்கு உன்மேல் ரொம்ப கோபம் வந்தது. எப்படி உன்னால் முடிந்தது...? அந்த அளவுக்கு நீ...” அவன் வாயை மூடியவள், “நான் அதுக்காக அந்த முடிவை எடுக்கலை. அப்படி ஒருத்தன் ஏமாத்துற அளவுக்கு இருந்திருக்கேனே என்று எனக்கே என்மேல் கோபம்...,

“அந்த அம்மா என்னை அப்படி பேசுச்சே..., அதை தாங்கிக்க முடியாத வருத்தம். என்னைப் பெத்தவங்களுக்கு இப்படி ஒரு மனக் கஷ்டத்தை கொடுத்துட்டனேன்னு வருத்தம்..., இனிமேல் ஒவ்வொரு நாளும் என்னைப் பாத்து அவங்க அழுவாங்களே என்ற பயம்.

“இது எல்லாம் ஒண்ணா சேந்துதான் அப்படி ஒரு முடிவை எடுக்க துணிஞ்சேனே தவிர, நீ நினைக்கிற மாதிரி இல்லை...” அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டாள்.

“நீ ஏன் அத்தை வீட்டுக்கு போக மாட்டேங்கற...? மாமாவும் அத்தையும் ரொம்ப வருத்தப் பட்டாங்க...” அவன் சொல்ல,

“நாளைக்குப் போகலாம்...” அவள் உரைக்க, ‘நாளைக்குப் போகலாம்னா..., இவ என்ன சொல்றா...?’ ஒரு நொடி சிந்தித்தவன், சட்டென விஷயம் புரிய, “பவி...” அவளை நம்ப முடியாமல் அழைத்தான்.

“ஆமா, உன் கூட வாழாமல் அங்கே வரக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க. அதான் போகலை...” சின்னக்குரலில் உரைக்க, தன் அத்தையை எண்ணி வியந்தான்.

மறுநாள் காலையில், குடும்பத்தோடு அனைவரும் கோவிலுக்குச் செல்ல, அங்கே செல்வத்தின் தாய் சன்னிதானத்தின் முன்னால் அழுது புலம்பியவாறு நின்றிருந்தார்.

மகனது வாழ்க்கை இப்படியாகிப் போனதே என்ற கவலை அவரை உருகுலைத்திருக்க, ஆளே அடையாளம்

தெரியாமல் மாறிப் போயிருந்தார்.

செல்வத்தை, இந்திய எம்பஸி வழியாக மீட்கலாம் என்றால், அவன் செய்த செயலுக்கு அதற்கும் வழியின்றி போனது. இனிமேல் தன் வாழ்நாளில் அவனைக் காண முடியுமோ, முடியாதோ என்பதே அவருக்குத் தெரியவில்லை.

பிரஷாந்தின் குடும்பம் அங்கே வருவதைப் பார்த்தவள், அவர்கள் முன் நிற்க முடியாமல், அடுத்த நொடி அங்கே இருந்து வெளியேறினார். “கடவுள் இருக்கார் இல்ல மாமா...?” அவள் கேட்க,

“அண்ணி..., உங்க பக்கத்திலேயே இருக்கார்...” ரவி வேகமாக உரைத்தான்.

அவன் சொல்வது புரியாமல், “என்ன...?” அவள் கேட்க, “ஒரு பொண்ணுக்கு புருஷன் தானே அண்ணி தெய்வம் அதைச் சொன்னேன். என்ன இந்த பொம்பளைங்க சாமியவே கால்ல விழ வச்சுடுறாங்க அதான்...” அவன் சோகம்போல் உரைக்க, அவன் விலாவில் இடித்தாள் கயல்விழி.

அனைவரின் முகங்களும் புன்னகையை பூசிக்கொள்ள, கருவறையில் கடவுளும் அவர்களைப் பார்த்து புன்னகைத்தார்.

சுபம்.